www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 10/00

දිනමුරසු වාරමලර් ஏப்ரல்.09-15.1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 97

## அரசியல் தீர்வில் சதுரங்கம்!

# அஷ்ரப் யார் பக்கம்?



எக்ஸ்ரே ரிப் போர்ட்

## பிரபாவின் கடிதமும் திரிபான செய்திகளும்

குஷ்பூ அலை மீண்டும்?

அதிரடி அரசியல் தொடர்



வர்ணப் படங்களோடு சினி விசிட்

## கென்னடியும் அவர் காதலிகளும்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## பராவின் சறுக்கல்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
மட்டக்களப்பு பா.உ.பரராஜசிங்கம்
பண்பாளர்தான்-படித்தவர்தான்.
பழகவும் இனியவர்தான்.

தேனக மக்களின்
அன்றாடப் பிரச்சனைகளில்
அக்கறை காட்டுகிறவர்;
உள்ளவர்களிலே இவர் பறவாயில்லை,
என்ற வகையிலேதான்
சென்ற தேர்தலிலே
செல்வாக்குப்பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் அட்டகாசம்
எல்லை மீறியதால் ஏற்பட்ட
வெறுப்பும்
பராவுக்கு சாதகமாக அமைந்தது.

மலையை அசைக்க முயன்றாலும் சரி,
ஒரு துரும்பை அசைத்தாலும் சரி
அதனை உடனடியாக
பத்திரிகைகளுக்கு தெரிவித்து
செல்வாக்கை செழிப்பாக்கும்
சறுசுறுப்பான
கை தேர்ந்த அரசியல்வாதி
திரு.பரராஜசிங்கம்.

தேர்தல் நேரத்தில் அந்தப்
பத்திரிகைச் செய்திகளையே
கத்தரித்து சுவரொட்டி தயாரிக்கும்
பிரசார உத்தியிலும்
பரா சிறந்த திறமைசாலி.

அரசின் தலைவர்கள் முதல்
சக அரசியல் கட்சியினர்வரை
சகலரோடும் மனம் நோகாமல்
பழகுவதில் வல்லவர்.

அதனால்தான்-
அவசரகால சட்டத்தை எதிர்த்து
பத்திரிகைச் செய்திகளுக்காக
காரமாகப் பேசினாலும்கூட
ஆளுவோரின் மனம் நோகாதிருக்க
வாக்களிப்பு நேரத்தில்
எதிர்ப்பு தெரிவிக்காமல்
அவசர வேலையாக
ஆள் மறைந்துவிடுவார்.

இதையெல்லாம் ஏதோ
கசப்பில் உரைப்பதாக
யாரும் கருதிவிட வேண்டாம்.

சென்ற தேர்தலில்
எந்தப் பத்திரிகையும்
செய்யாத அளவில்
கூட்டணியின் வெற்றி வாய்ப்பை
கணித்துச் சொன்ன பத்திரிகை
முரசு மட்டுமே.

"கிழக்கில் திரு.பரா வெல்லுவார்;
கூட்டணி அலை வீசுகிறது"
என்று முரசு
முன்கூட்டியே தெரிவித்திருந்தது.
ஆக, விரோதம் காரணமாக
சேறு வீசுவதோ
ஆதாரமில்லாமல்
எவரது பெயரையும்
சேதாரம் செய்வதோ
முரசின் வழக்கமல்ல.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்ட
அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில்
தமிழை மறந்தார் பரா!
தமிழை மறந்தார் ஹிஸ்புல்லா!
இருவரும் இணைத் தலைவர்கள்.

ஹிஸ்புல்லாவைவிட
திரு.பராவுக்கு பொறுப்பு அதிகம்.
தனிச் சிங்கள சட்டத்தை
எதிர்த்த கட்சி;
தமிழுக்கு ஆட்சி மொழி
அந்தஸ்து கோரி
பலரை இரத்தம் சிந்த வைத்து
அகிம்சைப் போர் நடத்திய கட்சி;
அதன் பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ் பேசும் மக்கள் பூமியில்
தமிழை மறந்து
அந்திய மொழிக்கு
அரியணை கொடுக்கலாமா?

தமிழுக்கு சம அந்தஸ்த்து;
தமிழ் புறக்கணிப்புக்கு எதிர்ப்பு
என்று ஆவேசமாக பேசுவதும்
அரசியல் செல்வாக்கை
உயர்த்தும் தந்திரமோ?
என்று சந்தேகம் வருகிறது.

இராணுவ அதிகாரியின்
மனம் புண்படக்கூடாது என்பதற்காக
தமிழ் பேசும் தாயகத்தின்
ஆட்சி மொழியை அவமதிக்கலாமா?
'அரசை வீழ்த்த தயங்கோம்'
என்று முழங்கும் பரராஜசிங்கம்
அரச இராணுவ அதிகாரியை
உச்சி குளிர வைக்க நினைத்தது
அற்புதமான வேடிக்கையல்லவா?

பேச்சை பார்க்காமல்
செயலைக் கவனிக்க மக்கள்
ஆரம்பித்துவிட்ட காலம் இது.
அரசியல்வாதிகளே! கவனம் தேவை!
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## குழந்தைகளாக மாறுவோம்

"சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்" என்றார் இயேசு கிறிஸ்து. எனவே, அப்படிப்பட்ட சிறு பிள்ளைகளைப் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

கறைபடியாத உள்ளமும் கனிவான மனமும் கொண்டு வாழும் பிள்ளைகளை இந்தச் சமூகம் தான் கெடுக்கிறது. தூய்மையான வெள்ளைத்தாள் போன்ற அவர்களின் மனத்தில் கறைபடிந்த சில கிறுக்கல்களை செய்வது இச்சமூகமும் சுற்றமும் சூழலும்தான்.

"உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; நீங்கள் குழந்தைகளாக மாறாவிடின் விண்ணகத்தில் நுழைய மாட்டீர்கள். எனவே, இக்குழந்தைகளைப் போல தன்னைத் தாழ்த்திக் கொள்கிறவன் எவனோ அவனே விண்ணரசில் பெரியவன்." **(மத்தேயு: 18:3-4)**



இதுமட்டுமல்ல சிறுவர்களைக் கெடுப்பவர்களுக்கும் இயேசு சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சிறுவர்களின் உளளத்தில் சீரானவைகளை விதைக்காமல் தீமைகளை விதைப்பவர்கள் பற்றி என்ன கூறுகிறார் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆம்-

"இச்சிறுவருள் ஒருவனுக்கு இடறலாய் இருப்பவன் எவனோ, அவன் கழுத்தில் ஒரு பெரிய எந்தரக் கல்லைத் தொங்கவிட்டு நடுக்கடலில் அவனை ஆழ்த்தி விடுவது அவனுக்கு நலம்." **(மத்:18:6-7)**

ஆம்-இன்றைய காலகட்டத்தில் நாம் சிந்திக்க வேண்டியதொன்று-எனவே, நாமும் குழந்தைகளாக மாறி, தூய உள்ளத்துடன் தூயவனுக்குப் பணிசெய்வோம். குழந்தைகளைப்போல் நமமை நாம் தாழ்த்திக் கொண்டு, இறைவன் முன்னால் 'பெரியவர்'களாக வாழ்வோம்.

ஏ.பி.வி.கோமஸ்.

## இருவரில் சிறந்தவர் யார்?

இமாம் ஸஃதி இடத்தில் ஒரு மனிதர் வந்து கேட்டார்- ஓர் பணக்காரன் தன் சொத்துக்களை எல்லாம் பாதுகாத்து வைத்துக் கொள்கிறான். அவன் தன்னிடம் இருக்கும் பணத்தில் பிறருக்கு உதவி செய்வது இல்லை. ஆனால் அல்லாஹ்விடம் இருந்து தனக்கு நன்மை கிடைப்பதற்காக தினமும் குர்ஆன் ஷரீபு, ஸலவாத்து ஆகியவற்றை அதிகமாக ஓதுபவனாகவும், வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு நோன்பு நோற்பவனாகவும் இருக்கிறான்.

மற்றும் ஒருவர்-அல்லாஹ்விடம் இருந்து அருளைப் பெறுவதற்காக தன் செல்வத்தில் இருந்து ஸக்காத்து, ஸதகா போன்ற எல்லா தான தர்மங்களையும் செய்பவராகவும் இருக்கிறார். இவர்கள் இருவரிலும் அல்லாஹ்விடத்தில் மேலானவர் யார்? என்று கேட்டார்.

அதற்கு இமாம் ஸஃதி பின்வருமாறு கூறினார்கள்:

ஈயாத கஞ்சன் எவ்வளவுதான் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு குர்ஆன் ஷரீபு, ஸலவாத்துக்களை மொழிந்தாலும் அவன் செல்லும் இடம் நரகமே.

தர்மம் செய்யும் வணக்கவாளி அல்லாஹ்விடத்தில் மேன்மைப் படுத்தப்படுகிறார். அவர் போகும் இடம் சுவர்க்கமே இருவரில் சிறந்தவர் இரண்டாமவர் என்று பதிலளித்தார்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-94

### பரிசுக்குரிய கவிதை

### பத்திரமாய்ப் பறிக்கின்றேன்

**ஆணுழைத்து ஆவதென்ன?
அடுக்களைக்கே போதாது!
நானுழைத்தும் கிட்டாது
போசாக்கு நல்லுணவு!
சித்திரைக் கேனும் ஒருநாள்,
சிரித்திருக்க இக் கொழுந்தைப்
பத்திரமாய் நானும்
பறிக்கின்றேன் பணமாக்க!**

க.சுசீலா-கல்லடி-மட்டக்களப்பு.

### சிறக்காதோ....?

நாடற்றோரென்று சொல்லும்
நாட்டுக்கே தீனி போட்டு
ஓடாகிப் போகும் இவர்தம்
வாழ்வாதல் சிறக்காதோ?

ஏ.அஹமது ஜுனைது- ஏறாவூர்-06.

### இயந்திரங்கள்

அட்டைக் கடியும் அதிகார
ஆளுமையும் பெற்றுழைக்கும்
எட்டுமணி வேலைக்கார
எஃகு இயந்திரங்கள்

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### எப்போதும் உண்மை

இலங்கை மகள் ஈன்றெடுத்த
எம்மினத்தின் உடன் பிறப்பு
இயந்திரம் போல் வேலை செய்யும்
எழுச்சியினை மறவோம்
இவளாலே செல்வங்கள்
எம் நாட்டில் குவியும்
இன்றல்ல நேற்றல்ல
எப்போதும் உண்மை

அம்பிளாந்துறை-அரியரன்.

### நிறையாத வயிறு

இந்தக் கூடை
நிறையாவிட்டால்
எங்கள் குடும்ப
வயிறு நிறையாது.

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

### நிமிர்வது எப்போது?

குனிந்து குனிந்து
தேசம் நிமிர்த்தியும்
குனிந்து கொண்டே
போகிறாயே!
நீ...
நிமிர்வது
எப்போது?

அ.பவானி-மாத்தளை.

### தேடல்

நூறு நூறு ஆண்டுகளாய்
விடிவுகளைத் தேடுகிறோம்.
ஆனால்,
கொழுந்துகளைத் தவிர
வேறொன்றும் கிடைப்பதில்லை.

எம்.என்.எம் நஸ்மி அக்குறணை-03



### கொடுமை!

மலையிலே அன்னை-இங்கே
மடுவத்தில் பிள்ளை!
இலங்கையின் நிலையை-மேலும்
ஏற்றிட உழைக்கும்
மலை மக்கள் நிலமை-இன்னும்
மாறாத கொடுமை!

செ.குணரத்தினம்
மட்டக்களப்பு.

"உடல் வியர்வையில் நாளும் உங்கள் உழைப்பு
உயர் தேயிலையை உன்னதமாக்கிய திழைப்பு-இருந்தும்
குடல் சுருங்கி அரைகுறையில் உணவுக் குறைப்பு இன்னும்
குடியுரிமையில்லாத கோரமும் உங்கள் தவிப்பு."

அமிர்த-சந்திரபாலன்-திருகோணமலை.

### நாடற்றோர்

தேயிலைக் கொழுந்தைக் கிள்ளி
தேசிய வருமானத்தை
அள்ளிக் கொடுத்திடும் எங்களுக்கு
தேசம் தந்த பட்டம்
நாடற்றோர்!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

### நிரம்பும்!

கொழுந்துகளால்
கூடை நிரம்பும்!
துயரங்களால்
நெஞ்சம் நிரம்பும்!

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

### உள்ளங்கவர் கள்ளி

கொழுந்தை கிள்ளும் கள்ளியே-என்
குழந்தை உள்ளத்தை கிள்ளினால் என்ன?

ராதா கிருஷ்ணா-மட்டக்குளி.

### நம்பிக்கை

இடியாய் சூழ்ந்த மிடிகண்டும்
இன்றும் என்றும் கலங்காது
ஒளிர்வாய் ஓர்நாள் வருமென்று
உலகில் நம்பி வாழ்கின்றோம்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### எப்படி உழைத்தபோதும்..!

வளம் பெற
உழைத்தபோதும்
உயர்வது
வாழ்க்கையின் தரமல்ல
வறுமையின் பாரம்!

ஹப்புத்தளையூர்
எப்.லெனாட்குமார்.

### வாசமில்லா மலர்கள்

வாசமுள்ள
தேனீருக்காய்
வாழ்வையே
அர்ப்பணித்த
வம்சங்களின்
வாழ்வில்
இன்னும்
வசந்தமில்லையே!

வை.சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு-01.

### நாட்டின் முதுகெலும்பு

நாட்டின் முதுகெலும்பாய்
நாளெல்லாம் உழைத்தாலும்
வீட்டில் அடுப்பெரிய
வேதனம் போதாது
காட்டை வெட்டிக் களனி செய்த
கண்ணான வர்க்கமிதன்
வாட்டும் துயர் துடைத்து
வளமாக்கும் நாள் வாராதோ!


றோஸ்மலர் ஜமுனானந்தா
வந்தாறுமூலை.

### சாது நீ மிரண்டு விடு

ஓட்டுக்கு மட்டும் நீ!
உரிமைக்கு இல்லையென
ஒதுக்கி வைத்த போதும்,
உண்மை உணராமல்
உழைக்கின்ற உத்தமியே
சாது நீ மிரண்டு விடு
சமத்துவம் கிடைத்திடவே.

எஸ்.சிவசாமி செல்வராஜ்
பூண்டுலோயா.

## கவிதைப் போட்டி இல-97



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.04.95

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 97
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

**அரசியல் விமர்சனங்கள் அபாரம். புகைப்படம் வெளித் தோற்றத்தை மட்டும்தானே காட்டும். எக்ஸ்ரே உள்ளே உள்ள குறை-நிறைகளையும் தெரியச் செய்யும். அதுபோல முரசின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும்.**

அ.மங்களேஸ்வரன்-அக்கரைப்பற்று.

**புத்துணர்வு பெற்றிடுவோம்!**

தேன் தமிழ் தினமுரசே!
உள்ளும் புறமும் உனக்கு வண்ணங்கள்
உன்வதனமோ செய்தித் தலைகளுடன்
தேன் கிண்ணங்கள்
எண்ணங்கள் பல விதம் உடன்
யாவும் எழில் நடையில் சுவையுடன்
உலக அதிசயங்கள் ஓடிவரும் உன்னிடம்
அவை உள்ளபடி உண்மை தரும் எம்மிடம்.

க.பகீதரன் சகோதரர்கள்-சென்றல் காம்ப்.

□□

மக்சீம் கார்க்கியின் தாய், தமிழக எழுத்தாளரின் மகாசூலம் ஆகிய தொடர்கள் வாரந்தோறும் வாசகர்களாகிய எம்மை அசத்துகின்றன.

பஹ்மி-பாவற்குளம்.

□□

முரசே நீ தரும் முத்தான 'தாய்' தொடர்கதை எனக்கு முழு மன நிறைவைத் தருகிறது. மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் நல்ல தொடர் கதைகளை நீ இன்னும் தர வேண்டும். உன் வளர்ச்சிக்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

பி.எம்.எம்.ஏ.காதர்-மருதமுனை.

□□

என் கலை முரசே,

நீ வாரம் ஒருமுறை வந்து என் அறிவிற்கு விருந்தளிக்கிறாய். சுவை, உணர்ச்சி, இனிமை அனைத்துமே உன்னில் கலந் துள்ளன. உனக்கு நிகர் நீயேதான்.

க.செல்வராணி-அவிசாவளை.

□□

என் இனிய முரசே!

மக்சீம் கார்க்கியின் 'தாய்' நாவல் தொடர் விறுவிறுப்பாக அமைந்து செல்கின்றது. மேலும், தொடர்கதைகள் ரசிகன் தரும் இலக்கிய நயம், தகவல்பெட்டி என்பனவும் பிரமாதமாக உள்ளன. என் முரசிற்கு வாழ்த்துக்கள் பலகோடி! பலகோடி!

எம்.எஸ்.குட்டிகைஸ்-கிண்ணியா-05.

'தாய்' தொடர்காவியம் மூலம் முரசின் தரம் உயர்ந்துள்ளது. நம் நாட்டு எழுத்தாளர்களது கை வண்ணங்களும் வியக்கவைக்கின்றன.

புதுப்புயல்- புத்தளம்.

□□

அன்பின் முரசே!

என் இதயத்தை உன்னிடம் தந்து விட்டேன். நீ தரும் சுவை மிக்க தேன் கிண்ணம், பாப்பா முரசு, மக்சீம் கார்க்கியின் 'தாய்' தொடர் என் இதயத்தை கவர்ந்து விட்டன. அதிலும் சினிவிசிட் சூப்பர் ஹிட். "ஹலோ! முரசே நீ என் காதலன். ஆகவே உனக்கு ஐ லவ் யூ..

சிவராஜா, மிஸிரியா-காத்தான்குடி-06.




□□

அன்பின் முரசே!

அரசியல் அலசல் அதோடு ரசிகனின் இலக்கிய நயம் சூப்பர். தேன்கிண்ணம் தந்து மலரில் வண்டு போல் ஈர்க்கிறாய். உனக்கு என்ன ஈர்ப்பு சக்தி உண்டா?

இ.ஜீவராஜா-எருவில் தெற்கு.

□□

வாசகர்களாகிய எமக்கு ஒரு பொக்கிஷமாக வந்த தேன்முரசாம் தின முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களையும் எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் அதிரடி அய்யாத்துரை படு சூப்பர்.

முகமட் ஹமீஸ்-அக்குறணை.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# "இந்தியா செய்த தவறை சந்திரிக்கா செய்யக்கூடாது"

## ஜனாதிபதியின் அணுகுமுறைகள் குறித்து புலிகள் கருத்து

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பின் பிரசார சாதனங்கள் ஜனாதிபதி சந்திரிக்கா மீது சந்தேகம் தெரிவித்து செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றன. 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை ஜனாதிபதி சந்திரிக்கா சமாதானத்தைப் பற்றி பேசியபடி போருக்கு தயாராவதாகச் சித்தரிக்கும் கருத்தோவியங்களை (கார்டூன்) வெளியிட்டள்ளது.



"விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் வெளியான கார்ட்டூன்

## சந்திரிக்கா மீது சந்தேகம் தெரிவித்து கட்டுரைகள்-கார்டூன்கள்

அரசுக்கும்-ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் எதிரான பிரசாரப் போரை வடக்கில் புலிகள் பாரியளவில் ஆரம்பித்துள்ளனர்.

'சந்திரிக்காவின் சமாதானம்' என்ற தலைப்போடு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது.

அதில், ஜனாதிபதி மீது மிகவும் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

அக்கட்டுரையின் இறுதிப் பகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது; (சில சொற்களை நீக்கியுள்ளோம்)

"ஆறு மாதங்கள் போயின. சமாதானச் சாயம் கரைந்து......தெரிந்தது. தமிழன் விழித்துக் கொண்டான். சந்திரிக்காவும், மந்திரிகளும் பேரினவாதத்தின் புத்திரர்களே. தமிழன் உணர்ந்து கொண்டான். பேச்சுவார்த்தை என்பதெல்லாம் பேய்க்காட்டும் தந்திரமா? இனி அவன் ஏமாற மாட்டான். ஏமாந்து போய் வீழான். இது பிரபாகரனின் காலம்.

### கோமா நிலை

அரசுக்கும்-புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு கோமா நிலைக்கு சென்றுவிட்டது. இதில் சோகம் என்னவென்றால் பேச்சின் ஆரம்ப கட்டமே பயங்கர தோல்வியில் முடிந்திருப்பதுதான்."

இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

### இந்தியா படித்த பாடம்

புலிகளது 'ஈழ நாதம்' தினசரி 03.04.95 அன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் ஜனாதிபதி மீது குற்றம் சாட்டியுள்ளது.

அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"உலக வரலாற்றையும், அதில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்கள் பற்றியும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா தப்பாகவே விளங்கிக் கொண்டுள்ளார்.

இதே போன்று விடுதலைப் புலிகள் பற்றியும் அவரது நிலைப்பாடு உண்மை நிலவரத்திற்கு மாறாகவே உள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா புலிகளை தவறாக மதிப்பீடு செய்தால் அது மிகப் பெரிய தவறாகவே முடியும். கடந்த காலத்தில் இந்தியாவும் இவ்வாறான தவறையே செய்தது.

புலிகளும், தமிழ் மக்களும் இந்தியா மீது காட்டிய நட்பை இந்தியா பலவீனமாகக் கருதியது. இதனாலேயே இந்தியா அவமானகரமாக தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறியது. இந்த வரலாற்றுப் படிப்பினைகள் தவறுகள் நிகழாது இருக்க வழிவகுக்க வேண்டும்." இவ்வாறு 'ஈழ நாதம்' பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம் தெரிவிக்கிறது.

### நடுநிலை தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"அதிகாரத்தனம் சமாதானம் காண்பதற்கு உதவப் போவதில்லை. சமரசப் பேச்சுத் தொடர நடுநிலையான போக்குத் தேவை. ஜனாதிபதி சந்திரிக்கா இதை எப்போது உணரப் போகிறார்?"

என்று கேள்வி எழுப்பியுள்ளது உதயன் பத்திரிகை

ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியா சென்று வந்த பின்னர் யாழ் குடாநாட்டில் புலிகளது அதிருப்திப் பிரசாரம் அதிகரித்துள்ளது.

---

## நாங்கள் கேட்டதையே புலிகளும் கேட்கிறார்கள்

### முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் தொண்டா-சிவா மோதல்!

### "சிவாவின் உரையில் தவறான உரிமை கோரல்"

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் 13வது தேசிய மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.தொண்டமான் உரையாற்றினார்.

அவரது உரையில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரத்தை சூடாக்கிவிட்டன.

மாநாட்டில் உரையாற்றிய மு.சிவசிதம்பரம்' திரு.தொண்டமானின் கருத்துக்கு காட்டமாகப் பதில் கொடுத்தார்.

"இங்கே கூட்டணி பற்றி தேவையில்லாத பேச்சுக்கள் வந்தன. திரு.தொண்டமான் ஏதோ கூறினார். தமிழ் பேசும் மக்களது பிரச்சனைக்கு சமஷ்டி மூலமே தீர்வு என்று முதன் முதலில் தெரிவித்தது கூட்டணியே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது புலிகளும் சமஷ்டி கேட்கிறார்கள்."

என்று கூறினார் திரு.சிவசிதம்பரம்.

மேலும் அவர் தனதுரையில் இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, சமஷ்டி பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. அதிகாரப் பரவலாக்கம் பற்றியே பேசினார். சமஷ்டியும் அதிகாரப் பரவலாக்கலும் வெவ்வேறு விடயங்களாகும். இனப் பிரச்சனைக்கு சமஷ்டியே தீர்வாகும்." என்றும் திரு.மு.சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இதே வேளை மாநாட்டில் கலந்து கொண்ட கட்சிப் பிரதிநிதி ஒருவர் திரு.சிவாவின் உரைபற்றி முரசிடம் கருத்துத் தெரிவித்த போது,

"தமிழரசுக் கட்சி சார்பாக தந்தை செல்வநாயகம் சமஷ்டி கோரியபோது திரு.சிவசிதம்பரம் தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்தார். அமரர் ஜி.ஜி.பொன்னம்பலமும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் சமஷ்டிக் கோரிக்கையை 'சமஷ்டிக் கோரிக்கை' என்று கேலிசெய்தனர், என்பதை நினைவு கூர்ந்தார்.

தமிழர்களது பிரச்சனைக்கு 'தமிழ் ஈழமே' தீர்வு என்பதுதான் கூட்டணியாக மாறியபின்னர் முன்வைத்த தீர்வாகும். புலிகள் 'த்ன்னாட்சியுடைய சமஷ்டி' பற்றிப் பேசிய பின்னரே கூட்டணி தற்போது சமஷ்டித் தீர்வை முன்வைத்துள்ளது. எனவே சிவா கூறியது சரியல்ல என்றும் அந்தப் பிரதிநிதி 'முரசு' நிருபாரிடம் தெளிவுபடுத்தினார்.

---

## மட்டக்களப்பில் விசாரணை ஆணைக்குழு!

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு-கிழக்கிலிருந்து கடந்த காலத்தில் கடத்தப்பட்ட, அல்லது காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மேற்படி சம்பவங்கள் தொடர்பாக விண்ணப்பித்தோரின் முறைப்பாடுகளை ஏப்ரல் 24ம் திகதி தொடக்கம் மே 5ம் திகதி வரை, மட்டக்களப்பு வில்லியம் ஓல்ற் மண்டபத்தில் விசாரணை செய்யவுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக தமது முறைப்பாடுகளை விண்ணப்பித்தோரின் சாட்சியங்கள் இங்கு நேரடியாகப் பதிவு செய்யப்படும். மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்றுக் கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

ஒய்வு பெற்ற நீதியரசர் திரு.கே.பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடாத்தும்.

---

## ஜனாதிபதியின் பத்திரிகையாளர் மாநாடு

### புலிகள் அதிருப்தி!

### 'சுட்டிக்காட்டிய பின்னும் ஆயுதக்குழு என்று கூறுவதா?"

ஜனாதிபதி சந்திரிக்கா சமீபத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளை "ஆயுதக் குழு" என்று கூறுவதில் தவறு இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

கடந்த 28.03.95 அன்று புலிகளது தலைவர் பிரபாகரனால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தம்மை 'ஆயுதக் குழு' என்று அழைப்பது தவறு எனக் கூறியிருந்தார்.

அதன் பின்னரும் ஜனாதிபதி புலிகளை ஆயுதக் குழு என்று குறிப்பிட்டமை புலிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட 'புலிகளின் குரல்' வானொலி "தலைவர் ஏற்கெனவே கடும் ஆட்சேபத்தை தெரிவித்த போதும் ஜனாதிபதி புலிகளை 'ஆயுதக் குழு' என்று கூறியுள்ளார்." எனத் தெரிவித்துள்ளது.

---

## பிரபாவின் கடிதமும் திரிபான செய்திகளும்

செய்திகளை உள்ளபடியே தெரிவிப்பதுதான் செய்திச்சுதந்திரம் புலிகள் என்ன சொல்கிறார்கள், அரசு என்ன சொல்கிறது போன்ற விடயங்கள் திரிபில்லாமல் சொல்லப்பட வேண்டும்.

உதாரணமாக, கடந்த 17.03.95 இல் ஜனாதிபதிக்கு புலிகளது தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதத்தில் 'காலக்கெடு' விதித்திருந்தார். இதனை பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. முரசும் அதில் அடக்கம்.

ஆனால் திடீரென்று அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் சில காலக்கெடு விதிக்கப்படவில்லை. அது தவறான தகவல் என்று உண்மைக்கு மாறாக பேச ஆரம்பித்தன.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜனாதிபதியே தனது கடிதத்தில், புலிகள் 'காலக்கெடு' விதித்ததை தவறான செயல் என்று பிரபாவிடம் ஆட்சேபித்திருந்தார்.

28.03.95இல் ஜனாதிபதிக்கு பிரபா எழுதிய பதில் கடிதத்தில் 'காலக்கெடு விதிப்பது எமது உரிமை' என்று கூறியிருந்தார்.

"கடிதத்தை எழுதியவரும் சொல்கிறார். படித்தவரும் சொல்கிறார். ஆனால் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் சில இல்லை, என்று வாதாடி ஏன் மூக்குடைபடுகின்றன.

'காலக்கெடு' பற்றி செய்தி முரசிலும் வெளிவந்தது என்ற அடிப்படையில் நாம் சொல்வது யாதெனில், செய்திகள் விடயத்தில் நம்பகத்தன்மைக்கு பாதகம் ஏற்படும் விதத்தில் முரசின் செய்திகள் அமையாது.

---

## கட்சித் தலைவர் மீதே சந்தேகமா?

### ஜனாதிபதியின் பாதுகாவலர்கள் மீது பாய்ச்சல்!

சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மாநாடு கடந்த 02.04.95 அன்று கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்றது.

மாநாட்டில் கலந்துகொள்ள ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் நடராஜா ஆகியோர் சென்றிருந்தனர்.

மாநாட்டு அரங்கில் அவர்களிடம் சென்ற ஜனாதிபதியின் பாதுகாவலர் ஒருவர் "ஆயுதம் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"மாநாட்டுக்கு பலர் வந்துள்ளனர் எம்மிடம் மட்டும் ஏன் கேட்கிறீர்கள்? என்று கேள்வி எழுப்பிய டக்ளஸ் தேவானந்தா, உமது கேள்விக்கு பதில் சொல்ல முடியாது" என்று கூறினார். அதன்பின்னர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சென்று "உங்களிடம் ஆயுதம் இருக்கிறது. அதனால்தான் கேட்டோம்" என்று கூறியிருக்கிறார்.

"எம்மிடம் ஆயுதம் இல்லை என்று நாம் நிரூபித்தால் உமது பதவியை நீர் ராஜினாமா செய்துவிட்டு போகத் தயாரா?" என்று அவரிடம் கேட்டதோடு இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கடுமையான ஆட்சேபத்தையும் தெரிவித்தனர்.

"பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைக்கத் தயார். ஆனால் விசேஷமாக எம்மை மட்டும் சந்தேகப்படும் நோக்கில் அணுகினால் அதற்கு அனுமதிக்க மாட்டோம்" என்று திரு.டக்ளஸ் தேவானந்தா கூறினார். இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

---

## ஓரம் கட்டப்படுகிறார் சம்பந்தன். தங்கத்துரை உறுப்பினர் திரட்டல்!

(சஞ்ஜீவன்)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உறுப்பினர் திரட்டலில் ஈடுபட்டுள்ளார் திரு.தங்கத்துரை பா.உ.

திரு.தங்கத்துரை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று திருகோணமலை கூட்டணிக்கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

"திருகோணமலைக் கிளையின் தீர்மானமும், அக்கிளையினரும் ஒரு பக்க சார்பானவர்கள். மக்களிடம் செல்வாக்கு அற்றவர்கள்" என்று தங்கத்துரை பா.உவின் ஆதரவாளர்கள் கூறிவருகின்றனர்.

தற்போது திரு.தங்கத்துரை பா.உ, கட்சி உறுப்பினர்கள் திரட்டலுக்கான படிவம் விநியோகித்து வருகிறார். கட்சியின் செயலாளர் நாயகமாக திரு.சம்பந்தன் இருக்கிறார். ஆயினும் நிர்வாகச் செயலாளருக்கே கட்சி உறுப்பினர் சேர்க்கும் உரிமை இருப்பதாக தங்கத்துரை பா.உவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

திருமலைக் கிளையின் நடவடிக்கைகளுக்கு பதிலடியாகவே தங்கத்துரை பா.உ கட்சி உறுப்பினர் திரட்டலில் தீவிரமாக குதித்துள்ளதாகத் தெரிகிறது. கட்சித் தலைமை இந்த மோதலில் மௌனம் சாதித்து விடுகிறது.

---

## திகைக்க வைத்த திடீர் அறிவித்தல்! தமிழையும் மறந்த ரி.என்.எல்.

கடந்த 02.04.95 அன்று ரி.என்.எல் தொலைக் காட்சியில் 'சத்யா' தமிழ் திரைப்படம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

திரைப்படத்தின் இடையே திடீரென்று ஒரு விசேட செய்தி அறிவித்தல் ஒளிபரப்பானது.

இலங்கைப் படத்தையும் அதில் சில கோடுகள் மூலமான குறியீடுகளையும் கொண்ட படம் பின்னணியில் இருக்க, செய்தியாளர் செய்தியை வாசிக்கத் தொடங்கிய போது, நேயர்கள் திடீர் அதிர்ச்சிக்குள்ளாகிவிட்டனர். ஏதோ தீய சம்பவம் நடந்துவிட்டதோ என்று பரபரப்படைந்தனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்கா அவர்கள் இருக்கும் அலரி மாளிகைக்குள் அனுமதியின்றி ஒருவர் நுழைந்ததுதான் செய்தி.

அதில் விசேட செய்தியறிக்கைக்கு தேவையான முக்கியத்துவம் என்ன இருந்தது என்று பலரும் பேசிக்கொண்டனர்.

'தமிழ்ப் படம்' ஒளிபரப்பான நேரத்தில் வெளியான அந்த விசேட செய்தி அறிவிப்பு ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மட்டுமே இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மனநோயாளி ஒருவரே அலரி மாளிகைக்குள் நுழைந்ததாக தற்போது கூறப்படுகிறது. மன நோயாளிக்காக நாட்டையே பரபரப்புக்கு உள்ளாக்கியிருந்தது ரி.என்.எல்.

# மட்டக்களப்பு கல்வித் திணைக்கள மர்மங்கள்

# உயர் அதிகாரி போடுகிறார் தப்புத்தாளம்

(நமது சிறப்பு நிருபர்)

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் மர்மங்களுக்கு மூலவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் இத்திணைக்கள ஊழியர்கள் திணறுகின்றனர். இதனால் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியும் பாதிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

பாடசாலைகளின் பாவினைக் காக தளபாடங்கள் திடுதிடுப்பென பெரும் தொகையாக வந்து சேர்ந்தன. இவற்றைப் பொறுப்பேற்கவோ அங்கீகரிக்கவோ தகுதியான அதிகாரி பொறியியலாளரான தேவதீபன் என்பவராகும். ஆனால் இத்தளபாடங்கள் அங்கு வந்து சேர்ந்த மர்மம் யாதெனத் தெரியாது அவர் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில், அங்கீகாரம் அளிக்கும் தகுதியற்ற ஒருவர் இவற்றை அங்கீகரித்துள்ளார். இந்த அங்கீகார ஒப்பமிடலுக்குச் சூத்திரதாரியாக இயங்கியவர் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர்தான் என்று விடயமறிந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிட்டியுள்ளது.

இந்த முறைகேடுபற்றி விசாரித்தறிய 25.03.95 அன்று மட்டக்களப்பு கச்சேரியில் றடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய சிறப்புரிமையைப் பயன் படுத்தி உண்மைகள் வெளிவராதிருக்க-விசாரணையும் திடுதிப்பென நிறுத்தப்பட்டது.

முழுமையான விசாரணை நடைபெற்றிருந்தால் பல உண்மைகள் அம்பலமாகியிருக்கும் என்று பலர் பொருமுகின்றனர்.

இவ்வுண்மைகள் வெளிவராமலிருப்பதில் பா.உ..க்களுக்கு என்ன லாபம் இருக்குமோ தெரியவில்லை!

இலங்கையின் பல பாகங்களிலும் ஒரு நேரப்பாடசாலைகளே நடைபெற்று வரும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீரென இரு நேரப்பாடசாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் தொலை தூரங்களிலிருந்து மட்டக்களப்பு நகரப் பாடசாலைகளுக்கு வரும் மாணவ மாணவிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். போக்குவரத்து சாதனங்களின் வசதி குறைவாகவுள்ள இக்காலகட்டத்தில் ஒரு நேரப்பயணத்துக்கே பெரும் இடிபாடுகள் மாணவர்கள் மட்டுமல்லாமல் பெற்றாரும் ஆசிரியர்களும் இதனால் பெரும் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்த இரு நேரப் பாடசாலைகள் திடுதிடுப்பென ஆரம்பமானதன் காரணம் என்ன என்று நமது சிறப்பு நிருபர் நடத்திய விசாரணையில் உண்மை புலப்பட்டது.

மாணவர்களுக்கு பிரத்தியேக போதனைகளை நடத்தும் 'ரியூட்டோரியல்'கள் இப்போது தெருவுக்குத் தெரு மலிந்து விட்டன. ஒரு நேரப்பாடசாலையுடன் பள்ளியிலிருந்து வெளியேறும் ஆசிரியர்கள் இந்த போதனை நிலையங்கள் மூலம் ஏராளமான பணம் சம்பாதிக்கிறார்களாம். அதே போல் இந்த நிலையங்களை நிர்வகிப்போரும் (அவர்களும் பெரும்பாலும் ஆசிரியர்கள் தான்) பெரும் பணம் கறக்கிறார்கள்.

இத்தொகையிலிருந்து கணிசமான தொகையினைத் தனக்கும் தரும்படி ஒருயர் அதிகாரி விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப் பட்டதாம். இதற்குப் பழிவாங்கலாகவே இரு நேரப் பாடசாலைகள் தொடக்கப்பட்டதாம்!

கடந்த ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பா.உவாக இருந்த அமைச்சர் தேவநாயகத்தின் தயவால், சாதாரண ஆசிரியராக இருந்து மளமளவென்று மனோரம்மியமாக பதவிகளை எட்டிப் பிடித்த ஒருவர்தான் கல்வித் திணைக்களத்தின் திடீர் மர்மங்களுக்கெல்லாம் சூத்திரதாரி என்று கூறப்படுகிறது. தானாடும் தப்பாட்டங்களின் தடம் கண்டு பிடிக்கப்பட்டதும் கூசாமல் தன் கீழ் உள்ள அதிகாரிகளின் தலையில் பழி சுமத்துவதும் அவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதும் இவருடைய வழக்கமான விளையாட்டுகள் என்கிறார்கள்.

கடந்த ஆட்சி காலத்தில் இவர் பல ஆசிரியர்களை பழிவாங்கியிருக்கிறார். அவர்கள் பல புகார் பட்டியல்களை இப் பொழுது தயாரித்து வருகின்றனராம்.

இந்த உயரதிகாரியின் ஊழல்களுக்கு இடமளிக்க மறுத்த பொறியியலாளர் திரு.தேவதீபன் அவர்களின் மனைவி, இவர் மீது பல குற்றச்சாட்டுகளைப் பட்டிய லிட்டு வடகிழக்கு மாகாண ஆளுநர் அவர்களுக்கும் அனுப்பி வைத்திருப் பதாகவும் அறிகிறோம்.

## காலம் தாழ்த்தாமல் பாலம் போடுக

(திருமலை நிருபர்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற வெருகல் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தங்கள் கிராமத்துக்கு உரிய போக்குவரத்து வசதிகள் செய்யப்படவில்லை என முரசுக்கு தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய இடங்களில் இருந்து வரும் வாகனங்கள் வாகரையுடன் நின்று விடுவதாகவும், அங்கிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரத்தை, மூட்டை முடிச்சுகளுடன் நடந்து கடந்தே தங்கள் இருப்பிடம் சேர்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூதூரிலிருந்து புறப்படும் வாகனம் கிளிவெட்டி வரை சீரான பாதையில் ஓடுவதாகவும் அங்கிருந்து வெருகல் வரை பள்ளந்திட்டிகளில் பாய்ந்து பாய்ந்து செல்வதாகவும் தெரிவித்த வெருகல் வாசிகள் பாதை திருத்தப்படாவிட்டால் பஸ் சேவை தடைப்பட்டு தாங்கள் மேலும் இன்னலுற வேண்டி வரும் எனவும் அஞ்சுகிறார்கள்.

கிளிவெட்டியில் பாலம் ஒன்று அமைக்கப்பட்டு பாதை செப்பனிடப்பட்டால் மூதூருடனான இணைப்பு பலப்படும் என்று கூறிய ஒரு முதியவர், வாக்குக் கேட்கும் காலங்களில் வரிசை வரிசையாக வந்திறங்கிய அரசியல்வாதிகளை இப்போது காணமுடியவில்லையே என்று கவலை தெரிவித்தார்.

## யுவ வருடப் பிறப்பு

சோதிட மாமணி 'தில்லை'

### திருக்கணித பஞ்சாங்கம்

14.04.95 வெள்ளிக்கிழமை காலை 10மணி 26நிமிடம் 30 நொடிகளில் மிதுன லக்கினம் அத்த நட்சத்திரம். சித்தாமிர்த யோகம், குரு கால ஓரை, பட்சி உண்டித் தொழில் செய்யும் சுப வேளையில் யுவ வருடம் பிறக்கின்றது.

### வாக்கிய பஞ்சாங்கம்

14.04.95 வெள்ளிக்கிழமை காலை 8மணி 12நிமிடம் 30நொடிகளில் இடப லக்கினம் அத்த நட்சத்திரம் சந்திர கால ஓரை, நட்சத்திரப் பட்சி சாவு தொழில், சூக்குமம் அசுரத் தொழில், சுக்கிலசதுர்த்தி திதி கூடிய சுப வேளை யுவ வருடப் பிறப்பாகும்.

**சுப யோக சுப நேரம்**

**விஷு புண்ணிய காலம்:**
14.04.95 வெள்ளிக்கிழமை காலை 6மணி 30நிமிடம் தொடங்கி பிற்பகல் 2மணி 30நிமிடம் வரை. இக்காலத்தில் தலைக்கு புங்கமிலையும் காலுக்கு ஆலமிலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து நீராடலாம்.

**விருந்துண்ணல்:**
14.04.95 வெள்ளிக்கிழமை காலை 10மணி 40நிமிடம் தொடங்கி இரவு 10மணி 14நிமிடம் வரை.

அல்லது 15.04.95 சனிக்கிழமை, 17.04.95 திங்கட்கிழமை நன்மை தரும்.

**புதுக்கணக்குப் பதிதல்:**
14.04.95 வெள்ளிக்கிழமை காலை 10மணி 40நிமிடம் தொடங்கி இரவு 10மணி 14நிமிடம் வரை.

**பொங்கல்:**
14.04.95 வெள்ளிக்கிழமை காலை 10மணி 30நிமிடத்திற்கு மேல் சூரியனுக்குப் பொங்கலிட்டுப் பூசை செய்யலாம். இக் காலத்தில் ஆலய தரிசனம், பெரியோர் ஆசிர்வாதம், குரு, தாய், தந்தை தரிசனம் செய்ய உகந்தது.

**கைவிசேடம் பெறுதல்:**
14.04.95 வெள்ளிக்கிழமை இரவு 8மணி தொடங்கி 10மணி 14நிமிடம் வரையுள்ள சுப காலம் கைவிசேடத்திற்கு உகந்தது. அல்லது மறுநாள் அதிகாலை சனிக்கிழமை 4மணி 52நிமிடம் தொடங்கி 5மணி 40நிமிடம் பொருந்திய சுபவேளையும் சிறந்தது.

## சரியாக நேரம் காட்டாத மணிக்கூடு

மட்டக்களப்பு மாநகரத்திலுள்ள மத்திய வீதியையும், முனை வீதியையும் இணைக்கும் சந்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் எப்பொழுதும் பிழையான நேரத்தையே காட்டுகின்றது.

இதனால் நேரத்திற்குக் கடமைக்குச் செல்லும் மக்களுக்குப் பெரும் திண்டாட்டத்தினை இம் மணிக்கூட்டுக் கோபுரம் ஏற்படுத்துகின்றது.

எனவே, மணிக்கூட்டுக் கோபுரம் தொடர்பான இந்தப் பிரச்சனைக்கு எப்பொழுது முடிவு கிடைக்குமென மக்கள் ஏங்குகின்றார்கள்....

எம். மசூத் அஹ்மத்-காத்தான்குடி-

## மின்சாரம் போனால் போச்சு!

புத்தளம் மாவட்டத்தின் கொத்தாந்தீவு என்னும் கிராமத்தில் இயங்கி வரும் உப-அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைபேசி வழங்கப்பட்டது. ஆனால் மின்சாரத்தில் மட்டுமே அது இயங்கும்!

மின்சாரம் இல்லாத வேளையில் தொலைபேசி இயங்க முடியாத நிலை. காரணம் பெற்றரி இல்லாமையாகும்.

ஆகவே கூடிய விரைவில் பெற்றரி வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்படி பணிவாக வேண்டுகிறேன்.

எம்.ஏ.ஏ. ஜுனூத்,கொத்தாந்தீவு.




அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## பஸ்தரிப்பிடமொன்றின் அவலநிலை!

அக்கரைப்பற்று பிஸ்கால் சந்தியில் அமைந்திருக்கும் பஸ் தரிப்பிடத்தையே மேலுள்ள படத்தில் காண்கிறீர்கள். இதன் ஒரு பக்க தூண் இடிந்து விழும் ஆபத்தான நிலையிலும், கூரைத்தகடுகள் சில காணாமற்போயுள்ள நிலையிலும் காட்சிதரும் இத் தரிப்பிடத்தை அச்சம் காரணமாகவே பிரயாணிகள் நாடுவதில்லை.

அக்கரைப்பற்றின் பிரபல்யமான கழகம் ஒன்றினால் நிறுவப்பட்ட இத்தரிப்பிடம் இதனாலேயே எந்த நேரமும் வெறிச்சோடிக்கிடக்கிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதை கவனிப்பார்களா?

*முழுமதி எம்.முர்தளா.*

## துர்நாற்றம் வீசும் வாய்க்கால்கள்!

### பலவருடங்களாக கவனிப்பாரற்ற நிலை!

(ஏறாவூர் நிருபர்)

கொழும்பு, மட்டக்களப்பு, பதுளை சந்தியைக் கொண்ட செங்கலடியில் வாய்க்கால்களில் அழுக்கு நிறைந்து, அவை கடந்த பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாதிருப்பதனால் பெரும் துர்நாற்றமெடுத்திருக்கிறது.

அக் கான்கள் உள்ள இடம் நுவரெலியா, பதுளை, பிபிலை, உறுகாமம், உன்னிச்சை, ஆயித்தியமலை போன்ற ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் காத்து நிற்கும் பஸ் தரிப்பிடமாகவும் இருக்கிறது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்விடத்தில் ஏற்பட்டுள்ள துர் நாற்றமான நிலையை சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்காதிருப்பது கண்டு பொதுமக்கள் சகலரும் வேதனை

## குறைந்த வேதனத்தில் தொடர்ந்து வேலை!

### 5 வருடங்களாகப் பணியாற்றும் ஊழியர்கள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைந்த புனர்வாழ்வு-புனரமைப்பு திட்டத்தின் பகுதி சார்திட்டமான சமூக நலத்தயாரிப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் சமூக நல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி என்பன வழங்கப்படுவதில்லை என மேற்படி திட்டத்தில் கடந்த 5 வருடங்களாகப் பணிபுரிவோர் தினமுரசுக்குத் தெரிவித்தார்கள்.

பல சிரமங்களுக்கு மத்தியிலும், பல இக்கட்டான சூழ்நிலைகளிலும் தாம் பணிபுரிவதாகவும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரித்துள்ள இக்கஷ்டமான காலத்திலும் தமக்கு மாதாந்த வேதனமாக ரூபா 1200/- மாத்திரமே வழங்கப்பட்டு வருவதாகவும் அவ்வூழியர்கள் வேதனைப்பட்டுக் கொள்கின்றனர். சமூகநலத் தயாரிப்புத் திட்டப் பணிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 75ற்கு மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்.

'நோறாட்' நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மட்டு மாவட்ட ஒருங்கிணைந்த புனர்வாழ்வு-புனரமைப்புத் திட்டத்தின் பகுதிசார் திட்டமான சமூகநலத் தயாரிப்புத் திட்டம் சிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகத்துக் கூடாக மேற்கொள்ளப்படுகிறது. அக் கழகத்தின் தலைவராக வண ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பணிபுரிகின்றார்.


தமது சம்பளத்தை அதிகரித்துத் தருமாறும் தமக்கு ஊ.சே.நிதி, ஊ.ந.நிதி என்பன தருமாறும் தாம் பலமுறை விடுத்த வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டு விட்ட தாகவும் அவ்வூழியர்கள் தெரி விக்கிறார்கள்.

மட்டக்களப்பில் பணிபுரியும் வேறு பல நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு ஊ.சே.நிதி, ஊ.ந.நிதி என்பவற்றை வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட் —— நாரதர்

# அஷ்ரப் யார் பக்கம்?



"மரத்தை வளர்ப்போம் மற்றவற்றை மறப்போம்" முஸ்லிம் காங்கிரசின் 13வது தேசிய மாநாட்டை முன்னிட்டு அதன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்ட வாசகம் இருக்கிறது.

மற்றவை மறக்கப்படுகிறதோ இல்லையோ; மரம் வளர்ந்து செழித்திருக்கிறது என்பது மட்டும் உண்மை.

13வது தேசிய மாநாடு, மரத்தின் செழிப்பை தலைநகரில் வைத்து நாட்டுக்கு காட்ட முஸ்லிம் காங்கிரஸ் செய்த புத்திசாலித்தனமான அரசியல் நடவடிக்கை.

கொழும்பு சுகததாச உள்ளரங்கு நிரம்பியிருந்தது. மாநாட்டு மேடையில் சகல முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் வீற்றிருக்க அமைச்சர் அஷ்ரப் முகத்தில் நிறைந்திருந்த பெருமிதம் நியாயமானது.

அமைச்சர் அஷ்ரபின் ஒரு புறத்தில் பிரதமர், மறு புறத்தில் எதிர்க்கட்சித் தலைவர்.

"அரசியல் சதுரங்க ஆட்டக்காரர்களை வாக்கு வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்" என்று அமைச்சர் அஷ்ரப் கூறியிருப்பது இதனைத்தானோ!

பொது ஜன முன்னணிக்குள்-குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள முஸ்லிம் தலைவர்களுக்கும் அஷ்ரப்புக்கும் இடையில் பனிப்போர் ஆரம்பித்தது.

இதன் ஒரு கட்டமாக ஒரு பிரசார பத்திரிகையும் வெளிவந்திருக்கிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள முஸ்லிம் தலைவர்களை பாராட்டும் அந்த பத்திரிகை; அஷ்ரப் மீது குற்றச்சாட்டுப் பட்டியல் சுமத்தியிருக்கிறது.

தென்னிலங்கையின் முஸ்லிம் தலைமைத்துவம் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் கையில்தான் இருக்கவேண்டும் என்ற கோசம் குறிவைப்பது அஷ்ரப்பைத்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு அஷ்ரப் உறவாக இருந்த போதும் அக்கட்சியின் கிழக்கு முஸ்லிம் தலைவர்களோடு பலப்பரீட்சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இப்போது பொது ஜன முன்னணியோடு உறவாக-அரசில் பங்காளியாக இருக்கும் அமைச்சர், அந்த முன்னணியின் சக்திவாய்ந்த இரண்டு தலைவர்களோடு பனிப்போரை சந்திக்கிறார்.

கிழக்கில் பலப்பரீட்சையில் வெற்றி பெற்றது போல, தற்போதைய பனிப்போரில் வெல்வது அஷ்ரப்புக்கு சுலபமானதல்ல.

வடக்கு-கிழக்கிற்கு வெளியே சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டிலும் உள்ள முஸ்லிம் தலைவர்கள் தமக்கென்று தனித்துவமான செல்வாக்கைக் கொண்டுள்ளனர்.

கொழும்பு தலைமையை நம்பியிருப்பதா? என்ற பேச்சு கிழக்கில் வரவேற்பைப் பெறும். அதுவே ஒரு ஆயுதமாகவும் எதிராளிகளை தோற்கடிக்கப் பயன்படும்.

ஆனால், வடக்கு-கிழக்குக்கு வெளியே தேசியப் பட்டியலில் கொண்டுவர ஏ.சி.எஸ்.ஹமீட் முயன்று பார்த்தார். முடியவில்லை.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும் முடிவெடுக்கக் கூடிய பொறுப்புக்களில் முஸ்லிம் பிரமுகர்கள் இல்லை என்றே கருதமுடிகிறது.

தொலைக்காட்சியில் முஸ்லிம் மக்களது பழக்க வழக்கங்களைக் கேலி செய்வது போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறுவதாக பிரதி அமைச்சர் அலவி மௌலானா கூட வெளியே சொல்லி வருத்தப்படத்தான் வேண்டியுள்ளது. இத்தனைக்கும் அவர்தான் தகவல் துறை பிரதி அமைச்சர்.

முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரை அது தனிக்காட்டு ராஜா.

அரசியல் சூழலின் வெட்ப-தட்ப நிலையைப் பொறுத்து யாருடன் கூட்டுச் சேருவது, எவ்வாறான அரசியல் முடிவுகளை மேற்கொள்வது என்பதை முடிவு செய்ய தடைகள் கிடையாது.

எப்படியிருப்பினும் வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் அஷ்ரப்பை தமது தலைவராக ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குறிதான்.

வடக்கு-கிழக்கில் அமோக ஆதரவை கூட்டணி பெற்றிருந்த காலத்திலும், நினைத்த போதும் அது தோல்வியில்தான் முடிந்தது.

முஸ்லிம் காங்கிரசின் 13வது தேசிய மாநாட்டில் தமிழ் கட்சிகள் பல விடுத்துள்ள செய்திகள் ஒரு விடயத்தை தெளிவு படுத்துகின்றன.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம் மக்களது அரசியல் பிரதிநிதியாக முஸ்லிம் காங்கிரசை அக் கட்சிகள் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டுவிட்டன.

ஒரு காலத்தில் முஸ்லிம் மக்களிடம் குறிப்பிட்டளவு வாக்குகளை பெறும் சக்தி பெற்றிருந்தது கூட்டணி.

அமைச்சர் அஷ்ரப் கூட கூட்டணியின் அரசியல் அரங்கில் புகுந்து வந்தவர்தான்.

ஆனால், இப்போது சூழ்நிலை வேறு. முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியமைப்போம் என்று, கூட்டணி, முஸ்லிம் காங்கிரசுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தது.

முஸ்லிம் காங்கிரசோடு இணைந்து செயற்படுவோம் என்று ஈ.பி.டி.பியும் கூறியிருக்கிறது. "வாழ்க முஸ்லிம் காங்கிரஸ்" என்று பாராட்டு மலருக்கு செய்தியனுப்பியிருந்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப். புளொட் அமைப்பும் முஸ்லிம் காங்கிரசின் நட்புறவை விரும்பியிருக்கிறது.

முஸ்லிம்களையும் எதிரும் புதிருமாக பிரித்து நிறுத்திவைத்துக் கொண்டு, அவர்களுக் கிடையில் சமரசம் செய்து வைக்கும் போர்வையில் பெரும்பான்மை இனத் தலைவர்கள் சதுரங்கமாட முடியாது.

அரசியல் சதுரங்க நடுவிலே தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் தலைவர்கள்- இரு தரப்புக்கும் இடையிலே பிரச்சனை.

பெரும்பான்மை இனத் தலைவர்கள் புன்னகையோடு சொல்லுவார்கள:

'உங்களுக்குள் ஒரு முடிவை எட்டிவிட்டு இன்று போய் நாளை வாருங்கள்'.

நாளையும் இவர்கள் தமக்குள் ஒன்றுபடப் போவதில்லை என்ற நம்பிக்கை யோடுதான் அப்படிச் சொல்லுவார்கள்.


பெரும்பான்மை இனக் கட்சியில் உள்ள முஸ்லிம் பிரமுகர்கள் தமது தலைவர்களது மனம் கோணாமல் நடக்க வேண்டியிருக்கும்.

வடக்கு-கிழக்கு பிரிவுக்கு ஆதரவாக கிழக்கின் முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் முன்னர் உரத்துப் பேசிவந்ததும் அதனால் தான்.

பெரும்பான்மை இனக் கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்பை தாமாக முன்வந்து ஏற்கப் போவதில்லை.

அதனால் அக் கட்சிகளில் உள்ள முஸ்லிம் பிரமுகர்களும் தமது தலைமைகளை மீறி எதுவும் பேசமுடியாது.

முஸ்லிம் காங்கிரசுக்கு அந்தப் பிரச்சனை கிடையாது. அதன் வெளிப்பாடுதான் வடக்கு-கிழக்கு தமிழ்-முஸ்லிம் மக்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டை அக்கட்சி வலியுறுத்தியிருப்பதும்.



# அரசியல் தீர்வில் சதுரங்கம்

பிரேமதாசாவின் மறைவின் பின்னரே முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன முன்னணியை தீவிரமாகக் காதலிக்கத் தொடங்கியது.

அமைச்சர் அஷ்ரப்பிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மீதிருந்த வெறுப்பை விட கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்களாக இருந்த முஸ்லிம் பிரமுகர்களுடன்தான் வெறுப்பு அதிகம்.

அந்தப் பிரமுகர்களும் அஷ்ரபின் அரசியலுக்கு முடிவுரை எழுதிவிட்டுத்தான் மறுவேலை என்பது போலவே நடந்து கொண்டார்கள்.

ஜனநாயக அரசியலில் இறுதித் தீர்ப்பு திருவாளர் பொதுஜனத்தின் கையில்தான் இருக்கிறது.

திருவாளர் பொதுஜனத்தை மரத்தின் கீழ் கொண்டுவரும் கலை அஷ்ரப்பிற்கு தெரிந்திருந்தது.

அதனால் சென்ற பொதுத் தேர்தலில் தனது அரசியல் எதிரிகளை நோக்கி மரத்தின் கீழ் நின்று அஷ்ரப் தொடுத்த அம்புகள் குறி தவறவே இல்லை.

பொது ஜன முன்னணி அரசின் ஆரம்பகாலத்தில் அஷ்ரப்பின் உரைகளும், நடவடிக்கைகளும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தன.

அந்த ஆயுதம் பயன்படாது.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரசுக்கு பயன்பட்ட அதே ஆயுதம் வடக்கு-கிழக்குக்கு வெளியே தென்னிலங்கை முஸ்லிம் தலைமைத்துவத்திற்கு பயன்படும்.

கிழக்கு முஸ்லிம்களுக்குத்தான் அஷ்ரப் தலைவர். அவர் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கு எப்படி தலைமை வழங்கலாம்? என்று கேள்வி வரும். வரும் என்ன வந்துவிட்டது.

ஆனால், தென்னிலங்கையில் முஸ்லிம் தலைவர்களாக இருப்பவர்கள் தனித்துவமாக முடிவெடுக்கக் கூடியவர்கள் அல்ல.

பெரும்பான்மை இனத் தலைவர்களது முடிவுகளுக்காக அவர்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

தமது தலைவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. பல சமயங்களில் அவர்களது கரங்கள் கட்டப்பட்டிருப்பது போலவே தோன்றும்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது சம்பிரதாயமான தலைமைப் பதவியை முஸ்லிம் ஒருவருக்கே வழங்குவது வழக்கம்.

இம் முறை மூத்த அரசியல் தலைவர் ஏ.சி.எஸ்.ஹமீட் ஐ.தே.கட்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காலியான தேசியப் பட்டியலில் ஒரு முஸ்லிம் உறுப்பினரைக் கொண்டுவரக் கூட அவரால் முடியவில்லை.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை வடக்கு-கிழக்குக்கு வெளியே கூட்டணியால் அதேயளவு செல்வாக்கைப் பெற முடியவில்லை.

தமிழ் தலைவர்கள் என்று அழைக்கப்பட்டபோதும் வடக்கு-கிழக்கு தமிழர்களது வாக்கு வங்கிகள்தான் கூட்டணியின் கட்டுப்பாட்டில் இருந்தது.

ஆனால், ஒரு வித்தியாசம்-அன்றைய கூட்டணித்தலைமை வடக்கு-கிழக்கு வெளியே குறிவைக்கவில்லை. ஆனால், முஸ்லிம் காங்கிரசுக்கு வெளியேயும் மரம் வளர்க்கும் எண்ணம் இருக்கிறது.

நிறைவேறுவதுதான் கஷ்டம்போலத் தெரிகிறது. முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணக் கட்சி என்ற தோற்றப்பாடு அதற்கு தடையாக இருக்கும்.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் வலுவான ஒரு அரசியல் சக்தி.

இனப்பிரச்சனை தீர்வில் முஸ்லிம் காங்கிரஸ் என்னும் அரசியல் சக்தியை மறந்துவிட்டு தமிழ் கட்சிகள் மட்டுமே முக்கிய தீர்மானங்களை எடுக்க முடியாது.

"தமிழ் பேசும் மக்களுக்கான போராட்டம்" என்ற பதப்பிரயோகம் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதுதான்.

ஆனால், தமிழ் கட்சிகள் முஸ்லிம் மக்களை அணி திரட்டுவதில் தமது தோல்வியை ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

முஸ்லிம் காங்கிரசுக்கு போட்டியாக தமிழ் கட்சிகள் முஸ்லிம்களிடம் செல்ல ரெலோ மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டை பகிஷ்கரித்தது. கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தோற்றப்பாட்டை காட்டினால் தமிழர்களது ஆதரவைப் பெறலாம் என்பது ரெலோ போடும் கணக்கு என்று தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரசோடு விரோத நிலைப்பாட்டை மேற்கொள்வது தமிழ் கட்சிகளுக்கு தமது அரசியல் தீர்வு யோசனைகளை முன்னெடுக்கத் தடையாகவே அமையும்.

முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக அரசியல் நடத்த நினைப்பது தற்போதைய சூழலுக்கு பொருத்தமில்லாத நடவடிக்கை என்பதை தமிழ் கட்சிகள் பலவும் உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது.

அரசியல் தீர்வை பொறுத்தவரை தமிழ் கட்சிகள் 'சமஷ்டிக் கூட்டாட்சி' என்பதை தனித்தும், ஒருமித்தும் வலியுறுத்தி உள்ளன.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட முடியாத தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பது அரசியல் தீர்வுக்கான முக்கியமான அடிப்படையாகும்.

13வது தேசிய மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் அந்த அடிப்படையை ஏற்றுக் கொண்டுள்ளது.

முஸ்லிம்கள் விரும்பவில்லை என்று ஒரு காரணத்தைத் தூக்கிப் போட்டு வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு செய்யப்படும் சூழ்ச்சிக்கு இனி இடமில்லை.

வடக்கு-கிழக்கில் தமிழர்களையும்,

"வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு மாகாண சபை, அல்லது தனியான அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டும்" என்று மு.காங்கிரஸ் கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு சுயாதிக்கம் உள்ள ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பது ஈ.பி.டி.பி., புளொட், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி ஆகியவை இணைந்து முன்வைத்த அரசியல் தீர்வு யோசனையிலும் ஏற்கப்பட்டிருந்தது.

எனவே-தமிழ் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசும் பேசி ஒரு தீர்வுக்கு வருவதற்கான சூழல் தோன்றியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு விரோதமாக செல்லும் எண்ணம் அஷ்ரப்பிற்கோ மு.காங்கிரசுக்கோ இல்லை என்று தெரிகிறது.

அரசியல் சதுரங்கத்தில் பெரும்பான்மை இனக் கட்சிகளோடு பேரம் பேசும் பலத்தை தக்கவைத்துக் கொள்ளவே அஷ்ரப் விரும்புகிறார். அதற்கு வாக்கு வங்கியின் பலம் தொடர்ந்து தேவை.

தனது வாக்கு வங்கியில் சேதம் ஏற்படாதவகையில் தமிழ் கட்சிகளோடு ஒத்துழைத்து செயற்படுவதில் அஷ்ரபிற்கு தயக்கமில்லை என்றே தெரிகிறது..

## அதிரடி அய்யாத்துரை



வாற செய்தியளைப் பார்த்தால் மேலிட பாதுகாப்பில் கூட நிறைய ஓட்டைகள் எண்டு தெரியுது. பாதுகாப்பவர்கள் தமிழ் மொழி உச்சரிப்போர் விசயத்தில் மட்டும் விழிப்பாக இருக்கினம். மேலிட கோட்டையில் வெளியாள் நுழைந்த விடயத்தை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும் விசேஷமாக அறிவிச்சுப் போட்டு தமிழை மறந்தது ஏனாம்? ரி.என்.எல். தொலைக் காட்சியிலை தமிழ் படம் பார்த்துக் கொண்டிருந்தவைக்கு திடீர் விசேஷ அறிவிப்பு கலக்கத்தைக் கொடுத்துப் போட்டுதாம்.

திருவான மலையிலே சம்பந்தமானவரை 'ஓரம்போ' சொல்லிப்போட்டு தங்கமானவர் அணி களத்திலை குதிச்சிருக்காம். பகல் நேரத்திலையும் வாகனத்தில் 'ஹெட் லைட்' போட்டுக்கொண்டு 'திரில்' சுற்றுப் பயணம் நடக்குதாம். இயக்க 'ஸ்ரைல்' தொற்றிக் கொண்டுதோ எண்டு சிலர் பேசிக்கொள்ளுறதும் காதில் வந்து விழுகுது பாருங்கோ. பதவி வந்தா அண்ணன்மாரும் தம்பிமார்களின் பாதையில்தானோ?

தேனகத்திலை அதிகாரம் யார் கையில் எண்ட விசயத்திலை தினசரி அடிபாடு-மற்றும் பிடுங்குப்பாடு நடக்குதாம். நகர முதல் பிரஜையை அதிகாரம் உள்ள சிலர் வெட்டி ஓடப் பார்க்கினமாம். சரி-பிழை இருக்கட்டும் பாருங்கோ, மக்களால் தெரிவு செய்யப்பட்டவையை அதிகார வர்க்கத்தார் அமுக்க நினைக்கிறது நியாயம் இல்லைப் பாருங்கோ. அது புள்ளடி போட்ட சனத்தை பொல்லால் அடிக்கிறமாதிரியல்லோ!

கிழக்கின் தனித்துவ கட்சி மாநாட்டில் கூட்டான கட்சித் தலைவர் பேசின பேச்சு பலருக்கு நெஞ்சைத் தொட்டுப்போட்டுது. ரெண்டு எழுத்தார் வெளியேற்றின முஸலிம் மக்கள் யாழ்ப்பாணம் போனபின்னர்தான் தானும் அங்கே போவேன் எண்டு பேசினவர். நல்ல பேச்சு. ஆனால் ஒரு கேள்வி. வன்னி மாவட்டத்தில் மன்னாரில் இருந்தும் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டவையல்லோ? கூட்டான கட்சித் தலைவர் எப்படி அங்கைபோய் தேர்தலிலை போட்டியிட்டவர்? யாழில் இருந்து வெளியேற்றின ரெண்டு எழுத்தாரிடம் கூட்டான கட்சி இதுவரை உது பிழை எண்டு சொல்லவும் இல்லையல்லோ! சிவ...சிவா....கேள்வியள் வருகுதே என்ன செய்ய?

கிழக்கின் தனித்துவ கட்சி மாநாட்டிலை கட்சிப் பிரதிநிதிகளிடம் "ரீயோ-கோப்பியோ" எண்டு கேட்டவையாம். சிலர் 'ரீ' என்றனர் வேறு சிலர் கோப்பி என்றனர். ஆனால் 'சரி' தருகிறோம், என்று போனவர்கள் மாநாடு முடியும்வரை தலைமறைவாம்! ஆனால் கேக், கட்லட் எல்லாம் நல்ல ருசியாக இருந்ததாம்.

தனித்துவ கட்சி மாநாட்டில் உரையாற்றிய சக கட்சித் தலைவர்களுக்கு பலத்த கைதட்டல் வரவேற்பாம். முன்னாள் வடக்கு-கிழக்கு சபை அதிகார கட்சி தலைவருக்கு மட்டும் கைதட்டல் விழவில்லையாம். பேசி முடியும்போதுதான் சிலர் கைதட்டினவையாம்.

கிழக்கில் நடந்த பழைய சம்பவங்களை மாநாட்டுக்கு வந்திருந்த பார்வையாளர்கள் மறக்கேல்லைப் போல கிடக்கு.

யாழ் சென்று திரும்பிவரும் சில பத்திரிகையாளர்கள் ரெண்டு எழுத்தாரின் பிரதிநிதிகள் மாதிரி காட்டிக்கொள்ளப் பார்க்கினம். பூநகரி விசயத்திலை ரெண்டு எழுத்தார் உறுதி காட்ட மாட்டினம் எண்டு மேலிடத்திலை போய் சொன்னாராம் ஒரு பத்திரிகையாளர். தலைவரின் கடிதத்திலை பூநகரி மீண்டும் கிளறப்பட்ட பிறகு சம்பந்தப்பட்ட பத்திரிகையாளரை மேலிடம் தேடுவதாகக் கேள்வி. தற்போதைக்கு அவர் தலைமறைவாய் இருக்கிறது நல்லது.

ஜெனரேட்டர் போனது தெரியும்-அது இப்போது இருப்பது எங்கே எண்டு யாருக்கும் தெரியாதாம். ரெண்டு எழுத்தார் பக்குவமாய் உடமையாக்கிப் போட்டினமாம். போனால் போகட்டும் போடாதான்.

முகத்தில் அகம் பார்க்கும் விசயமெல்லாம் இப்போது சரிப்படாது. ஏன் தெரியுமோ சிலருக்கு முகமே இல்லையே.

"மனிதர்களுக்கு
இங்கே
பெயர் இருக்கிறது....
பிரபலம் இருக்கிறது....
முக்கியமான
முகமில்லாமல் போய்விட்டது.
முகமூடிகளே
இங்கு
முகங்களாகிவிட்டன."

மேத்தாவின் கவிதை. தொப்பி அளவானவர்கள் போட்டுக் கொள்ளலாம். அளவானவர்களுக்கும் போட்டுப் பார்க்கலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


# காற்றில் பறந்த கட்டுப்பாடுகள்

அற்புதன் எழுதுவது

22 அரசியல் தொடர்




# ஆள் பிடிப்பதில் இயக்கப் போட்டிகள்



## தமிழகத்தின் கொதிப்பு

இலங்கைப் பிரச்சனை தமிழ் நாட்டு அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியிருந்தது.

ஜே.ஆர். ஜயவர்த்தனா ஈவிரக்கமற்ற கொடிய மனிதராகவே தமிழ் நாட்டு மக்களால் கருதப்பட்டார்.

இனப்படுகொலை செய்திகளும், அடைக்கலம் தேடி தமிழகம் நோக்கிச் சென்ற அகதிகளின் சோகங்களும் தமிழக மக்களிடம் அனுதாப அலையைத் தோற்றுவித்தன.

இந்த நிலையில் தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து உரத்துப் பேச ஆரம்பித்தன.

இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுப்பது இன உணர்வை வெளிப் படுத்தும் அடையாளமானது.

கலைஞர் கருணாநிதி உலகத் தமிழர் தலைவராக தன்னைக் கருதவேண்டும் என்பதில் விருப்பம் உடையவர்.

இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் கூடிய கரிசனம் உடையவராகக் காட்டுவதற்கு அவர் முயற்சி செய்தார்.

எம்.ஜி.ஆர் அதனைப் புரிந்து கொண்டார். கலைஞர் கருணாநிதியை முந்திவிட திட்டமிட்டார்.

83 ஜுலை கலவரத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த கலைஞர் தீர்மானித்தார்.

அதனை அறிந்து கொண்ட எம்.ஜி.ஆர் தமிழ அரசு சார்பாகவே பொது வேலைநிறுத்தம் (பந்த்) நடத்தி கலைஞர் கருணாநிதியை ஓரம் கட்டினார்.

தமிழக அரசியல் போட்டி இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் எதிரொலித்தமைக்கு அது ஒரு சான்று மட்டும்தான். பல சம்பவங்கள் உண்டு.

அவ்வப்போது சொல்லப்படும்.

## கலைஞரும் ரெலோவும்

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தந்தை செல்வா, தளபதி அமிர் போன்றவர்கள் கலைஞர் கருணாநிதியோடுதான் அதிக நெருக்கமாய் இருந்தார்கள்.

கலைஞரோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு அதனை இங்கே அரசியலாக்கி லாபம் தேடவும் தலைவர்கள் தவறியதில்லை.

கூட்டணியின் கையில் இருந்த தலைமைத்துவம் போராளிகள் அமைப்புக்களிடம் சென்று விட்டதை கலைஞர் கருணாநிதி தெரிந்து கொண்டார்.

அதனால்- போராளி அமைப்புக்கள் மத்தியில் தன்னோடு நெருக்கமாகக் கூடிய ஒரு அமைப்பை கலைஞர் தேடினார். புளொட் அமைப்பை எஸ்.டி.எஸ் சோமசுந்தரத்தின் மூலம் எம்.ஜி.ஆர் வளைத்துக் கொண்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் கம்யூனிசத்தை நம்பும் அமைப்பாக கருதி அதனைக் கலைஞர் தவிர்த்து விட்டார்.

புலிகள் நெடுமாறனோடு நெருக்கமாக இருந்தார்கள். நெடுமாறன் அப்போது கலைஞருக்கு எதிராக அரசியல் நடத்திக் கொண்டிருந்தவர்.

ரெலோதான் பொருத்தமானதாகப் பட்டது. ரெலோ தலைவர் சிறீசபாரத்தினம் சந்திரகாசனோடு நெருக்கமாக இருந்தார்.

தந்தை செல்வாவின் மைந்தனான சந்திரகாசன் தான் அப்போது ரெலோவின் ஆலோசகர் என்றும் கருதப்பட்டார்.

சந்திரகாசன் கலைஞருக்கும் அப்போது வேண்டப்பட்டவராக இருந்தார். சந்திரகாசன் மூலம் ரெலோவுடன் தனது உறவை இறுக்கிக் கொண்டார் கலைஞர் கருணாநிதி.

இதனை அறிந்த எம்.ஜி.ஆர் ரெலோ அமைப்பு மீது கசப்படைந்தார்.

அதனால் புளொட் அமைப்புக்கு எம்.ஜி.ஆர் அரசின் உதவி சற்று அதிகமாகவே கிடைத்தது.

தமிழ்நாட்டில் சட்டசபை உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் புளொட் அமைப்பினர் தங்கியிருக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது.

எஸ்.டி.எஸ் சோமசுந்தரத்தின் அனுசரனையோடு பயிற்சி முகாம்கள் அமைப்பதற்கான இடங்களையும் 'புளொட்' பெற்றுக் கொண்டது.

இதனால் '83' காலப் பகுதியில் ஆட்பலம், நிதி பலம் போன்றவற்றில் புளொட் அமைப்பே முன்னணியில் இருந்தது.

## 'நக்சலைட்' தொடர்பு

ஈ.பி.ஆர்.எல்.எஃப் செயலாளர் நாயகம் க.பத்மநாபா 'நக்சலைட்' என்றழைக்கப்படும் தீவிர கம்யூனிஸ்ட் அமைப்புக்களோடு தொடர்புகள் வைத்திருந்தார்.

இந்திய மத்திய அரசையும் சோவியத் யூனியனையும் தீவிரமாக எதிர்த்து வந்தன 'நக்சலைட்' குழுக்கள்.

தலைமறைவாக இயங்கிவந்த 'நக்சலைட்' குழுக்கள் பல பிரிவுகளாக சிதைந்து கிடந்தன.

'மக்கள் யுத்தக் குழு' என்று அழைக்கப்படும் கோதண்டராமன் தலைமையிலான குழுவோடுதான் பத்மநாபா நெருக்கமாக இருந்தார்.

நிலப்பிரபு ஒருவரை கத்தியால் குத்திவிட்டு ஓடிவந்தார் 'நக்சலைட்' குழு உறுப்பினர் ஒருவர். அவருக்கு சென்னையில் சூளைமேட்டில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் அலுவலகத்தில் பாதுகாப்புக் கொடுக் கப்பட்டது.

'நக்சலைட்' குழுக்களோடு ஈ.பி.ஆர். எல்.எஃப் தொடர்பு தெரிந்திருந் தமையால் இந்திய உளவுப் பிரிவுகளும், தமிழக மாநில உளவுப் பிரிவுகளும் சந்தேகக் கண்கொண்டுதான் நோக்கிவந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்குள் பத்மநாபாவின் 'நக்சலைட்' ஆதரவு நிலைப்பாட்டை சுரேஸ் பிரேமச்சந்திரன், மணி, குணசேகரன், ரமேஷ் ஆகியோர் விமர்சித்தனர்.

இந்தியப் பிரதிநியாக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்திய மத்திய அரசை விரோதிப்பது புத்திசாலித்தனமல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

இந்தியாவில் இருந்து ஈ.பி.ஆர். எல்.எஃப் ஒரு சஞ்சிகை வெளியிட்டது. அதன் பெயர் 'ஈழ முழக்கம்'.

அதற்கு ரமேஷ் பொறுப்பாக இருந்தார். சுரேஸ் பிரேமசந்திரனின் அனுமதியுடன் சோவியத் யூனியனை ஆதரிக்கும் கருத்துக்கள் ஈழமுழக்கத்தில் வெளியாகின.

### நாபாவின் கருத்து

இந்திய அரசின் உளவுப் பிரிவுகளது சந்தேகங்களை தீர்க்க இது ஓரளவு உதவியது.

"இந்தியா ஒரு முதலாளித்துவ அரசு. அது தனது நலனுக்கு மாறாக ஈழத்தில் சோசலிசப் புரட்சி நடத்த ஒத்துழைக்காது" என்பதே பத்மநாபாவின் கருத்தாக-நம்பிக்கையாக அப்போதிருந்தது.

83 இன் ஆரம்பப் பகுதியில் பத்மநாபா தமிழ்நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

83 ஜுலை கலவரநேரத்தில் பத்மநாபா யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

தமிழ்நாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வேலைகளுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் பொறுப்பாக இருந்தார்.

## முன்னுரிமை

இயக்கங்களுக்கு பயிற்சி கொடுக்க இந்தியா முடிவெடுத்திருந்த விடயம் முதலில் ரெலோவுக்கு தெரியவந்தது.

சந்திரகாசனுக்கும், இந்திய ஆய்வு பகுப்பாய்வு பிரிவான 'றோ' அதிகாரி உன்னிக்கிருஸ்ணனுக்கும் இடையே நல்ல உறவு இருந்தது.

அதனால், பயிற்சி வழங்குவதில் ரெலோவுக்கு முன்னுரிமை கொடுக்க 'றோ' தீர்மானித்தது.

பத்மநாபா, பிரபாகரன் ஆகியோர் அப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர்.

ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம், புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் ஆகியோர் தமிழ்நாட்டில் இருந்தனர்.

ரெலோவுக்கு முன்னுரிமை கொடுத்தாலும் புலிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் ஆகிய இயக்கங்களுக்கும் பயிற்சி கொடுக்க 'றோ' முன்வந்தது.

## வரப்பிரசாதம்

'ஈரோஸ்' அமைப்பு அப்போது மிகச் சொற்ப உறுப்பினர்களோடுதான் இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புலிகள், ரெலோ, புளொட் அமைப்புகள் போல பிரபலமாக அறியப்பட்ட அமைப்பாக 'ஈரோஸ்' இருக்கவில்லை.

இந்திய ஆயுதப் பயிற்சி என்பது 'ஈரோஸ்' உயிர்வாழக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் போலவே அமைந்தது.

'புலிகள் உட்பட சகல அமைப்புக்களும் காலப்போக்கில் மறைந்து போகும். ஈரோஸ் மட்டுமே இறுதிவரை நின்று சோசலிச ஈழப் புரட்சியை நடத்தும்' என்று தத்துவம் பேசிக் கொண்டிருந்தது ஈரோஸ்.

ஈரோஸுக்கு இருந்த பரிதாபநிலை என்னவென்றால், அதனை தமிழக சோசலிச வாதிகளும் நம்பவில்லை. மிதவாதிகளும் ஆதரிக்கவில்லை. தீவிரவாதிகளும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கு சுறு சுறுப்பான இரண்டாம் கட்டத் தலைமை ஒன்று இருந்தது. அதுவே அந்த அமைப்பின் மிகப் பெரிய பலமாக அமைந்தது.

ஈரோஸுக்கு இரண்டாம் கட்ட தலைமை இல்லாமல் இருந்தது. அல்லது மிகப் பலவீனமாக இருந்தது.

உதாரணமாக ஈரோஸ 'தர்க்கீகம்' என்றொரு பத்திரிகை வெளியிட்டது.

பத்திரிகை மாதாந்தம் ஒழுங்காக வெளிவந்தது பத்திரிகையில் உள்ள விடயங்கள் மட்டும் அதனை எழுதுவோருக்கு மட்டுமே புரியும் வகையில் இருந்தது.

'தர்க்கீகம்' என்றால் என்ன அர்த்தம்? விளக்கம் சொல்லவே அவர்களுக்குப் பக்கம் போதவில்லை.

எனவே-இந்திய ஆயுதப் பயிற்சி ஈரோஸுக்கு உயிர்ப்பைக் கொடுக்கும் விதத்தில் அமைந்தது.

### ஆட்சேர்ப்பு

பயிற்சிக்கு உடனே ஆட்கள் தேவை என்று கேட்டது 'றோ'.

இந்தியாவில் இருந்த தலைவர்கள் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு செய்தி அனுப்பினார்கள்.

"உடனடியாக எவ்வளவு பேரை அனுப்பமுடியுமோ அனுப்பவும்".

புலிகள் மட்டுமே ஆள்சேர்ப்பில் நிதானத்தைக் கடைப்பிடித்தார்கள்.

'வருபவரெல்லாம் வரலாம்' என்ற பாணியில் புலிகள் ஆள் திரட்டல் நடத்த முற்படவில்லை.

'ரெலோ' மினிபஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு ஆள் பிடித்துத் திரிந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பாணத்தில் மட்டுமே நிதானமாக ஆள் திரட்டலில் ஈடுபட்டது.

பத்மநாபாவின் நேரடி உத்தரவு காரணமாக மட்டக்களப்பில் 'வருபவரெல்லாம் வரலாம்' பாணியில் ஆள் திரட்டல் நடத்தப்பட்டது.

'ஆயிரம் பேர் வேண்டும்' என்று மட்க்களப்பில் இருந்த முஸ்லிம் உறுப்பினர் ஒருவரிடம் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார் பத்மநாபா.

மட்டக்களப்பில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். முக்கியஸ்தர்கள் அப்போது சிறையில் இருந்தனர்.

கட்டுப்பாட்டை விட உறுப்பினர்களது கூட்டுத்தொகை மட்டுமே முக்கியமாக இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் அமைப்புக்களை வடக்கு-கிழக்கில் வழி நடத்திய இரண்டாம் கட்ட தலைமையினரின் அனுபவமோ, கருத்துக்களோ தமிழகத் திலிருந்த தலைவர்களால் கணக்கெடுக்கப் படவில்லை.

சிறுகச் சிறுகச் சேர்த்து கட்டிய வீடுபோல, திட்டமிட்டு செயற்பட்டு ஒரு அரசியல்-இராணுவ அமைப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். வளர்ந்து கொண்டிருந்தது.

ஜனநாயக சக்திகளும், இடதுசாரி சிந்தனையுடையவர்களும் ஈ.பி.ஆர்.எல். எஃப். மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர்.

## எல்லாமே பறந்தது

தனியார் நிதி நிறுவனம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தவர் கேதீஸ்வரன். லாபம்தரும் தொழில். அவரை ஒரு நாள் சந்தித்தனர் மூன்று இளைஞர்கள்.

நீண்ட நேர விவாதம். பலநாட்கள் கலந்துரையாடல். தனது தொழிலை எல்லாம் துறந்துவிட்டு ஈ.பி.ஆர். எல்.எஃப் உடன் சங்கமித்தார் கேதீஸ்வரன். அந்த நேரத்தில் இது பெரிய காரியம்.

உறுப்பினர் சேர்ப்பிலும், கட்சியை உருவாக்குவதிலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டாம் கட்ட தலைமை புதிய அணுகு முறையை கடைப்பிடித்தது.

தோழமை-கட்டுக்கோப்பு-விமர்சனம்-சுயவிமர்சனம் என்பவை மிகச்சிறப்பான தலைமைத்துவத்தை உருவாக்கிக் கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் தான் ஆள் சோர்ப்பு இடியாக வந்தது.

இயக்கத்தில் சேருவதற்கு தேவையான தகுதிகள் என்று கூறப்பட்டவற்றை எல்லாம் நிராகரித்துவிட்டு ஆட்கள் சேர்க்கப்பட்டார்கள்.

'புளொட்' அமைப்பிலும் இது தான் நடந்தது.

83 ஜுலைக் கலவரம் இயக்கங்களை நோக்கி இளைஞர்களை தள்ளியது.

ஒரு பேரலை போல அவர்கள் இயக்கங்களை நோக்கி வந்தனர்.



அந்த அலையை எவ்வாறு சமாளிப்பது என்று தெரியாத இயக்கங்கள் அந்த அலைக்குள் மூழ்கிப் போயின.

'ரெலோ'வைப் பொறுத்தவரை ஆள்சேர்ப்பில் கட்டுக்கோப்பு, அமைப்பு வடிவத்தில் புரட்சிகர தன்மை பற்றி எப்போதுமே கவலைப் படவில்லை.

எந்த இயக்கத்தில் சேருகிறோம் என்ற தெளிவு இல்லாமலேயே ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களில் பல நூற்றுக்கணக் கானோர் சேர்ந்தனர்.

உறுப்பினர் தொகையைப் பார்த்த தலைவர்கள் பிரமித்துப் போனார்கள்.

'நாங்கள் எவ்வளவு பெரிய இயக்கமாகிவிட்டோம்' என்று சுலபமான வளர்ச்சியால் மெய்மறந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமிலிருந்த ஒரு இளைஞர் தாள் ஒன்றில் 'பிரபாகரன் வாழ்க' என்று எழுதினார்.

பொறுப்பாளர் அழைத்துக் கேட்டார். " தோழர் ஏன் இப்படி எழுதினீர்கள்?"

உறுப்பினருக்கு பொறுப்பாளர் ஏன் இப்படிக் கேட்கிறார் என்று புரியவில்லை. உறுப்பினர் கேட்டார் இப்படி;

"ஏன். அவர்தானே எங்கள் இயக்கத் தலைவர்?"

(தொடர்ந்துவரும்.)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## அலசுவது - இராஜதந்திரி



# 'காலக்கெடுக்கள்' மீண்டும் 'கெடுகாலத்துக்கு' கட்டியம் கூறுகின்றனவா?

ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமது கோரிக்கைகள் தொடர்பாக விதித்துவரும் காலக்கெடுக்கள், மீண்டும் ஒரு கெடுகாலம் ஆரம்பமாவதற்கு 'கட்டியம்' கூறுபனவாக இருக்கின்றதோ? என எண்ணத் தோன்றுகின்றது.

வடபகுதிமீதான பொருளாதாரத் தடைகளை நீக்கும் படியும், கடல் வலய மீன் பிடித்தடையை நீக்கும் படியும், பூநகரி இராணுவ முகாமை அகற்றும்படியும், மோதல் தவிர்ப்பு அமுலாக்கத்தை ஒரு யுத்த நிறுத்தமாக மாற்றும்படியுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதங்களை எழுதியுள்ளனர்.

எல்.ரி.ரி.ஈ இயத்தலைவர் வே.பிரபாகரன் அக்கடிதங்களை எழுதியுள்ளதுடன் கடந்த மார்ச் 28ந் திகதி தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு மீது விதித்த காலக் கெடுவை, தற்போது மீண்டும் ஏப்ரல் 19ந்திகதி வரை திரு.பிரபாகரன் நீடித்திருக்கக் காணப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவரின் தற்போதைய கோரிக்கைகள் எவ்வகையிலும் சமாதான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தவையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

பொரளாதார தடைகளை நீக்கக் கோருவது, விரிவான முறையில் மீன்பிடித்தலை அனுமதிக்கக் கோருவது மற்றும் மோதல் தவிர்ப்பு நிலையை ஒரு போர்நிறுத்தமாக மாற்ற வேண்டும் என்பன முற்றிலும் சமாதான அணுகுமுறைகள் சார்ந்ததாகவும், வடபகுதி மக்களின் இன்றைய நாளாந்த வாழ்க்கை நிலையை மேலும் முன்னேற்ற மடையச் செய்பனவாகவே இருக்கின்றன.

கடந்த ஆட்சியாளர்கள் வடபகுதி மீது ஒரு முற்றுமுழுதான நெருக்குதலையே ஏற்படுத்தி விட்டிருந்தனர். இராணுவ அடக்கு முறைகள் 'தலைகால்' தெரியாது இடம்பெற்ற அதேசமயம், பொருளாதார தடைகள் வடபகுதி மக்களை குற்றுயிராகக் கிடந்து பரிதவிக்கச் செய்திருந்தன.

வடபகுதியில் மீன்பிடியை நம்பியிருந்த மீனவ மக்களின் நிலையும் மோசமடைந் திருந்தது. கரையோரங்களில் அவர்களது குடிமனைகள் குண்டுவீச்சுக்களால் குட்டிச்சுவராகியிருந்தன. அத்துடன் கடல்வலயத் தடைகள் அவர்களைப் பெரும் ஜீவமரணப் போராட்டத்துக் குள்ளாக்கியிருந்தன.

போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடந்தராது அன்றைய ஆட்சியாளர்கள் ஒரு நீண்ட கெடுபிடி யுத்தத்தையே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக ஆரம்பித்துவிட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த வருடங்களில் சொல்லொனாப் பாதிப்புகளுக்குள்ளான வடபகுதி மக்கள் மீதான இராணுவ, பொருளாதார அழுத்தங்களை அகற்றுவதில் சந்திரிகா அரசு அக்கறை காட்டுவதாக அறிவித்து வருகின்ற போதிலும், நடைமுறைரீதியாக அனைத்துமே ஆமைவேகத்தில் நகருவதையே அவதானிக்க முடிகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை எடுத்து நோக்கும் போது,. அவை சமரசப்பேச்சுக்களின் பூர்வாங்க நிலை சார்ந்தவை யாகவே இருக்கின்றன.

எந்தவொரு வகையிலும் அவை அரசியல் ரீதியான தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை. அழுத்தங்களால் அல்லல்படும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பவையாகவே அக் கோரிக்கைகள் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரை அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் அவர்கள் கொண்டிருக்கக் காணப்படுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவரைப் பலவீனமடையச் செய்யும் விதத்திலேயே முன்னைய ஆட்சியாளர்கள் வடபகுதி மீது பொருளாதார ரீதியான தடைகளைக் கொண்டு வந்திருந்தனர்.

வடக்கே கொண்டு செல்லப்படும் எந்தவொரு பொருளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் வெடிகுண்டுகளாக மாற்றமடையச் செய்வார்கள் எனத் தெரிவித்து மிகத்தீவிரமாகவே முன்னைய ஆட்சியாளர்கள் பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியிருந்தனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐ.தே.க ஆட்சியாளர்கள் எதிர்பார்த்தது போல எந்தவொரு வகையிலும் பலவீன மடைந்திருக்க வில்லை. மாறாக அரச தரப்பில் அழுத்தங்களைக் கொடுக்கும் வகையிலேயே துணிகரமான முறையில் பல்வேறு இராணுவ தாக்குதல்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்தனர்.

1993ம் ஆண்டு அரசபடையினர் வடக்கே நடத்திய 'ஒப்பரேஷன் யாழ்தேவி' மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் பூநகரியில் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் தவளைப்பாய்ச்சல்' என்பன இருதரப்பினரதும் இராணுவ ரீதியான நிலைப்பாடுகளைத் தெளிவாக்கியிருந்தன.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் பெருமளவிலான ஆளணிகளுடன் வடக்கு நோக்கி முன்னேறும் நோக்குடன் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்ற இராணுவ நடவடிக்கையை இராணுவத்தினர் ஆரம்பித்திருந்தனர்.

இந்நடவடிக்கையின்போது ஆனையிறவு முகாமிலிருந்தும் முன்னேறிய படையினர் எவ்வகையிலும் வெற்றிகரமாகத் தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தனர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல் பலமானதாகவே இருந்தது. படையினரின் கனரகடாங்கிகள் கூட கதிகலங்கும் அளவுக்கு 'ஒப்பரேஷன் யாழ்தேவி' நடவடிக்கையின் போது இராணுவம் பின்னடைவைக் கண்டிருந்தது.

கனரகடாங்கியொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் நாசமாக்கிவிட்டிருந்ததுடன் மேலும் சில இராணுவ வாகனங்களையும் சேதப்படுத்தியிருந்தனர். எனவே படையின் தரப்பில் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' நடவடிக்கையின்போது இழப்புக்கள் பாரதூரமானவையாகவே இருந்தன.

இந்நிலையில் தமது நோக்கை நிறைவேற்ற முடியாதவர்களாகவே அன்று இராணுவத்தினர் மீண்டும் முகாம் திரும்பியிருந்தனர்.

தமது 'கையாலாகா'த்தனத்தை வெளிப்படுத்தும் வகையில் கிளாலிக் கடல் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான படகுகளை தாம் பின்வாங்கும் போது படையினர் எரித்து நாசமாக்கிவிட்டிருந்தனர்.

'ஒப்பரேஷன் யாழ்தேவி' நடவடிக்கையயடுத்து அன்றைய இராணுவத்தளபதியான ஜெனரல் சிசில்வைத்யரத்ன கருத்து வெளியிடுகையில் எல்.ரி.ரி.ஈ யினரின் பலத்தை குறைக்க மேற்படி இராணுவ நடவடிக்கை பெரிதும் உதவியதாகவும், ஆனையிறவு முகாமை அண்டிய புலிகளின் தளங்கள் அழிக்கப்பட்டு, அவர்களது படகுகள் நாசமாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' இடம்பெற்று முடிந்த ஒரு சில வாரங்களில் பூநகரி இராணுவ முகாம்மீது புலிகள் நடத்திய 'ஒப்பரேஷன் தவளைப் பாய்ச்சல்' என்ற தாக்குதல் அன்றைய ஆட்சியாளர்களை திகைப்பில் திணறடிக்கச் செய்திருந்தது. முற்றிலும் எதிர்பாத்திராத அத்தாக்குதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தையும், திறமையையும் அன்று ஒருங்கே பறை சாற்றியிருந்து.

எத்தகைய கட்டுப்பாடுகள், தடைகளுக்கு மத்தியிலும் புலிகள் எவ்விதத்திலும் நிலைகுலைந்து விடவில்லை என்பதை பூநகரித்தாக்குதல் உணர்த்தியிருந்தது.

எனவே பொரளாதாரத் தடைகள், மற்றும் போக்குவரத்துத் தடைகள் என்பவற்றுக்கு மத்தியில் புலிகள் தமக்கு வேண்டியவைகளைப் பெற்று தொடர்ந்து ஒருபலம் மிக்க போராட்ட இயக்கமாக இருந்து வருகின்றனர் என்பதற்கு பூநகரித்தாக்குதல், மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஏனைய தாக்குதல்கள் புலப்படுத்து கின்றன.

இந்நிலையில் வடபகுதி மீதான பொருளாதாரத் தடைகளை முற்றிலுமாக அகற்றி விடும்படி புலிகள் கோருவது அங்குள்ள அப்பாவிமக்களின் நன்மை கருதியதாகவே இருக்கின்றது.

புலிகள் தமது தற்போதைய கோரிக்கைகளில் ஒன்றாக மோதல் தவிர்ப்பு அமுலாக்கத்தை ஒரு நிரந்தர போர்நிறுத்தமாக மாற்றும்படி அரசதரப்பினரைக் கேட்டுள்ளார்கள்.

இக்கோரிக்கை மீது அரசதரப்பினர் கவனஞ்செலுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது. போர்நிறுத் தத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய தமது முதலாவது கடித்திலேயே வலியுறுத் தியிருந்தார்.

அக்கடிதத்தில் அரசியல் ரீதியிலான சமரசப் பேச்சுக்கள் சுமுகமான முறையில் இடம்பெறுவதற்கு உறுதியான போர்நிறுத்தமொன்று ஏற்படுவது மிகவும் இன்றியமையாததாகின்றது என்று திரு. பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

பலம்மிக்க ஆயுதப்போராட்ட இயக்கமாக இருந்துவருவதுடன் அரச படையினருக்கு அவ்வப்போது சவால்களையும் விடுத்துவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் போர் நிறுத்தமொன்றை வலியுறுத்துவதை எவ்வகையிலும் சமாதான அணுகுமுறைகளுக்குப் பாதகமான கோரிக்கை என்று கருதிவிட முடியாது.

யுத்தமொன்று இடம்பெறும் பட்சத்தில் நிமிடத்துக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர யுத்தமென்பது பெருமளவிலான மனித உயிர்களைப் பகடைக் காய்களாக மாற்றிவிடுகின்றது. இந்நிலையில் போர்நிறுத்தமென்பது சமாதான அணுகுமுறைகள் குறித்த ஓர் ஆரோக்கியமான நடவடிக்கையாகவே இருக்கின்றது.

இந்நிலையில் புலிகள் வலியுறுத்தும் போர் நிறுத்தத்தை பரிசீலித்து அதனை அமுல்படுத்துவதை எவ்வகையிலும் சமாதானத்துக்கு விரோதமான ஒரு விடயமாக அரசதரப்பினர் கருத முடியாதென்றே எண்ணத் தோன்றுகிறது.

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமென்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் நீண்டகால கோரிக்கையாகவே இருந்து வருகின்றது.

வடபகுதியை எடுத்து நோக்கும் பட்சத்தில் யாழ்குடா நாடு மீது நாலாபுறமும் படையினரது பிரசன்னம் அமைந்திருக்கக் காணப்படுகின்றது.

பலாலி இராணுவ விமானப்படைத் தளம், காரைநகர் கடற்படைத் தளம், மற்றும் தெற்கே ஆனையிறவு இராணுவ முகாம் பிரதேசம் உட்பட பூநகரி முகாம் பகதியிலும் பெருமளவிலான படைபல விஸ்தரிப்புக்குள்ளாகியுள்ளது.

பலாலி இராணுவத் தளத்திலிருந்தும் மேற்கே மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ விஸ்தரிப்பினால் ஆயிரக் கணக்கான மக்கள் தமது குடிமனைகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இது தவிர பல்வேறு சிறந்த கல்விக் கூடங்களும் இந்த இராணுவ விஸ்தரிப்புக்காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனாக்கல்லூரி, மற்றும் இளவாலை சென்ஹென்ரீஸ் கல்லூரி என்பன உட்பட பல்வேறு கல்விநிலையங்களும் இந்த இராணுவ விஸ்தரிப்பினால் செயலிழந்திருக்கின்றன.

காங்கேசந்துறை சீமேந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, மற்றும் ஆனையிறவின் உப்பளப்பகுதிகள் என்பனவும் தூர்ந்து போயிருக்கக் காணப்படுகின்றன.

இவை தவிர பலாலி தளத்தையண்டிய பெருமளவிலான விளைநிலப்பகுதிகள் உட்பட குடாநாட்டின் பெருந்தொகையான பயிர்ச்செய்கைப் பிரதேசங்கள் இராணுவ முற்றுகையினால் கட்டாந்தரைகளாக மாறியிருக்கின்றன.

எனவே சமரச முயற்சிகள் என்று ஆரம்பிக்கும் பட்சத்தில் இராணுவ அழுத்தங்கள் நீக்கப்பட்டு பொதுமக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை எதுவித அச்சுறுத்தலோ, அழுத்தங்களோ இன்றி மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இதன் மூலமே சமரச முயற்சிகளில் அனைத்து மக்களுமே விசுவாசம் கொள்ளமுடியும்

இவ்வகையில் யாழ் குடா நாடு முற்றுமுழுதான இராணுவ சுற்றிவளைப்புக்குள்ளாகியுள்ளது போன்ற பிரமையை ஏற்படுத்தியிருக்கும் பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதன் மூலம் சந்திரிகா அரசு அரசியல்ரீதியாக வடக்கு, கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் தனக்குள்ள ஆர்வத்தை மேலும் உறுதி செய்ய முடியும்.

சமரச முயற்சிகள் என்று ஆரம்பிக்கும் பட்சத்தில் எத்தரப்பினரும் முதலில் இராணுவ அழுத்தங்கள் நீக்கப்பட வேண்டுமென்பதனை வலியுறுத்தி வந்திருப்பதனையே சர்வதேச அரங்குகளிலும் காணமுடிகின்றது.

## பாலஸ்தீனத்தில் பாலஸ்தீனப் பொலிசார்.

## இராணுவ அழுத்தங்களை அகற்றக்கோரும் ஐரிஷ் விடுதலைப் போராளிகள்.

தென்னாபிரிக்கப் பிரச்னை, மற்றும் பாலஸ்தீனப் பிரச்னை, அத்துடன் தற்போது உலகின் கவனத்தைப் பெற்றுள்ள வட அயர்லாந்து விவகாரம் என்பவற்றை அவதானிக்கும் போது, அரசியல் அணுகுமுறைகள், வெற்றியளிப்பதற்கு இராணுவ அழுத்தங்கள் நீக்கப்பட வேண்டு மென்பது எவ்வளவு தூரம் வலியுறித்தப் பட்டுள்ளன என்பதனை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நோக்கும்பட்சத்தில் இஸ்ரெலியப். படையினரால் ஆக்கிரமிக் கப்பட்டு, அவர்களின் ஆக்கிரமிப்புக் குள்ளாகியிருந்த பகுதிகளில் இன்று பாலஸ்தீன மக்களை உள்ளடக்கிய பொலிஸ் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் மூலம் பாலஸ்தீன மக்களின் பாதுகாப்பு பெருமளவு உறுதி செய்யப் பட்டுள்ளதுடன், பாலஸ்தீன விடுதலைப் போராட்ட தலைவர்களும் இராணுவ நெருக்குதல்கள் அற்ற விதத்தில் இஸ்ரேலியத் தலைவர்களுடன் கைகுலுக்கி சமரச முயற்சி களில் உறதியாக ஈடுபட்டிருக்கக் காணப் படுகின்றனர்.

இது தவிர வட அயர்லாந்தில் இன்று நிலவும் சூழ்நிலைகள் இலங்கைக்கும் ஒரு நல்ல படிப்பினையாகவே இருக் கின்றது.

கடந்த 25 வருட காலமாக பிரித்தானிய அரசுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்து வந்த வட அயர்லாந்துப் பிரச்னையில் தற்போது சமரசத் தீர்வை நோக்கி முன்னேற்றகரமான சூழ்நிலைகள் தோற்றம் பெற ஆரம்பித்தள்ளன.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் (IRISH REPUBLIC ARMY) அரசியல் பிரிவுத் தலைவரான திரு. ஜெரிஅடம்ஸ் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து ஐரிஷ் விடுதலைப்போராட்ட நிலவரங்கள் பற்றி விரிவான விளக்கத்தை வழங்கியிருந்தார்.

அப்போது வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் இராணுவத்தின் முற்றுகைகள் நீக்கப்பட்டு, அங்கே அரசியல் சமரசத்துக்கான சூழ்நிலைகள் உறுதிப் படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது வட அயர்லாந்தில் இருந்தும் பிரிட்டிஷ் படையினர் பெருமளவில் வாபஸ் பெற்று வருவதாக பிரிட்டனில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கமும் வட அயர்லாந்துப் பிரச்னைத் தீர்வில் ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரின் கோரிக்கைகளுக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொண்டு வருவதையே அறிய முடிகின்றது.

எனவே பாலஸ்தீன, ஐரிஷ் விவகாரங்கள் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பவற்றை பறைசாற்றுவனவாகவே இருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்னை சார்ந்த விடயத்திலும் இது போன்று சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பனவற்றை அரச தரப்பினரும், எல்.ரி.ரி.ஈயினரும் கைப்பிடிப்பார் களேயானால் சமரச முயற்சிகள் ஆக்கபூர்வமானவையாகவும், அர்த்தமுள்ளவையாகவும் விளங்கும் என்றே எதிர்பார்க்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# காதல் மன்னன் ஜோன் எஃப். கென்னடி

தருவது ரஜிகன்

கட்டழகி அலிசியாவிடம் கென்னடி வசமாக சிக்கியிருந்தார்.

ஆதாரங்களை அடுக்கியே கென்னடியை நீதிமன்றத்தில் சிக்க வைத்து விடுவாள் அலிசியா.

சின்னப் பையன். வயதுக் கோளாறு பருவ அழகியிடம் பழக வைத்து மாள வைத்து விட்டது. கென்னடியின் தந்தை ஜோசப் கென்னடி நிலைமையைப் புரிந்து கொண்டார்.

நேராக அலிசியாவிடம் போனார்.

"இங்கே பார் அலிசியா, உனக்கு என் மகன் இனிக் கிடைக்க மாட்டான்."

"நீதிமன்றம் பார்த்துக் கொள்ளும்."

"எதைப் பார்த்துக் கொள்ளும்? மடப் பெண்டே,! உன்னால் கென்னடியை அவமானப்படுத்த முடியும்-அவனைப் பெற முடியாது. நான் சொல்வதைக்கேள், தேவையான பணம் தருகிறேன். வழக்கை வாபஸ் பெற்றுக்கொள். யோசிக்காதே. அரிய வாய்ப்பு இது!"

அலிசியா யோசித்தாள். இலட்சங்கள் கைமாறின.

கென்னடி-அலிசியா காதல் இலட்சங்களுக்குள் புதைக்கப்பட்டது. கரன்சி நோட்டுக்களால் மறைக்கப்பட்டது.

□□

அலிசியா வர மறப்பது எப்படி? தவித்துப் போனார் கென்னடி.

தவிப்பை தீர்க்க மலர்ந்தது மற்றொரு காதல்.

ஜாக்குலின் பேரழகி; புத்திசாலித் தனமான பெண்.

ஜாக்குலினின் புன்னகையில் இதயத்தை தொலைத்துவிட்டு தவியாய்த் தவித்தார் கென்னடி.

கென்னடிக்கு ஒரு கால் கட்டுப் போட்டு வைத்தால் விளையாட்டுப் புத்தியும், உல்லாச ஆசையும் கட்டுக்குள் வந்துவிடும் என்று நினைத்தார் ஜோசப் கென்னடி.

1953இல் ஜாக்குலினுக்கும் கென்னடிக்கும் திருமணம் நடந்தது.

கென்னடிக்கு ஜாக்குலினை பிடித்திருந்தது. ஆனால் ஜாக்குலினுடன் மட்டும் ஆசையைச் சுருக்கிக் கொள்ள மனம் மறுத்தது.

ஜோசப் கென்னடிக்கு நீண்டகால கனவு-தனது மகன் கென்னடி அமெரிக்க ஜனாதிபதியாக மாறவேண்டும் என்பது.

அதற்கு முன்னோடி நடவடிக்கையாக செனட்டர் பதவிக்கு கென்னடியைப் போட்டியிட வைத்தார்.

கனவின் முதல் கட்ட காட்சி பலித்தது-செனட்டரானார் கென்னடி.

செனட்டர் பதவியை பெற்று தனக்குரிய அலுவலகத்திற்கு சென்றார் கென்னடி.

அங்கே ஒரு அதிசயம் காத்திருந்தது.



ஜாக்குலினுடன் கென்னடி

"வாவ்....யார் இது?"

"உங்கள் அந்தரங்கச் செயலாளர். பெயர் பமேலா ரேர்ணர்."

கென்னடிக்கு பதவி கிடைத்தது சந்தோசம். பருவச் செழிப்பை பத்திரப் படுத்தியிருந்த அழகி செயலாளராய் கிடைத்தது சுகம்.

1958ம் ஆண்டு மே மாதம். "டியர் நான் வெளியூர் சென்று வரலாம் என்று நினைக்கிறேன். போகட்டுமா?"

கேட்டது ஜாக்குலின். கென்னடி தனக்குள் ஏற்பட்ட உற்சாக உற்சவத்தை முகத்தில் காட்டவில்லை.

"அப்படியா...? ம்.....சரி. சீக்கிரமாய் திரும்பி வந்துவிடு."

ஜாக்குலின் பயணம் புறப்பட்டவுடன், கென்னடி தொலைபேசியை நோக்கி ஓடினார்.

"பமேலா நான் உன்னை உடனே பார்க்க வேண்டும். வருகிறாயா,... வரட்டுமா?"

"இரண்டுமே நடக்காது!"

"ஏன் டியர்?"

"இன்று நான் ஓய்வெடுக்க வேண்டும். உங்களோடு இருந்தால் ஓய்வா எடுக்க முடியும்?"

தொலைபேசி வழியாகச் சிரித்தாள். சிரிப்பே போதை தந்தது.

பமேலாவின் வீடு ஜோஜ் ரவுணில் ஒரு மாடியில் இருந்தது.

## ருசிகரமான உண்மைகள்

சென்றவாரத் தொடர்

லியோனார்ட் கார்ட்டர் தம்பதிகளுக்கு சொந்தமான வீடு அது. அவர்கள் கீழே குடியிருந்தார்கள்

நிம்மதியான தூக்கத்தில் கீழே படுக்கை அறையில் கார்ட்டர் தம்பதியினர். மேலே உள்ள வீட்டில் பமேலா.

நேரம் நள்ளிரவு. திடீரென்று கண்ணாடிகள் உடையும் ஒலி.

திடுக்கிட்டு விழித்த கார்ட்டர் தம்பதியினர் ஓடிவந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தனர்.

ஒரு உருவம் நின்று மேலே பமேலாவின் வீட்டு ஜன்னலை நோக்கி கற்களை எறிந்து கொண்டிருந்தது.

பமேலா நைட்டியோடு ஜன்னலில் தெரிந்தாள். கீழே நின்ற உருவம் கல்லெறிவதை நிறுத்திவிட்டது.

"பமேலா நீ கதவை திறக்கிறாயா? இல்லை நானே திறக்க வைக்கட்டுமா?"

பமேலா கதவு திறந்து மாடிப் படியால் ஓடிவந்து அந்த உருவத்தை அணைத்தபடி மேலே கூட்டிச் சென்றாள்.

கார்ட்டர் தம்பதியினர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்த உருவம் செனட்டர் கென்னடி தான் என்று அவர்கள் வியப்போடு புரிந்து கொண்டனர்.

"கென்னடியா இப்படி?"

திருமதி கார்ட்டர் முகத்திலும் கேள்வியிலும் வெறுப்பு.

"தீர அறியாமல் ஒரு முடிவுக்கு வருவது நல்லதல்ல."

திருவாளர் கார்ட்டர் கூறினார்.

திருவும் திருமதியும், ஒரு திட்டம் போட்டார்கள்.

பமேலா வெளியே சென்றிருந்த நேரம் பார்த்து அவளது அறைக்குள் இருவரும் புகுந்தனர்.

ஒலிவாங்கிகளை படுக்கையறையில் மறைத்துவைத்துவிட்டு வந்துவிட்டனர்.

படுக்கையறையில் பேசிக்கொள்வதை கீழே தமது வீட்டில் இருந்து கேட்கத்தான் அந்த ஏற்பாடு.

அன்று இரவு கென்னடி பமேலாவை தேடிவந்தார்.

முதலில் சில 'இச்' ஒலிகள்.

"பமேலா உன் இடுப்பில் தசை போடுகிறது. கிள்ளியெடுக்கட்டுமா?"

"ரொம்ப அக்கறை..... வலிக்கிறது."

கீழே தம்பதியினர் தமக்குள் அர்த்தமுள்ள பார்வைகளை பரிமாறிக் கொண்டனர்.

சந்தேகமேயில்லை. தொடர்ந்து கேட்ட வினோதமான-பல்வேறு ஒலிகள் கென்னடி-பமேலா உறவு பற்றி அவர்கள் முடிவுக்கு வர போதுமானதாக இருந்தது.

வீட்டைக் காலி செய்துவிடுமாறு கூறிவிட்டார்கள் கார்ட்டர் தம்பதியினர்.

மேரி பிஞ்செற் என்னும் பெண் ஜோர்ஜ் ரவுண் பகுதியில் குடியிருந்தாள்.

அவளது வீட்டில் ஒரு பகுதியில் குடியேறினாள் பமேலா.

பமேலாவும்-கென்னடியும் உல்லாசமாக இருப்பதை கண்டும் காணாதது போல் இருந்தாள் மேரி பிஞ்செற்.

மேரி பிஞ்செற் மீதும் கென்னடிக்கு ஒரு கண்.

பமேலாவைத் தேடி வரும்போது மேரி பிஞ்செற் எதிரே வந்தால் சின்ன சின்ன சில்மிஷங்கள் செய்வார் கென்னடி. அவளும் அனுமதித்தாள்.

□□

1958இல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தினசரிகளைப் பார்த்த கார்ட்டர் தம்பதியினர் அதிர்ந்து போனார்கள்.

"ஜோண் எஃப். கென்னடி தேர்தலில் குதிக்கிறார்."

என்றிருந்தது செய்திகளில்! கூடாது !பெண் மோகம் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக வர அனுமதிக்கக் கூடாது.

கார்ட்டர் தம்பதியினர் ஆதாரங்களை சேகரிக்கத் தொடங்கினார்கள்.

கென்னடியின் காதுக்கு விஷயம் எட்டியது.

கென்னடி யோசித்தார். (தொடரும்)


அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்


## பல்லுக்கென்ன அழகு?



இதுபோன்ற தேய்ந்த பற்களை...



படத்தில் உள்ள செயற்கை பல் குப்பிகள் பொருத்தி...



... சரி செய்து விடலாம்.

ஒரு பல்லோ, பற்களோ, பல் மூடியோ செயற்கையாகப் பொருத்தும் போது தாடை இயக்கத்துக்கும் மற்ற பற்களுக்கும் பொருந்தும் அளவு துல்லியமாக வடிவமைக்கப்பட வேண்டியுள்ளது.

கீழ்பற்களை மாற்றி செயற்கைப் பற்களை பொருத்திய பின், தாடை இயங்கும் போது மேல்பற்களுடன் சரிவர பொருந்த வேண்டும். இல்லையேல் பெரும் தொல்லையாக இருக்கும்.

பிளாஸ்டிக், பைபர் கிளாஸ், உட்பட பலவகை கலவையில் செயற்கைப் பற்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பற்களை செயற்கையாகப் பொருத்து முன்பு, பல்மருத்துவர் நோயாளியை பரிசோதிக்கிறார். அளவெடுத்து வடிவமைத்த பல்லை பொருத்துகிறார். ஒரு பல்லாக இருந்தால் பற் சீமெந்து கலவை கொண்டு பொருத்தப் படுகிறது. எல்லாப் பற்களையும் அகற்றி பொருத்தும்போது இரு பக்கமும் கிளிப் பொருத்தப்படுகிறது. பல்செட்டை அவ்வப்போது அகற்றி சுத்தம் செய்யலாம்.

செயற்கைப் பற்கள் பொருத்திய ஒரு மாதத்திற்குப் பின்னரே அதை சரிவர இயங்கவைக்க முடியும். என்ன இருந்தாலும் இயல்பான பற்கள் போல இவை இருக்காது. சற்று கடினமாகத் தான் இருக்கும்.

இப்போது மிக நவீன முறை செயற்கைப் பற்கள் வந்துவிட்டன. இயற்கைப் பற்களைப் போல முடிந்த வரை பயன்படுத்தலாம்.

பல்லின்றி இருந்தால் தோற்றம் பாதிக்கும். அதனால் தான் செயற்கைப் பல் பொருத்தப்படுகின்றது. சிறு வயதினருக்கு பற்கள் உடைந்து விட்டால் கூட அந்த குறையை செயற்கைப் பல் மூடிகள் மூலம் சரி செய்யலாம்.

### மருத்துவர் 'பதில்கள்

**1. எனது சேதமடைந்த பல்மீது செயற்கைப் பல் மூடி பொருத்திக் கொண்டுள்ளேன். சாப்பிடும் போது இது நொறுங்கி விடுமே என்று பயமாக உள்ளது!**

பதில்: சாதாரண அழுத்தத்தை செயற்கை பல் மூடி தாங்கும். கடினமாக உள்ள பொருளை பற்களிடையே கடிக்கும் போது கடினம் காரணமாக பல் மூடி உடையக் கூடும். கவனமுடன் இருத்தல் அவசியம்.

**2. முன் பல் உடைந்து விட்டால் பல்மூடி தான் ஒரே தீர்வா?**

பதில்: அப்படியில்லை. சேதமடைந்த பல்லில் உடைந்த பகுதியில் மட்டும் செயற்கை பல் ஓடு வைத்து நவீன மெழுகு சாதனத்தை பூசி பொருத்தி விடலாம்.

எனினும் நிரந்தரப் பலன் பல்மூடியில் தான்.


**3. பல் செட் வயதாக ஆக தளர்ந்து விடுகிறது. இதற்கு என்ன வழி?**

பதில்: ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை பல் செட் மாற்ற வேண்டும். இயற்கைப் பற்கள் இல்லாததால் தாடை எலும்புகள் வலுவிழந்து தட்டையாகி விடுகின்றன. பல் செட் தளர்வாக இது தான் காரணம்.

## சரியா? தப்பா? ஏன்-எதனால்?

**1.மலை உச்சியில் நின்று கீழே பார்க்கும் போது தலை கிறுகிறுக்கிறதே ஏன்?**

பதில்: இது ஒருவகை தலைக் கிறுகிறுப்புதான். பதட்டத்தினால் ஏற்படும். உணர்ச்சி பூர்வமான தலை கிறுகிறுப்பு இது. மலை உச்சியில் இருந்து கீழே பார்க்கும் போது, இதில் விழுந்தால் என்னவாகும் என்ற அச்சம் குப்பென்று மூளையில் பாய அதனால் ஒக்சிஜன் குறைந்து, தலைக் கிறுகிறுப்பு ஏற்படுகிறது. இதனால் உடனடியாக அமர்ந்து சற்று நேரம் ஓய்வெடுப்பது நல்லது.



**2. தலை கிறுகிறுப்பு ஏற்படும் போது முழங்கால்களுக்கிடையே முகம் புதைக்கச் சொல்வது ஏன்?**

பதில்: இதற்கு இரு காரணங்கள் உண்டு. மூளைக்கு ஒக்சிஜன் அளவை அதிகரிக்க இப்படி முழங்கால் இடையே முகம் புதைத்தால் நல்லது. இந்த தலை கவிழ்ந்த நிலையில் ஒக்சிஜன் அதிகமாக மூளைக்கு போகிறது.

இரண்டாவது. இப்படி செய்தால், கண், காது, முதலான எல்லா பகுதிகளும் சீரான நிலைக்கு வர உதவுகிறது.

**3. பைலட்கள் விமானத்தில் பறக்க முன்பு டொனிக் குடிக்கக் கூடாதா? ஏன்?**

பதில்: டொனிக்குகளில் ஆஸ்பிரின், ஹிஸ்டாமின் போன்றவை இருப்பதால், பைலட்கள் உயரப் பறக்கும் போது, மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் சீரான தன்மை பாதிக்கப்படும். எனவே டொனிக் குடிக்கக்கூடாது என்கிறார்கள்.

**4. குளவி கொட்டினால் உடனடியாக ஆஸ்பிரின் சாப்பிடுவது நல்லதா?**

ப: ஆஸ்பிரினால் கெடுதல் இல்லை. வலியை போக்கும். கடிபட்டால் முதலுதவி எடுபடாமல் போனால் டாக்டரிடம் காண்பிப்பதே சரியானது.

**05. தேனீ-குளவிக் கடிக்கு வேறுபாடு என்ன?**

ப: தேனீ கொட்டினால் அதன் கொடுக்கு கடிபட்ட இடத்தில் வெளியே தெரியும். குளவி கொட்டினாலும் கொடுக்கு இருக்கும்; என்றாலும் சுலபமாக தெரியாது. இரண்டு கடிகளுமே தொந்தரவுதான் என்பதால் டாக்டர் ஆலோசனை பெறுவதே சரி.

**06. நாய் கடித்தால் உடனே டாக்டரிடம் போக வேண்டுமா? முதலுதவி இல்லையா?**

ப: நாய் கடித்தால் அதன் கிருமிகள் மனித உடலில் பரவ வாய்ப்புண்டு. டாக்டர் பரிசோதித்து ஊசி மருந்து போட்டு சரி செய்வார். ரேபிஸ் கிருமி தாக்கிய நாய் கடித்தால் அந்த நோய் நமக்கு பெரும் தொல்லைதரும்.

**7. கொசு கடித்தால் பெரிதாக வீங்கிவிடுகிறதே! இது அலர்ஜியா?**

ப: கொசுக்கடி தானாக மறைந்துவிடும். அடிக்கடி பெரிய அளவில் வீக்கம் ஏற்பட்டால் டாக்டரின் ஆலோசனை பெறுவது நல்லது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி



## அட.. உலா அது வானத்து மேலே!

* * *

நீருக்குள் பாயும் போட்டி. ஃபின்லாந்தின் தலைநகரான 'ஹெல் சிங்கி' என்னுமிடத்தில் நடைபெற்றது. 12 பேர் கொண்ட குழு ஒன்று பட்டிகளால் தம்மை ஒன்றிணைத்துக் கொண்டு விமானத்தில் இருந்து குதித்தது. வானத்தில் இருந்து நீருக்குத் தாவிய சாதனை உலக சாதனையாகிவிட்டது. சாகசத்தில் ஆசை.

* * *

## முக்காலா.. முக்காபலா.. ஓ.. லைலா

'ஏப்' என்று அழைக்கப்படும் மனிதக் குரங்குகளில் ஆண் குரங்குகள் காதல் லீலைகளில் படு கில்லாடி ரகம்.

வயதானாலும் வாலிப ஆசை போகாது. முக்காலா முக்காபலா...ஓ....லைலா என்று பாடாதது மட்டும் தான் குறைச்சல்.

பெண் மனிதக் குரங்குகள் வயதானால் காதல் லீலைகளில் நாட்டம் காட்டுவதில்லை. ஆனால் ஆண் குரங்குகள் விடாமல் துரத்துவதுண்டு.

படத்தில் இருப்பது ஆண் மனிதக் குரங்கு. 'ஜவன்' என்று பெயர் வயது 30. ஜவனுக்கு ஒரு காதலி உண்டு. பெயர் மெல்லி. வயது 26. ஜவனைக் காதலித்த மெல்லி இப்போது ஒதுங்கி விட்டது. ஜவன் விடவில்லை பின்னால், திரிந்து சீண்ட மெல்லிக்கு பொல்லாத கோபம் வந்துவிட்டது.

மெல்லியிடம் இருந்து ஜவனைப் பாதுகாக்க தனிக் கூண்டில் அடைத்து விட்டனர். ஏக்கத்தில் தவிக்கிறது ஜவன். மெல்லி...ஓ...மெல்லி...முக்காலா முக்காபலா....




## என் இனமோ அட என் இனமோ?



ருமேனியாவில் அழகான நாய்களை வைத்து ஒரு கண் காட்சி நடைபெற்றது. கண் காட்சியைப் பார்க்க ஒரு நவ நாகரீக மங்கை நளினமாய் வந்தார். அவர் அணிந்துவந்த ஆடையின் வர்ணம் தன் தோல் நிறத்தில் இருந்ததைக் கண்ட நாயாருக்கு அதிர்ச்சி. ஆச்சரியம்! அந்த நங்கையைத் தன் இனம் என்று நினைத்துவிட்டாரோ தெரியவில்லை. உற்று நோக்குகிறார். எதற்கும் இனிமேல் ஆடைகளின் வர்ணங்களை தேர்ந்தெடுக்கும் போது கவனம் தேவை.

## உள்ளத்தில் வல்ல உள்ளம்





எரிக் ஹைஸிமித் நல்ல திடகாத்திர இளைஞர். விபத்தொன்றில் சிக்கியபோது கால் ஒன்று பறிபோய்விட்டது. ஒடிந்து போய் மூலையில் சுருண்டுவிடவில்லை. உள்ளத்தில் உறுதி கொண்டார். டென்னிஸ் ஆடக் கற்றுக்கொண்டார். களத்தில் இறங்கினார்.

இவரை வெல்வது சுலபம் என்று கருதியவர்களை கதிகலங்கவைத்து மூன்று போட்டிகளில் வெற்றிக் கனி பறித்துக்கொண்டார். இப்போது டென்னிஸ் போட்டிகள் மூலம் வருடத்தில் 20 அயிரம் அமெரிக்க டொலர்கள் வருட வருமானமாகக் கிடைக்கிறது.

29 வயதான எரிக் அமெரிக்க டென்னிஸ் சங்கத்தில் ஒரு உறுப்பினர். "மனதில் உறுதி வேண்டும்."

www.padippakam.com

நன்றி - நூலகத்

# 97

## குஷ்பு அலை மீண்டுமா?

'சின்ன வாத்தியார்' படத்தில் பிரபு-குஷ்பு ஜோடி மீண்டும் ஒரு கலக்குக் கலக்கும் என்று நம்பப்படுகிறது. அந்த நம்பிக்கையில் இப்போதே குஷ்புவை ஒப்பந்தம் செய்துவிட பல தயாரிப்பாளர்கள் ஓடுப்பட்டுத் திரிகிறார்கள்.

ஜெயராமுடன் குஷ்பு நடித்துவரும் 'முறைமாமன்' படமும் நன்றாக வரும் என்று சொல்கிறார்கள்.

மார்க்கெட் போனபின்னர் மீண்டும் எழுந்து மார்க்கெட் பிடிக்கும் நடிகைகள் குறைவு.

குஷ்பு விழுந்து எழுந்து மீண்டும் ஒரு ரவுண்ட் வரத் தொடங்கியிருக்கிறார். கவர்ச்சியை விட குணசித்திரப் பாத்திரங்களை அவர் தெரிவு செய்து வருவது புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது.

## ஆணழகன் ஓ.கே.

அப்பா தியாகராஜன் இயக்கத்தில் அன்பு மகன் பிரசாந்த் நடித்துள்ள படம் ஆணழகன். திரைக்கு வந்துள்ளது. நகைச்சுவையை நம்பி எடுத்திருப்பதால் பெண் வேடத்தில் பிரசாந்த்தை அதிக காட்சிகளில் நடிக்கவைத்திருக்கிறார்கள். பம்பாய் இறக்குமதி அந்த சனேஹா... யப்பா... கவர்ச்சியை கொட்டோ கொட்டென்று கொட்டியிருக்கிறார்.

## நடிகைகள் கார் ஓட்டப் போட்டி

சென்னையில் ஸ்ரீபெரும்புதூரில் (ராஜீவ் கொல்லப்பட்ட இடம்) கார் ஓட்டப் பந்தயம் ஒன்று நடந்தது. வித்தியாசமாக இருக்கட்டும் என்று நடிகைகளை கார் ஓட்ட வைத்தார்கள்.

குஷ்பு, ஐஸ்வர்யா, ரேவதி, சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர். ஐஸ்வர்யாதான் முன்னே வந்து கொண்டிருந்தார். ஒரு திருப்பத்தில் ஐஸ்வர்யாவின் கார் தடுமாறியது. குஷ்புவின் கார் அதுதான் சமயம் என்று முன்னுக்கு வந்துவிட்டது. 140 கி.மீற்றர் வேகத்தில் குஷ்புவின் கார் பறந்தது. முதல் பரிசு குஷ்புவுக்குத்தான். கார் ஓட்டுவதில் குஷ்பு கில்லாடிதான்.

## வாலிப மயக்கம்

தாம்பத்ய உறவு பற்றி விளக்க தமிழில் படங்கள் குறைவு. இதைவிட்டு மிக வருந்திய இளங்கோ என்னும் தயாரிப்பாளர் 'வாலிப மயக்கம்' என்னும் பெயரில் படம் ஒன்றை தயாரிக்கிறார். ஆட் கொல்வி தோயான 'எய்ட்ஸ்' பற்றியும் நன்கு விளக்கப் போகிறார்களாம். கவர்ச்சிக்கும் பஞ்சமிருக்காது.



சத்தியராஜ்
படம்-வில்லாதி வில்லன்

## என் உயிர்த் தோழி

யுவராணியும், செண்பகமும் உயிருக்குயிரான தோழிகள். இருவரும் சேர்ந்து அரட்டை அடிக்க ஆரம்பித்துவிட்டால் அவ்வளவுதானாம்.

'பாட்ஷா' படத்தில் நடிக்கும் போது ஏற்பட்ட நெருக்கம்தான் இது. தற்போது 'பசும்பொன்' படத்தில் இரு தோழிகளும் நடித்து வருகின்றனர்.

## ரஞ்சிதாவின் சோகம்

'தொட்டில் குழந்தை' படத்தில் கை, காலைத் தூக்கி சண்டை போட்டு நடித்தும் பயன் இல்லை. படம் தோல்விதான். அதனால் ரஞ்சிதா வருத்தமாக இருக்கிறார். 'தொட்டில் குழந்தை' படத்தில் நடிப்பதற்கு முன் விஜயசாந்தி நடித்த படங்களை ஒன்று விடாமல் வீடியோவில் போட்டுப்பார்த்தாராம் ரஞ்சிதா. எல்லாமே வேஸ்ட்.

## புடவை மோகம்.

திருமணம் செய்து கொள்ள முன்னர் நவநாகரிக உடைகளில் மோகமாக இருந்தார் ரேவதி. திருமணத்திற்கு பின்னர் புடவைக்கு மாறினார். தற்போது புடவைகளை சேகரிப்பதில் கொள்ளை ஆசை. எங்கு போனாலும் புடவை கட்டித்தான் போகிறார்.

## நகைச்சுவை 'மேன்'

'லக்கிமேன்' படத்தில் கார்த்திக் கவுண்டமணி, செந்தில் கூட்டணி நகைச் சுவையால் அமர்க்களப்படுத்தியிருக்கிறதாம். படம் வந்த பின் கார்த்திக் நகைச்சுவை 'மேன்' என்று அழைக்கப் படுவாராக்கும்.

## கிசு-கிசு நியூஸ் இரகசியத் திருமணம்?

'மொஹ்ரா' படத்தின் வெற்றிக்குப் பின்னர் ரவீனா ராண்டனும், அக்ஷய்குமாரும் நெருக்கமாகப் பழகிவந்தனர். தனிமையான சந்திப்புகளும் கிசு-கிசுக்கப்பட்டன.

இதனைவடுத்து வெளியாகியுள்ள செய்திதான் பரபரப்பானவை.

ரவீனாவும், அக்ஷய் குமாரும் இரகசியத் திருமணம் செய்து கொண்டுள்ளதாக பம்பாய் சினிமா வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

அக்ஷய் குமாரின் வீட்டில்தான் தற்போது ரவீனா ராண்டன் தங்கியிருக்கிறாராம்.

இது பற்றி ரவீனாவிடம் கேட்டால் முகம் மட்டும் சிவக்கிறதாம். பதில் மட்டும் வரவேயில்லையாம்.

## சேஷன் பாணியில்!

இந்திய தேர்தல் அதிகாரி சேஷன் கண்டிப்பான பேர்வழி. அவரது பாணியில் தேர்தல் அதிகாரியாக நடிக்கிறார் விஜயகுமார். படம் 'செங்கோட்டை'.

இது பற்றி அறிந்த சேஷன் விஜயகுமாரை சந்திக்க விருப்பம் தெரிவித்து தகவல் அனுப்பியுள்ளாராம்.

## நக்மாவின் காதல்

அழகுக்குன்று நக்மா தீவிரமாகக் காதலிப்பது இந்தி நடிகர் சிம்பு கபூரை. இது பற்றி நக்மா சொல்வது இது: திருமணம் எப்போது? இந்தக் கேள்விக்கு நக்மா சொல்லும் பதில்: "எங்க இரண்டு பேருக்கும் இளம் வயதுதான். இப்போதே ஏன அவசரப்பட வேணும்? ஆனால் கண்டிப்பா திருமணம் செய்துக்குவோம்" என்கிறார் நக்மா.



மீனா-கார்த்திக்
படம்-மரு மகன்

## "அதிஷ்டம் வேணுமுங்கோ"

'நாட்டாமை' படத்தின் பிரமாத வெற்றி அதன் பின்னர் வந்த 'வேலுச்சாமி' தோல்வி. இரண்டுமே சரத்குமாரை பாதிக்கவில்லை. அவர் என்ன சொல்கிறார்? "ரசிகர்களின் ரசனை நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது. இதில் ஒரு வெற்றிப்படம் கொடுப்பதை அதிஷ்டம் என்றுதான் சொல்லுவேன்." என்று கூறும் சரத்குமாரின் கையில் 96ம் ஆண்டுவரை நடிக்க படங்கள் இருக்கின்றன.

## வல்லவர்கள் ராச்சியம்

கமல் நடிக்கும் 'இந்தியன்' படத்தில் ஒரு விசேஷம். பல வல்லவர்கள் ஒன்று சேருகிறார்கள். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் படப்பிடிப்பை துவக்கி வைத்தார். பம்பாய் சூப்பர் அழகி மனிஷா கொய்ராலா கதாநாயகி. ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார். இயக்குவது 'ஜென்டில் மேன்' 'காதலன்' படங்களின் இயக்குநர் ஷங்கர். வசனம் சூப்பர் எழுத்தாளர் சுஜாதா. பாடல்கள் வைரமுத்து. இந்த வல்லவர்கள் எப்படி அசத்தப் போகிறார்கள் என்று பார்க்கலாம்.


## அங்கும் — இங்கும் கவர்ச்சி

யார் வருவார்கள் அழைக்க? என்று காத்துக் கிடந்தவர் சங்கவி. இப்போது கதையே வேறு. சங்கவி படு படு பிஸி. 'லக்கிமேன்' படத்தில் நடித்துவரும் சங்கவி படப்பிடிப்புக்கு வரவில்லை. தெலுங்கு படத்தில் நடிக்கப் போய்விட்டார். கார்த்திக் தொலைபேசியில் தொடர்புகொண்டு அழைத்த பின்னர்தான் வந்தாராம். நான் நடித்துக் கொடுத்துவிட்டு தெலுங்கில் நடிக்க ஓடிவிட்டாராம். எல்லாம் 'ரசிகன்' படத்தில் துணி குறைந்த துணிச்சலால் வந்த லாபம்தான்.

## பிரபு கண்டுபிடித்த மருந்து.

கல்லூரிப் பேராசிரியரான பிரபு கடுமையான ஆராய்ச்சி செய்து அதிசய மருந்து ஒன்றை கண்டுபிடிக்கிறார். அந்த மருந்தை சாப்பிட்டதால் மாணவன் பேராசிரியராகவும், பேராசிரியர் மாணவனாகவும் மாறினார்கள். இதனால் ஏற்படும் குழப்பங்களை சுவாரசியமாகச் சொல்லும் படம் 'சின்ன வாத்தியார்'. பிரபு இரட்டை வேடம். குஷ்பு-ரஞ்சிதா ஜோடிகள்.

ரஜினியிடம் எம்.ஜி.ஆர். சொன்னது "சினிமா மூலம் சமூகத்தை திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும். நடிகர்கள் முன் மாதிரியாக இருந்தால்தான் மக்கள் மத்தியில் மரியாதை இருக்கும்." என்று எம்.ஜி.ஆர். என்னிடம் கூறினார். இவ்வாறு ரஜினிகாந்த் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.



விக்னேஷ்-அமிர்தா
படம்-டேக் இட் ஈஸி ஊர்வசி

## சினிமா பம்பாய் விமர்சன

தம்நாட்டு தேசிய தொலைக்காட்சியிலும் ஒளிபரப்ப வேண்டிய படம்.

பாபர் மசூதி இடிப்பும் அதன் பின்னர் நடக்கும் இந்து-முஸ்லிம் கலவரமும் மன[illegible] வண்ணம் சொல்லப்பட்டிருக்கிறது.

ராஜீவ் மேனனின் ஒளிப்பதிவில் நிஜமான கலவரத்தையே காணும் உணர்வு [illegible]

முஸ்லிம் பெண் மனிஷாவை இந்துவான அரவிந்தசாமி காதலிக்கிறார். ம[illegible] வருகிறது. இருவரும் பம்பாய்க்கு போய் வாழ்கிறார்கள். இரண்டு பிள்ளைகள் [illegible] காதலை எதிர்த்த குடும்பங்கள் பம்பாய்க்கு தேடிவந்து தாமும் ஒன்றுபடும் [illegible] பிழாய்ப்போன கலவரம் வந்து சேருகிறது.

இந்துவான நாசர் 'குர்ஆனை' நெஞ்சில் தாங்கியபடி செத்துப்போகிறார். [illegible] பிரிகின்றன. "இந்து என்றால் என்ன?, முஸ்லிம் என்றால் என்ன?" என்று குழந்தை [illegible]

அரசியல்வாதிகள் திட்டமிட்டு தமது நலன்களுக்காக கலவரத்தை தூண்டுவ[illegible] அரவிந்தசாமி சுட்டிக்காட்டி "கொளுத்திறது எண்டா அவங்களைப் போய் கொ[illegible] என்பதும் நெத்தியடி.

மனிஷா-அரவிந்தசாமி காதல் காட்சிகள் அபாரமாக படமாக்கப்பட்டுள்ளது. [illegible]

சோனாலியின் கவர்ச்சி நடனமும் உண்டு சிறுவர்களை ஆடவைத்தும் ஒரு [illegible] வருகிறது.

நாசர் வியக்கவைக்கிறார். அற்புதமான நடிகரய்யா! கிட்டியும் நன்றாக செ[illegible]

ஏ.ஆர்.ரகுமானின் புகழை உயர்த்தியுள்ளது 'பம்பாய்' பட இசை. மணி[illegible] துணிச்சலை நிச்சயம் பாராட்டலாம். இதில் இருட்டுக் காட்சிகளை குறைத்துள்ளார் [illegible] ஆனால் வசனங்களை குறைத்தது சரியில்லை. சில வசனங்கள் செவிக்குள் வி[illegible] மொத்தத்தில் சிறந்த படம். எல்லோரும் பார்க்க வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மினி சினி

நடிகர் திலகத்தின் 'சொர்க்கம்' படத்தில் இடம்பெற்ற 'பொன்மகள் வந்தாள், பொருள்கோடி தந்தாள்...!' பாடலைப் போன்று சரத்குமார்-மீனா நடிக்கும் கூலி படத்தில் ஒரு பாடலை எடுத்துள்ளார் பி.வாசு.

ஓரிரு படங்களில் நடித்து வந்த சார்லி, பொங்கலுக்கு வெளியாகிய கே.பாக்கியராஜின் 'ஒரு ராஜகுமாரி' படத்திற்குப் பின்னர் அதிக படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

நாகார்ஜுன்-ஸ்ரீதேவி நடித்து வெற்றி பெற்ற 'கோவிந்தா கோவிந்தா' என்ற தெலுங்குப் படத்தை முதலில் 'நாட்டுக்கு நல்ல தீர்ப்பு' என்ற பெயரில் மொழி மாற்றி வெளியிடத் தீர்மானித்திருந்தனர். தற்போது இந்தப்படம் 'கிரீடம்' என்ற பெயரில் வெளிவர இருக்கிறது.

கடந்த வருடம் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற ஷோபனா, முதன் முறையாக மலையாளப் படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறார். இப்படத்தை பாசில் இயக்கவுள்ளார்.

பிரபு இரட்டை வேடத்தில் நடித்து வரும் 'சின்னவாத்தியார்' படத்தை அடுத்து இரண்டு தெலுங்குப் படங்களை இயக்கவுள்ளார் சிங்கீதம் சீனிவாசராவ். அவற்றில் ஒன்றில் சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கிறார்.

எஸ்.ஏ.சந்திரசேகரனின் 'தேவா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான சுவாதி இப்போது மூன்று படங்களில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

ஆர்.கே.செல்வமணி இயக்கிய 'ராஜமுத்திரை' படத்தில் உள்துறை மந்திரி வேடத்தில் நடித்திருந்தார் சென்னை பாராளுமன்ற உறுப்பினரான இரா.அன்பரசு. இவர் மீண்டும் ஆர்.கே.செல்வமணியின் இயக்கத்தில் 'மக்கள் ஆட்சி' படத்தில் நடித்து வருகிறார்.

தற்போது தமிழ்ப்படங்கள் உடனுக்குடன் இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாராகி வருகிறது. இந்த வரிசையில் நெப்போலியன் நடித்த 'சீவலப்பேரிபாண்டி' இந்தியில் தயாராகிறது. இந்திப் பதிப்பில் பாண்டியாக மிதுன் சக்கரவர்த்தி நடிக்கிறார்.

'சதிலீலாவதி'யை அடுத்து கமல் தெலுங்கில் தயாரிக்கும் படத்தில் அர்ஜுன்-நாஸர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தை ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் இயக்குகிறார்.

ஐஸ்வர்யா மீண்டும் நடிக்க வந்துள்ளதால் அவர் நடித்து பாதியில் நின்று போயிருந்த 'பத்திரகாளி மைந்தன்', 'அர்ஜுனன்' ஆகிய படங்களின் படப்பிடிப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

## ஸ்ரீதேவிக்கு குளு-குளு

ஸ்ரீதேவி சொந்தமாக குளு-குளு வேன் ஒன்று வைத்திருக்கிறார். அதில்தான் பயணம் செய்து வருகிறார்.

ஸ்ரீதேவியின் திருமணம் எப்போது? பம்பாய் படவுலகில் இதுதான் நம்பர் நட்சத்திர மதிப்புள்ள கேள்வி.

ஸ்ரீதேவியின் பதில் என்ன? "கண்டிப்பாக நான் திருமணம் செய்து கொள்வேன். ஆனால் ரகசியமாக அது நடக்காது. எல்லோருக்கும் தெரியும்படிதான் என் திருமணம் நடக்கும்" என்கிறார் ஸ்ரீதேவி.

சரி, அதுதான் எப்போது? சொல்லவே மாட்டேன் என்கிறாரே.



ரஹுமான்-சபீதா பெரேரா
படம்-இசைப்பயணம்

## இலங்கை அழகிகள் கலக்கல்!

'இசைப்பயணம்' படத்தில் நடித்துவருகிறார் 'சபீதா பெரேரா' கவர்ச்சி காட்டி கோடம்பாக்கத்தையே அதிரவைத்து வருகிறார்.

'சபீதா' தாராளமாக கலக்கினால் தமிழ் பட தயாரிப்பாளர்கள் பம்பாய்க்கு போகாமல் புது முகங்கள் தேடி கொழும்புக்கு வந்துவிடப் போகிறார்கள்.

'இசைப்பயணம்' படத்தில் நடித்துவரும் இன்னொரு இலங்கை நடிகையின் பெயர் சரோஜா பீலி. அவரும் குட்டையான துணியோடு நடித்துக் கொண்டிருக்கிறார். இசைப்பயணமா? கவர்ச்சிப் புதையலா?

## காப்பாற்ற வந்த மூர்த்தி

கீதா துடிப்பும், துணிச்சலுமிக்க இளம் பத்திரிகையாளர். உள்ளூர் அரசியல் வாதிகள் சிலர் வெளிநாட்டுக் காரர்களுடன் கடத்தல் தொழில் செய்வதை மோப்பம் பிடித்து விடுகிறார் கீதா. ரகசியமாக புகைப்படமும் எடுத்து விடுகிறார். கடத்தல்காரர்கள் அதனை அறிந்து அவளைத் தூக்க, அதுக்கே வந்து தடுக்கிறார் மூர்த்தி. அதுதான் விஜயகாந்த். பயங்கரமான சண்டைக் காட்சியும் படமாக்கப்பட்டது இது எந்தப் படத்தில் என்கிறீர்களா? 'திருமூர்த்தி' படத்தில். விஜயகாந்த்தை இரண்டுபேர் காதலிக்கிறார்கள். ஒருவர் புதுமுகம் ரவளி, மற்றவர் செண்பகம். கீதாவாக நடிப்பது செண்பகம். கவுண்டமணி, செந்தில், மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்குநர் ஆனந்தராஜ்.

## "சசிகலாவை தூக்கு"

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உயிர்த் தோழி சசிகலா. அந்த சசிகலா பற்றி நிறைய கிசு-கிசு மற்றும் சர்ச்சைகள். மன்சூர் அலிகானின் 'வாழ்க ஜனநாயகம்' படத்தில் சசிகலா என்று பெயர் வரும் வசனத்தை தூக்கச் சொல்லிவிட்டதாம் தணிக்கைக் குழு. மன்சூர் அலிகான் மறுத்துவிட்டதால் பிரச்சனை டில்லிவரை சென்றுவிட்டது.



சரண்யா-பிரபு
படம்-பசும்பொன்

## சென்னை அழகி.

'பாட்டு பாடவா' படம் நம்மூர் தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்பட்டது. படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள லாவண்யா சென்னை அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். 'மிஸ் மெட்ராஸ்' லாவண்யா முதலில் நடித்த படம் 'தங்க கொலுசு' இது வரை அந்தப் படம் வெளியாகவே இல்லை. தற்போது லாவண்யா தீவிரமாக ஈடுபட்டிருப்பது உடலை சற்று குண்டாக்கும் முயற்சியில்.

## வேட்டியை மறந்த ராசா.

'என் ராசாவின் மனசிலே' 'அரண்மனைக் கிளி' ஆகிய இரண்டு படங்களிலும் வேட்டியோடு நடித்து முடித்தவர் ராஜ்கிரண். "வேட்டி சட்டையோடு நடிப்பதையே விரும்புகிறேன்" என்றும் சொன்னவர் ராஜ்கிரண்.

'எல்லாமே என் ராசாதான்' படத்தில் பேண்ட்-சட்டை அணிந்து நடிக்கிறார். கொள்கையை மாற்றிவிட்டாரா? இல்லையாம். ஒரு கனவுப் பாடல் காட்சிக்காக மட்டுமே அப்படி நடித்துள்ளாராம். 'தொடர்ந்து வேட்டி சட்டையில்தான் நடிப்பேன்' என்கிறார்.



டிஸ்கோ சாந்தி
படம்-துறைமுகம்

## மனிஷா ஓ.கே. ஷில்பா...?

'பம்பாய்' படத்தில் மிகப் பிரமாதமாக நடித்து தமிழ் ரசிகர்களையும் தன் பக்கம் இழுத்து போட்டுக்கொண்டார் மனிஷா கொய்ராலா. அதனால் மனிஷா கமலோடு ஜோடியாக நடிக்கும் 'இந்தியன்' படம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியில் கலக்கிய ஷில்பா ஷெட்டி 'மிஸ்டர் ரோமியோ' மூலம் தமிழ் ரசிகர்களை கொக்கி போட்டு இழுப்பாரா என்பது தான் தற்போதைய கேள்வி.

பிரபு தேவாவின் நடன அசைவுகள் ஷில்பா ஷெட்டிக்கு களுக்கு வரச் செய்து ஓட விரட்டாமல் இருந்தால் சரிதான்.



ஷில்பா ஷெட்டி
மிஸ்டர் ரோமியோ

## வெட்டிப்பார்

"என்னைப்பார்-கன்னைப்பார்
ஏக்கம் கலந்து பார்.
இடுப்பை வளைத்து வெட்டிப்பார்
இதயம் கடுதா தொட்டுப்பார்"

பாடல்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
1960s

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

# விருந்துக்கு செல்லப் போகிறீர்களா?

## இதைப் படியுங்கள்-உதவும்.



### எப்படி...எப்படி...விருந்து சிறப்பது எப்படி?

விருந்தோம்பல் ஒரு அரிய கலை. தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள். 'விருந்தினர்' மோப்பக்குழையும் அனிச்சம்பூக்கள். எனவே விருந்தளிப்பதில் அதிகம் கவனம் தேவை. விருந்தளிப்பவர்கள் விருந்துக்கு அழைக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலைச் சரிபார்த்து அழைக்க வேண்டும்.

தங்களால் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமான பேர்களை அழைத்துவிட்டு சரிவர உபசரிக்க இயலாமல் திண்டாடக்கூடாது. விருந்தின் நேரம் விருந்துக்கு அழைக்கப்பட இருப்பவரின் சௌகரியமான நேரத்தை ஒத்திருக்க வேண்டும்.

விருந்தளிக்கும் அறை நல்ல வெளிச்சமாகவும், காற்றோட்டமாகவும் இருக்க வேண்டும். நல்ல வாசனை மிக்க ஊதுபத்திகளை ஏற்றி வைக்க வேண்டும். மலர்களாலும் கைவினைப் பொருட்களாலும் அறையை அலங்கரிக்கலாம். விலையுயர்ந்த பொருட்களை விருந்தளிக்கும் அறையில் வைப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் விருந்தாளிகளின் குழந்தைகள் அவற்றை எடுத்து உடைத்து விடலாம். விருந்தினர்-விருந்தளிப்பவர் இருவர் மனமும் இதனால் புண்படலாம். வரும் விருந்தாளிக்கேற்ப விருந்தளிப்பவர் உடை அணிய வேண்டும். விருந்தினர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்.

வரும் விருந்தினர் ஒவ்வொருவரிடமும் சில நிமிடங்களாவது தனித்தனியே பேசி வரவேற்று உபசரிக்க வேண்டும். விருந்து முடிந்து விருந்தினர் கிளம்பும்போது விருந்தளிப்பவர் வீட்டு வாசல் வரை வந்து இன்முகத்தோடு வழியனுப்ப வேண்டும்.

விருந்தளிப்பவர் தன்னைப் பற்றியும், தன்குடும்பத்தைப் பற்றியும், தன் குடும்பம், தன் செல்வ வளமை இவற்றையே பெருமையாகப் பேசிக்கொண்டிராமல் விருந்தாளிகளையும் பேச விட வேண்டும். சாப்பாட்டு மேசையில் சாப்பாட்டுப் பண்டங்களை நிறைய வைக்காமல் தேவைக்கேற்ப வைத்துப் பரிமாறவும். கைகழுவும் இடத்தில் புதிய சவர்க்காரம், கைதுடைக்கும் துண்டுகள்(NAPKINS) போன்றவற்றை வைக்கவும். அழைக்கப்படும் அனைவருக்கும் பல விஷயங்களில் ஒத்த கருத்துக்கள் இருக்கும்படி அழைக்கப் படுபவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிடில் விருந்துக்கூடம் விவாதமேடையாகி விடும் சூழ்நிலை ஏற்படும்.

**விருந்தினர் கவனத்திற்கு.**

விருந்தளிப்பவரைப் போலவே விருந்துக்குச் செல்பவர்கட்கும் சில பொறுப்புக்கள் உள்ளன. விருந்துக்கான அழைப்பை ஏற்கும்போது தன்னால் செல்ல முடியுமா என்பதை யோசித்து அழைப்பை ஏற்க வேண்டும்.

அழைப்பினை ஏற்றபின் தவிர்க்க முடியாத காரணத்தினால் போக இயலவில்லை எனில் முன்கூட்டியே விருந்தளிப்பவருக்கு வர இயலாமைக்கான காரணத்தைத் தெளிவாகக் கூறிவிட வேண்டும்.

விருந்திற்கான காரணத்தை அறிந்து அதற்கேற்ப பரிசுகளை அதிக பொருட்செலவின்றி அளிக்க வேண்டும். மிக விலை உயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுத்தால் வாங்கிக் கொள்பவர்கட்கு அதேபோன்று திருப்பி அளிக்க இயலாவிடில் அவர்கள் மிக மனச் சங்கடப் படுவார்கள்.

ஏதும் காரணங்கள் இன்றி நண்பர்கள் ஒன்று கூடும் விருந்து என்றாலும் கூட மலர்க்கொத்துக்களைப் பரிசாக அளிக்கலாம்.

விருந்திற்குச் செல்லும்போது நேரம் தவறாமை மிக முக்கியம். தவிர்க்க இயலாமல் தாமதமாகச் சென்றால் மன்னிப்புக் கேட்டுவிடவும்.

விருந்தின் காரணத்தை அறிந்து அதற்கேற்ப உடையணிய வேண்டும். காரணம் தெரியாவிட்டால் எந்த மாதிரிக் கூட்டத்திற்கும் பொருந்தும் வகையில் உடையணிய வேண்டும். மிக சாதாரண உடையில் விருந்திற்குச் சென்றால் அது விருந்திற்கு அழைத்தவரை அவமானப்படுத்தியது போல் ஆகும்.

விருந்தினர் அனைவருடனும் பேச வேண்டும். தனியே உட்கார்ந்து புத்தகங்களைப் படித்துக்கொண்டிருக்கக் கூடாது. அதே சமயம் தாமே பேசி மற்றவர்களைப் பேசவிடாமல் அறுக்கக்கூடாது.

விருந்திலிருந்து கிளம்புவதையும் சரியாகத்திட்டமிட வேண்டும். விருந்து முடிந்தவுடன் உடனே கிளம்பக் கூடாது. சற்றுநேரம் விருந்தில் பரிமாறிய உணவுப் பண்டங்களையும், விருந்திற்கு அழைத்தவர்களையும் பாராட்டிப் பேச வேண்டும்.

# மின்னும் முக அழகு உங்களுக்கு

## உங்களுக்கேற்ற அருமையான யோசனைகள்

### ருக்கா நாதன்

**கோ**டை காலத்தில் முகத்தில் வறட்சி அதிகமாகி சொர சொரப்பும் பருவும் கரும்புள்ளிகளும் ஏற்பட்டு திண்டாடுகிறோம். நம் சருமத்தின் உள் பாகத்தில் கலங்கள் உள்ளன. அவற்றில் ஈரப்பசை குறையும் போது சருமம் காய்ந்து விடும். குளிர் காலத்தில் கூட ஈரப்பசையின்றி வறண்டிருக்கும் ஈரப்பசையை அதிகரிக்கச் செய்ய நார்ச் சத்துள்ள காய் கனிகளையும் நீர்ப் பசையுள்ள பூசணி, வெள்ளரி போன்றவைகளையும் சாப்பிட வேண்டும். அத்துடன் வெளிப்புறம் தடவிக் கொள்ளவும் கிறீம்கள் உள்ளன. இவை 'மொயிஸ்ரறைசிங்' கிறீம் எனப்படும்.




இவை தடவிக் கொள்வதால் நாள் முழுவதும் ஈரப்பசை இருப்பது போலவே இருக்கும். இதில் சேர்க்கப்படும் இரசாயனப் பொருட்களால் சிலருக்கு 'அலர்ஜி' ஏற்படலாம். அவர்கள் அவற்றைப் பூசிக் கொள்ளக் கூடாது. அவர்கள் இயற்கை மொயிஸ்ரறைஸரைத் தயாரிக்கலாம்.

வெள்ளரிக்காயை அரைத்து சாறை எடுத்து சிறிதளவு தயிர் சேர்த்து (தயிர் சேர்ப்பதால் நீண்ட நேரம் ஈரப்பசையாக இருக்கும்) சருமத்தில் தடவிக் கொள்ளலாம்.

உருளைக் கிழங்கை அரைத்து சாறெடுத்து ரோஸ் வாட்டர் சேர்த்து தடவலாம். இது முகத்தின் கருமையை போக்கும். வியர்வை நாற்றத்தை ரோஸ் வாட்டர் சேர்ப்பதால் குறைக்கலாம். வாசனையாகவும் இருக்கும்.

வீட்டில் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு நாலைந்து முறையும், அலுவலகம் செல்பவர்கள் இரண்டு முறையாவது தடவிக் கொண்டால் நல்ல பலனைத் தரும். வறட்சியாக இல்லாமல் புத்துணர்வுடன் இருக்கும்.

சிலருக்கு ஈரப்பசை தேவைக்கு அதிகமாக இருக்கும். மேக்கப் அவர்களுக்கு போட்டதும் வழியும். அவர்கள் எப்போதும் மேக்கப் போடுவதற்கு முன் ஐஸ்கட்டியை முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து போட்டால் சருமத் துவாரங்கள் அடைபட்டாற் போலிருக்கும். பிறகு முகக்காப்பு போட்டு அதன் பின்னர் மேக்கப் போட்டால் ஈரப்பசை அதிகரித்தால் பிரச்சனை வராது.



ஈரப்பசை குறைவாக உள்ளவர்கள் ஃபேசியல் மசாஜ் செய்து கொள்ள வேண்டும். மாதம் இருமுறை செய்யலாம். இதனால் சருமத்திற்கு பாதிப்பு வராது. மணிக்கட்டின் பின்புறம் என்ன நிறம் உள்ளதோ அதற்கு ஏற்ப முகத்திற்கு போடும் அடிப்படை வர்ணத்தினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்போதெல்லாம் 'திரவ மேக்கப் ஷேட்' கிடைக்கிறது. அதை உபயோகப்படுத்தி (இருப்பது போலவும் இல்லாதது போலவும் தோற்றமளிக்கும்) பிறகு காம்பேக்ட் பவுடரை போட்டு மிகுதி மேக்கப்பை செய்யலாம். சருமத்தில் எண்ணைப் பிடிப்பு அதிகமாக இருந்தால் ஐஸ் தேய்க்க வேண்டும். பிறகு மேக்கப் போடலாம். காய்ந்த சருமமாக இருந்தால் ஃபேசியல் கிறீம் தடவி முகம் முழுவதும் பூசியபின் மேக்கப் போடலாம். காய்ந்த சருமமாக இருந்தால் முட்டை வெள்ளைக் கருவும் தயிரும் கலந்து பத்து நிமிடம் ஊறும் படி முகத்தில் தேய்த்து விட்டு கழுவவும்.



எண்ணெய்ப் பசையுள்ள சருமமாக இருந்தால் முகம் சொர சொர வென்றிருக்கும். வறண்டு போய் விடும். கோடையில் வைட்பவுடர், ரோஸ் வாட்டர், முள்தாங்கிமட்டி சேர்த்து பூசி அரை மணி நேரம் கழித்து கழுவவும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

சுகந்தினி

### கொக்கோ மில்க் சொக்கலேட் பேர்ஃபி

**தேவையான பொருட்கள்:**

பால் மா-1/2 கிலோ
சீனி-1கிலோ
நெய்-தேவையானஅளவு
கொக்கோ பவுடர்-50 கிராம்
வனிலா எசென்ஸ்-1 தேக்கரண்டி
முந்திரிப்பருப்பு-100 கிராம்.

**செய்முறை:**

பால்மாவையும், கொக்கோ பவுடரையும் ஒன்றாகக் கலந்து சலித்துக்கொள்ளவும். அடிகனமான பாத்திரத்தில் சீனி மூழ்கும் வரை தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும். கொக்கோபவுடர், பால்மாக் கலவையை தூவி, வனிலா எசென்ஸையும் விட்டு நன்றாகக் கட்டியில்லாமல் கிளறவும். கிளறிய கலவையை ஏற்கெனவே நெய் தடவிய தட்டில் ஊற்றி சமமாகப் பரப்பி போடவும். செய்வதற்கு எளிமையானது ஒவ்வொரு துண்டின் மீதும் நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்பைப் பதித்து வைத்து அலங்கரிக்கலாம்.

## வீட்டுக்குறிப்புகள்



பிள்ளைகளின் சீருடைகள் நாளடைவில் மங்கலாகிப் பழுப்பு நிறத்தை அடைந்து விடுகிறதா? வெள்ளைத் துணிகளின் பழுப்பு நிறத்தைப்போக்க ஒரு வாளி தண்ணீரில் ஒரு கரண்டி பிளீச்சிங் பவுடரைப் போட்டுக் கொதிக்க வைத்து, அதில் வெள்ளைத் துணிகளை அரைமணி நேரம் ஊறவைத்துப் பிறகு துணிகளைக் கசக்கிப் பிழியுங்கள், பழுப்பு நிறம் போய்விடும். ஆனால், பிளீச்சிங் பவுடர் தண்ணீரில் நன்றாகக் கரைந்திருக்க வேண்டும்.

* * *





டொனிக் குடிக்கும் போது பாதி ரொனிக் கரண்டியில் தங்கி விடுகிறதா? இனி கரண்டியில் சிறிது நல்லெண்ணெயைத் தடவி விட்டு இப்போது வாயில் ரொனிக்கை ஊற்றிக் கொள்ளுங்கள்.

இப்போது கரண்டியில் ரொனிக் ஊற்றியதற்கான அடையாளமே இருக்காது.

* * *

## கைவேலைப் பகுதி



### விசிறி.

**தேவையானபொருள்** - தடித்த கடதாசி.

**செய்முறை:** 12 செ.மீ X 75 செ.மீ நீளமான தடித்த கடதாசியை படம் 1ல் காட்டியவாறு சுருட்டுக. சுருட்டிய பின் சுருளின் ஓரத்தின் உட்புறமாக 2 செ.மீ அளந்து குறுக்காக அரைவாசிப் பகுதியை மேல் நோக்கி படம் 2ல் காட்டியவாறு வெட்டவும். வெட்டப்பட்ட சுருளை விட்டு நடுப்பகுதியை படம் 3இனைப் போன்று குறுக்காக வெட்டவும். குறுக்காக வெட்டிய கடதாசியினை படம் 4இன் உதவியுடன் விரிக்கவும். விரித்ததும் நடுப்பகுதியின் மேலேயுள்ள கடதாசியில் ஒன்றை மேல் நோக்கி இழுக்கவும். (உ+ம் படம் 5)

தற்போது உங்கள் கையில் படம் 6ற்கான அமைப்பு வெளித்தோன்றியுள்ளதும் வெட்டி கீழே விடப்பட்ட ஒரு சுருளை நன்கு விரிக்கவும். விரிக்கும் போது இருகைகளையும் பாவிக்கவும்.

ஒருபக்க சுருளை இழுக்க வேண்டாம். அப்பகுதி நாம் கைபிடித்து விசிறுவதற்கு தேவைப்படும் பகுதி. இப்போது படம் 7ல் அமைந்துள்ள விசிறி உங்கள் கைகளில். சித்திரை உஷ்ணத்தை ஓரளவு தவிர்க்க இவ்விசிறி உபயோகமாகும். **-எஸ்.எஸ்-**


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 8

மகளிர் மட்டும்
-பரிசுப் போட்டி-

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


# திருடப்பட்ட கவிதைகள்?

**இது எவரையும் தனிப்பட்ட ரீதியில் தாக்குவதற்காக தரப்படுவதல்ல. தமிழக ஆய்வாளர் டாக்டர் வி.இ. மறைமலை அவர்கள் நிதானமாக செய்த ஆய்வில் சில பகுதிகள். புத்திசாலிகளான முரசு வாசகர்கள் பார்வைக்கு:-**

புதுக்கவிதை நூல்களிலே பன்னிரண்டு பதிப்புக்களைக் கண்டு, இளைஞர்களால் விரும்பிப்படிக்கப் படுவது மு.மேத்தாவின் "கண்ணீர்ப் பூக்கள்." அது வைரமுத்துவின் உள்ளத்தையும் கவர்ந்திருக்கிறது.

அதனால்தான்;

"எங்கள்
கனவுகளைக் கலைப்பதற்காக
இமைகள்
பிடுங்கப்பட்டிருக்கின்றன."

(கலையாத கனவுகள்
கண்ணீர்ப் பூக்கள்-பக்-50- 1973)

என்னும் மேத்தாவின் நயமிகு முரண்வரிகளை வைரமுத்து,

"கனாக்களை கலைக்க
இமைகளைக் கத்தரிக்காதே"

(கலப்பு மணம்-இன்னொரு தேசிய கீதம் பக்கம் -38- 1982)

என்று தமதாக்கிக் கொள்ள முயன்றுள்ளார். ஆடவரது உறுதியற்ற மனதை-பெண்களின் அழகில் அலைபாயும் உள்ளத்தை காட்டும் வகையில் 'தலைகள்' என்னும் கவிதையைப் படைத்துள்ளார் மேத்தா.

"இராமனாகத்தான்
வீட்டிலிருந்து
வெளியே வந்தான்
வீதியில்
அடுத்த வீட்டு சீதைகள்
அசைந்து நடந்த
அழகைப் பார்த்ததும்
தயங்கித் தயங்கி
தலைகள் முளைக்கவே
இராவணனானான்"


(ஒரு வானம் இரு சிறகு-
பக்கம்-46-1983)

காதலை மறுக்கும் ஒருவனின் கூற்றாக அமைந்துள்ள வைரமுத்துவின் "ஓர் அரசன் யாசிக்கிறான்" என்னும் கவிதையில் மேத்தாவின் உத்தி எதிர் மறையாக்கப்பட்டு பின்பற்றப்பட்டுள்ளது.

"உனக்குத் தெரியாது
இராவணனாய்த்தானிருந்தேன்
சிரமப்பட்டு
என்
சிரங்களில் ஒவ்வொன்றாய்ச்
சிரச் சேதம் செய்து
இராமனானேன்."

(கொடி மரத்தின் வேர்கள்-
பக்கம்-19- 1984)

## வித்தியாச விருந்து



**வா**க்குச் சீட்டை பெறுவதற்காக வாக்குறுதிகளை வாரி வழங்கும் அரசியல் வாதிகள் தேர்தல் திருவிழா முடிந்ததும் தாம் அளித்த வாக்குறுதியையும், வாக்காளரையும்மறந்து போய்விடும் நிகழ்ச்சியைக் காண்கிறோம். இத்தகைய அரசியலாளரைத் துஷ்யந்தனாக உருவகப்படுத்துகிறார் மேத்தா.

"வாக்குக் கொடுத்தவரும்..
வாக்கு கொடுத்தவரும்
மறதி வளர்க்கும்
மரபுதனைக் காப்பதனால்
தசரதன் போலத் தடுமாறி வீழாமல்
துஷ்யந்தனாகித்
துணிவோடு வாழ்கிறார்!"

(அது ஓர் ஆயுதம்-
முகத்துக்கு முகம்-பக்-66 -1981)

இவ்வுருவகம் வைரமுத்துவைக் கவர்ந்துள்ளது. இவ்வுருவகத்தை சற்று வளர்த்து தமது கவிதையில் இதனைப் பொருத்திக் கொள்கிறார்.

"ஒட்டு மொத்தமாக
ஓட்டு முத்தம் வாங்கிய
துஷ்யந்தர்கள்
மறுநாளே மறந்து போனார்கள்.
சகுந்தலைகளின்
கர்ப்பத்துக்குள்ளே
கண்ணீர் வளர்கிறது:"

(இன்னொரு தேசிய கீதம்-
பக்-114-1982)

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்






## மௌனம்

சலவை
செய்யப் பட்ட
சர்வதேச மொழி.

இதயம் பேச
ஆத்மா கேட்டு
ஆனந்தம் கொள்ளும்
அந்தரங்க மொழி.

விழிகளால்
நானும் அவளும்
பேசிக்கொள்ளும்
நாகரீகப் பாஷை.

அவளின் சம்மதம்;
ஊமையின்
ஜீவித சொர்க்கம்.

ஒருகணம்,
வாய் விட்டுப்பேசி
யுத்தம் வளர்க்கும்
இவ்வுலகம்
வாய்மூடி இந்த
மௌனம் பேசினால்
ஒவ்வொரு உயிரையும்
இப்பூமி முத்தமிடும்.

பூண்டுலோயா-மெய்யன் நடராஜ்.

## கண்ணீர் சாட்சிகள்

குண்டுகள் வெடிப்பதும்
குற்றுயிராவதும்,
துண்டுகள் தூளாய்
துவம்சமாவதும்,
பெண்டுகள் பிள்ளைகள்
புதைந்து அழிவதும்,
கண்டிடும் காட்சிகள்
கண்ணீர் சாட்சிகள்!

* *

யுத்தம் சிந்திடும்
எச்சங்களானோம்,
நித்தம் வாடிடும்
பித்தர்களானோம்,
கத்தும் உலகத்தின்
கழிவுகளானோம்,
சித்தம் கலங்கிடும்
சித்திரங்களானோம்!

•

இதயம் சுமக்கும்
இன்னல்கள் கோடி!

உதயம் தேடும்
உயிர்களும் கோடி!
எதையோ நாடும்
யுத்தங்கள் ஏனோ!
வதைபடும் நாங்கள்
எச்சங்கள் தானோ!

ராஜா கிருஷ்ணவேணி-வத்தளை.




சுருக்கமாகிப் போன
உணர்வுகளின்
ஒடுக்கத்தில் நான்
ஒரு கவிஞனாயும்.........
ஒரு அகதியாயும்.....

•

பூப்புவாய்
நினைவுகள்-
இப்போதெல்லாம்
ரணங்கள்.
தேசத்தைப் போல
மனமும்.

•

கருகியதும்
உருக்குலைந்ததுமான
நீயில்லாத
நான்,
எங்கள் ஊரின்
'கஜூர்னாக் கடற்கரை' போல

•

விம்மி விம்மி
என் கவிதைகளை
உன்
அர்ச்சனைக் குரியதான
எல்லாவற்றிற்குமாய்
அர்ப்பணமாக்குவதும்
பின்
ஓ வென்று
அழுவதுமாய் நான்.

மீண்டு மொரு
கருக்கல்ப் பொழுதில்
பனங்காட்டின்
சர சரப்பில்...
அந்த வெள்ளை
மணலில்
யாருக்கும்
தெரியாமல்
புரள்வதும்
கும்மாளமடிப்பதும்
எப்போது?

•

இப்பொழுதெல்லாம்
என் தேசத்திற்காகவும்
உனக்காகவும் தான்
கவிதைகள் பாடுவதும்
சோகித்திருப்பதுமான
நான்.

•

மோ.....!
மீண்டும் மொரு
சந்திப்பும்
என் தாய்மண்ணின்
சுதந்திரத் தன்மையையும்
மனதில் கொண்டதான
சுருக்கமாகிப் போன
உணர்வுகளில்
ஒடுக்கத்தில் நான்
ஒரு கவிஞனாயும்......
ஒரு அகதியாயும்.....

-அக்குறணை- ஹரீரா அனஸ்.

## ஒரு கவிஞனின் காதல்

இனி நெஞ்சு வெடித்து விடும்
உன்- ஈரப்பார்வையிலும்
என்னை எரித்து விடும்
நினைவிலுமாய்
எல்லாம் பொசுங்கி விடும்.

நான் பைத்தியமாகலாம்
அடை காத்து அழுகிப்போகலாம்
உன்னைப் பற்றிய ஞாபகங்கள்___

இரவுகளில் இனிக்கும்
உன் செருமல் ஒலியும்
விடியலில் தெறிக்கும்
தாமரை முகமும்
இனியும் என்னைக் கொன்றுவிடலாம்!

உன்னிடம் சொல்லவும் இயலாமல்
உன்னை மறக்கவும் முடியாமல்
உன் மதிலின் மேல் படுத்திருக்கும்
அந்த பூனைகளைப் போல் நான்!

எனக்குப் புரிகிறது
இன்னும் சில யுகத்தில்
உன் கனவுகளைத் தின்று
என் மூளை பிசகலாம்.
அல்லது உன் பெயரைச் சொல்லியே
வீதி முழுக்க அழுதும் புலம்பலாம்.
அஞ்சு!
என்றாவது
என்னை ஞாபகித்தாவது
பார்ப்பாய் தானே....?
அது போதும் எனக்கு!

-கல்சியா-


## மீண்டுமா?

அன்றுதான் கேட்பார் இல்லை?
ஆருமே பார்ப்பார் இல்லை?
இன்று மில் லாம லேயே
உள்ளுக்குள் வைத்திருந்தார்!
இன்றுந்தான் இல்லை யென்றால்,
என்னையா வேறுபாடு?
வென்றுந்தான் முருக்கை மீது
வேதாளந்தானா மீண்டும்?

முன்னையோர் அராஜகத்தின்
முடிவிலாத் தொடர்ச்சியாக
இன்றுமோர் நீதி மன்று
ஏற்பாட்டுப் பொய்ச்சாட்சி
இந் நிலை தொடருமானால்
எதற்கிங்கே புதியோர் ஆட்சி?
சொன்னவை கருத்தில் சேரல்
சோகந்தான் மீண்டும் மீண்டும்.

மனிதரின் உரிமை யெல்லாம்
மதித்திடல் உண்மையென்றால்,
அநியாயமாக உள்ளே
அடைபட்டுக் கிடப்போரெல்லாம்
இனியேனும் விடுபட்டால் தான்
எவரேனும் நம்புவார்கள்!
கனிவாயை நெஞ்சால் காட்டக்
கன சிக்கல் தீருந்தானே?

கவி.காளி.



## கண்டுபிடிக்க ஏழு வித்தியாசங்கள்







மேலே உள்ள இரு படங்களில் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. 5 நிமிடத்தில் கண்டு பிடிக்கவேண்டும். விடையைச் சரிபார்க்க பக்கம் 18ற்கு செல்லுங்கள்.




# இந்த வாரம் உங்கள் பலன்

(09.04.95 முதல் 15.04.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | வீண்மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், அந்நியர்நட்பு. | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சிபலிதம். | பகல் 11 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, கௌரவம் | பி.ப 2 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், தெய்வானுகூலம். | பி.ப. 1 மணி |
| சனி- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக் குழப்பம், செய்தொழில் நட்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணவிரயம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- | முன்னேற்றம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| சனி- | வீண்மனஸ்தாபம், கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண்மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | மு.ப 11 மணி |
| புதன்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, செல்வாக்கு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு, | காலை 8 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, வீண்குறை கேட்டல். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், கௌரவம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| சனி- | காரியசித்தி, உறவினர் பகை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மனக் கலக்கம். | காலை 8 மணி |
| புதன்- | தொழில் மேன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், வீண்தொல்லை. | பி.ப 1 மணி |
| சனி- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன் |
| மேடம் | - புதன், கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி, வெள்ளி |

சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

14.04.95 இல், மேடச் சூரியன்-யுவ வருடப் பிறப்பு.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனக் கலக்கம். | பி.ப 2 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 8 மணி |
| வியாழன்- | பலவித நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், காரியத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| புதன்- | புதிய முயற்சி, வீண்கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | முயற்சிகள் பலிதம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, வீண் குறை கேட்டல். | பி.ப 2 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், புதிய நட்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | மனக்கலக்கம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| புதன்- | திடீர் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- | துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | மு.பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செய் தொழில் மந்தம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், மனக்கலக்கம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, இடமாற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 8 மணி |
| புதன்- | முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனக்கவலை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | மு.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நட்டம், பொருள் இழப்பு. | காலை 8 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், பயனுள்ள செயல். | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12. மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5





# தேனீ

நறும்பூக் கூட்டம் பாராய் காற்றில்
நளினமாய் ஆடுதுசீராய்
சுறுசுறு தேனீ! - பூவில்
செந்தேன் சுவைப்பதைப் பார்நீ

கூட்டில் சேர்க்கும் தேனை - நாளும்
கூடி உண்டு மகிழும்!
கூட்டுக் குடும்பம் நடத்தும் - நமக்கு
கூட்டு வாழ்வை உணர்த்தும்

கொம்பில் தொங்கும் கூட்டைப் - பார்
கனிப்பலாத் தோற்றம் தெரியும்!
வம்பாய்க் கூட்டைக் கலைத்தால் - தேனீ
வசமாய்க் கொட்டி வருத்தும்.

தெம்பிலா உடம்பும் பலம்பெற - பாலில்
தேனைக் கலந்து பருகு!
சோம்பிக் கிடக்கும் குழந்தாய் - தேனீயின்
சுறுசுறுப் புனக்கோர் பாடம்!

- கே.எஸ். குருசாமி -

"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகன் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்கு தவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்"

சுப்பிரமணிய பாரதியார்

## பாப்பா முரசு சிறு கதை

# அரசன் கற்ற மூன்று நெறிகள்

உதயபுரி நாட்டை ஆண்ட அரசனின் பெயர் வளையாபதி. அவன் நாடு அமைதியாக இருந்தது. எல்லையோரம் இருந்த நாடுகள் எல்லாவற்றையும் விட அவன் நாடு பாதுகாப்பிலும், போர் முறையிலும் மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது. அத்தோடு அவனிடம் போர் புரிய நவீன ஆயுதங்களும் இருந்தன. அவை பெரிய நகரையே அழித்து விடக்கூடிய ஆற்றல் மிக்கவையாக இருந்தன. அதனால், பிறநாடுகள் அவனுக்கு அஞ்சி அடங்கி இருந்தனவே தவிர அவனுடன் போரிட முன்வரவில்லை. அதனால் எதிரிகள் தன் நாட்டை எங்கே தாக்கி விடுவார்களோ என்ற பயமில்லாதிருந்தான் அரசன் வளையாபதி.

மாதம் மும்மாரி பெய்தது. அதனால் நீர்வளம் மிகுந்திருந்திருந்தது. ஆறு, குளம், குட்டை, ஏரி எல்லாம் நீர் நிறைந்து நிலமெல்லாம் முப்போகம் விளைந்தன. பயிர் பச்சைகள் செழித்து வளர்ந்தன. மண் பொன்னை விளைவித்தது. உணவுப் பொருட்கள் நாட்டில் தேவைக்கு மிஞ்சியே விளைந்தன. மக்கள் உணவுப் பஞ்சம் இல்லாது நிம்மதியாக இருந்தார்கள். அதனால் மக்களால் அரசன் வளையாபதிக்கு எந்தத் தொந்தரவும் இருக்கவில்லை.

மக்கள் அனைவரும் கஷ்டங்கள் ஏதும் இல்லாதிருந்ததால் நாட்டில் திருட்டுப்பயம், வழிப்பறி, கொள்ளை எதுவும் நடைபெறவில்லை. நீதி பரிபாலனம் செம்மையாக, சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் அரசன் வளையாபதி கவலையற்றிருந்தான்.

இப்படி எல்லாமே சீராக சிரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது வேலையே இல்லாது போய்விட்டது அரசனுக்கு. எப்படிப் பொழுதைப் போக்குவது எதையாவது எப்போதும் சாப்பிட்டுக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலையே அவனுக்கு இல்லை.

அரண்மனை சமையற்காரரை அழைத்து, 'அதைச் செய்யுங்கள் இதைச் செய்யுங்கள்' என்று பல வகையான பலகாரங்களைச் செய்து வயிறு புடைக்கச் சாப்பிட்டு வந்தான். சாப்பிட்ட உடனேயே மஞ்சத்தில் படுத்துறங்கியும் விடுவான்.

தன் சமையற்காரர்கள் செய்கின்ற பலகாரங்கள் போதாதென்றும் அடுத்த நாடுகளில் இருந்தும் விதவிதமான பலகாரங்களை வரவழைத்து உண்டு வந்தான்.

இப்படி ஒரு அளவில்லாமல், முடிவில்லாமல் எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுக்கொண்டே இருந்ததால் உடம்பு எதற்காகும்? அவனுக்கு வயிறு கெட்டுப்போய் பல வியாதிகள் வரத்தொடங்கின. அரசன் வளையாபதிக்குச் சாப்பிடவே முடியாதபடி ஆயிற்று.

தன்நிலை இப்படி ஆயிற்றே என்று வருந்தியபடி ஒருநாள் வளையாபதி காலாற சிறிது தூரம் நடந்து போய்விட்டு வரலாமென்று புறப்பட்டான்.

அவன் செல்லும் வழியே ஒரு குடிசையின் வாசலில் ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள். அவள் முன்னே கஞ்சிப்பானை ஒன்றும், இன்னொரு கிண்ணத்தில் சட்னியும் இருந்தது. அவள் எதிரே நான்கைந்து பிள்ளைகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் கையில் குடுவைகள் இருந்தன. அதில் அம்மா கஞ்சியை அகப்பையால் எடுத்து ஊற்ற ஆரம்பித்தாள். பிள்ளைகள் அதைக் குடிப்பதும், சட்னியை நாக்கில் தொட்டுக் கொள்வதுமாக இருந்தார்கள்.

அரசன் வளையாபதி அவர்களைப் பார்த்தான். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் அனைவரும் திடமாகவும், பலசாலியாகவும், வலிமையுள்ள வர்களா கவும் இருந்தார்கள். அத்துடன் அவர்கள் ஆரோக்கியமாகவும், சந்தோசமாகவும் காணப்பட்டார்கள்.



அவர்கள் அருகில் சென்ற அரசன், "நீங்கள் என்ன உணவு சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"இது உணவில்லை கஞ்சி", என்றனர் அவர்கள்.

"அதென்ன?" என்று சட்னியைப் பார்த்துக் கேட்டான் அரசன்.

"தொட்டுச் சாப்பிட சட்னி," என்றாள் பெண்மணி.

அவர்கள் குடிக்கும் கஞ்சியையும், அவர்களையும் மாறி, மாறிப் பார்த்தான் அரசன்.

"மிகச் சாதாரணமான இந்த உணவை இவ்வளவு ருசியாகச் சாப்பிடுகிறீர்களே ...உங்கள் உடல் வலிமைக்கும், நலத்துக்கும் இது மட்டும் போதுமா? இந்தக் கஞ்சியைக் குடித்து எப்படி உங்களால் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருக்க முடிகிறது?" என்று வியப்போடு கேட்டான் வளையாபதி.

"அரசே இது மிகவும் எளிமையான உணவுதான். ஆனால் மிகவும் சிறந்தது. இது எங்களுக்குப் போதும் என்று நாங்கள் எண்ண மூன்று காரணங்கள் உண்டு", என்றாள் அந்தப் பெண்மணி.

"அவைகளை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் வளையாபதி.

"ஓ தாராளமாக. ஒன்று எங்கள் உணவுக்கு நாங்கள் யாரையும் எதிர்பார்ப்பதில்லை. அதைத் தவறு என்று எண்ணுகின்றோம். எங்கள் உணவுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க நாங்கள் உழைக்கின்றோம். வெயில், மழை, பனி, குளிர், காலை, மாலை, இரவு, பகல் என்று நாங்கள் பார்ப்பதில்லை. உழைத்தே உண்ண வேண்டும் என்பது எங்கள் தாரக மந்திரமாகையால் கடுமையாக உழைக்கிறோம். உழைப்பு எங்களுக்கு உணவளிக்கிறது. உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது."

"இரண்டாவது காரணம்?" என்று கேட்டான் வளையாபதி.


"சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நாங்கள் அமிர்தமானால் கூட அதைச் சாப்பிட மாட்டோம். கண்ட கண்ட நேரங்களில் கிடைத்ததை எல்லாம் சாப்பிட மாட்டோம். ஒருவேளை உணவிற்கும் மறுவேளை உணவிற்கும் நிறைய இடைவெளி இருப்பதால் முதலில் சாப்பிட்ட சாப்பாடு செமித்து பசி உண்டாகிறது. 'பசித்துப் புசி' என்பது ஆன்றோர் பழமொழி அல்லவா?" என்று சொன்னாள்.

"மூன்றாவது காரணம்?" என்று ஆவலோடு கேட்டான் அரசன்.

"இந்த உணவுதான் வேண்டும், அந்த உணவுதான் வேண்டும் என்று நினைக்காமல் பசிக்கிற நேரத்தில் எந்த உணவு கிடைக்கிறதோ அதை மகிழ்ச்சியாக உண்போம்." என்றாள் தாய்.

"மிகவும் நன்று உங்களுக்கு." என்று அவர்களிடமிருந்து விடைபெற்ற அரசன் வளையாபதி அம்மூன்று நெறிகளையும் அன்றிலிருந்தே கடைப்பிடிக்க ஆரம்பித்தான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.04.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 86
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 83

**பரிசுக்குரியவர்**
செல்வி. எல். வசந்தமலர்,
பலாபத்வெல.தமிழ்.வித்தியாலயம் மாத்தளை

**பாராட்டுக்குரியவர்கள்**

ம. புஸ்பேந்திரன், மட்/ கல்குடா நாமகள் வித்தியாலயம்

டியனா கிறிஸ்டீன் அந்தனி, நாவலப்பிட்டி.

சிவநேசராசா-வியூரகன், களுவாஞ்சிகுடி.

மு. றெபெக்கா பொன்மலர்,
க/ வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தி. கெட்டபுலா.

ஜே.எம். ராஜின், மத்தியமகா வித்தியாலயம். காத்தான்குடி.

சவ்ரான் எம். பாரூக், ஜமிஉல்-அஸ்ஹர் ம. கல்லூரி, கண்டி.

## அறிவோம் மனதில் பதிவோம்

மிக நீளமான முகமுடைய பாம்பு ஆபிரிக்காவில் காணப்படும் கேபூன் வைப்பர் எனப்படும் கட்டுவிரியன் பாம்புகள் ஆகும். கடுமையான விஷமுடைய இந்தப் பாம்புகள் 6 அடி நீளம் இருந்தால் அவற்றின் முகம் 1.96 அங்குல நீளம் ஆக இருக்கும்.






அவுஸ்திரேலியாவில் வாழும் 'சீப்ரா பின்சஸ்' என்ற குருவிகள் மழைக் காலம் முடிந்ததும் தான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அப்படிச் செய்தால் தான் புல், பூண்டுகள் முளைவிடும் போது, குஞ்சுகள் அவற்றைத் தின்ன வசதியாய் இருக்கும் என்பதால் இந்த ஏற்பாடு.

* * *

உலகிலேயே மிக அதிக வெள்ளம் பாயும் நதி அமேசன். இது தோன்றும் இடம் 1971ம் ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

பெருநாட்டில் அன்டிஸ் மலை உச்சியில் இதனைக் கண்டு பிடித்தவர் லொரென் சின்டையர்.



## யாதும் ஊரே யாவரையும் கேளீர்

01. கருமையான ஊர் எது?
02. வெண்மையான ஊர் எது?
03. குளிக்கும் நகரம் எது?
04. அதிஷ்டம் நிறைந்த ஊர் எது?
05. நான்கில் ஒன்றான ஊர் எது?
06. இருண்ட நகரம் எது?
07. மரியாதை தராத ஊர் எது?
08. கல்யாணமாகாத ஊர் எது?
09. பாதுகாக்கப்பட்ட ஊர் எது?

**விடைகள்:**

01. 'மை'சூர். 02. போ'பால்' 03. ஹைதரா'பாத்' 04. 'லக்'னௌ. 05. பெங்'கால்' 06. குஜ'ராத்' 07. விஜய'வாடா' 08.கன்னியா'குமரி' 09.திருநெல்'வேலி'

நிஸ்மி தௌபீக்
தி/கிண்ணியா மத்திய.மஹா.வித்.

## வாரம் ஒரு நாடு



### பஹாமாஸ்

**அமைவிடம்:** அமெரிக்காவின் தென் மாநிலமான ஃபுளொரிடாவின் தென் கிழக்குக் கரையோரமாகவுள்ள தீவுக்கூட்டங்களின் தொகுதியே பஹாமாஸ் என்றழைக்கப்படுகிறது. 700க்கு மேற்பட்ட தீவுகளில் ஆக 30 தீவுகளில் தான் மக்கள் வாழ்கின்றனர்.

**பரப்பளவு:** 14,000 சதுர கி.மீ. (5,400 சதுர மைல்)

**மக்கள் தொகை:** 285,000 பேர். இதில் 85 சதவீதமானோர் நீகிரோ இனத்தவர். ஏனையோர் ஐரோப்பியர்.

**தலைநகரம்:** நஸ்ஸாவ். (ம.தொ:- 131,500 பேர்.)

**ஆட்சி முறை:** 1973 முதல் தன்னாட்சி பெற்ற குடியரசு.

**பேசும் மொழி:** ஆங்கிலம்.

**மதம்:** கிறிஸ்தவம்.

**தேசியதினம்:** ஜுலை 10.

**சிறப்பம்சங்கள்:** பவளப் பாறைகள் கொண்ட தீவுகள் 300 க்கு மேல் உள்ளன. மீன் பிடித்துறையும் சுற்றுலாத்துறையும் முக்கியமானவை. காய்கறிகளும் பழவகைகளும் உற்பத்தியாகின்றன. 5வயது முதல் 14 வயது வரை கட்டாயக் கல்வி. இலவசக்கல்வி முறையுமுண்டு.

**பார்க்க வேண்டிய இடங்கள்:** சுற்றாடல்-சூழலால் மாசடையாத பல தீவுகள் உல்லாசப் பயணிகளை ஈர்ந்திழுக்கின்றன. ஏராளமான கடற்கரைகள் காணப்படுகின்றன. தனிமையை விரும்புவோருக்கு ஏகாந்தச் சூழலைத்தரும் விடுதிகள் ஏராளமுண்டு.

தீர்வையற்ற கடைகளில் பன்னாட்டு உற்பத்திப் பொருட்கள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும். தலை நகரான நஸ்ஸாவிலேயே சர்வதேசச் சந்தைகள் உள்ளன.

அழகிய பூங்காக்கள், பண்டைய கோட்டை கொத்தளங்கள், கடற்தரை மீன் வளர்ப்பகம் மற்றும் அரச இல்லம் ஆகியவை நிச்சயம் பார்க்க வேண்டிய இடங்களில் முக்கியமானவை.

தீவுகள் அதிகமிருப்பதால் நீச்சல், நீர்ச் சறுக்கல், படகோட்டல் மற்றும் மீன் பிடி போன்ற பொழுது போக்குகளில் பயணிகள் பங்கு பற்றலாம்.

## விடுகதைகளும் விடைகளும்

01. புனித நகரம் ஒன்றுண்டு ஆனால் பெண்களுக்கும் அப்பெயர்உண்டு. அந்த நகரம் எது?
02. பறக்கக் கூடிய பறவை. ஆனால் நிலத்திலே நடக்க முடியாத பறவை. அது என்ன?
03. ஊரின் பெயர்களிலே இது ஒன்று முன்னெழுத்தையும் பின்னெழுத்தையும் இணைத்தால் மீனவர்களிடம் இருக்கக் கூடிய ஒன்று. அந்த ஊர் எது?
04. தோட்டம் ஒன்றுண்டு. பலவித மரங்கள் ஐந்துண்டு அது என்ன?
05. பின்னால் பூ ஒன்று உண்டு. முன்னால் ஊர் ஒன்று உண்டு. அது என்ன?
06. முனிவர்கள் தவம் செய்யும் இடங்களிலே ஒன்று. இரண்டாவது எழுத்தை எடுத்தால் பறவையின் பெயர் ஒன்று உண்டு-அந்த இடம் எது?
07. பிதாவுக்கு எதிர்ச்சொல் ஒன்றையும் மானிடர்கள் வாழக்கூடிய இடத்தையும் இணைத்தால் படத்தின் பெயர் ஒன்று வரும். அந்தப் படம் எது?
08. பருகக்கூடிய ஒன்று. நடு எழுத்தை எடுத்தால் வீதிகளிலே பவனிவரக்கூடிய ஒன்று அது என்ன?

**விடைகள்:**

01.மதீனா. 02. வௌவால். 03: வந்தாறுமூலை. 04. கைவிரல்கள். 05. மைசூர் பருப்பு. 06 கானகம். 07. அன்னை இல்லம். 08.தேநீர்.

ஏ.ஆர். பத்திமா பர்வீன்
மட்/அல்ஹிரா வித்தி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாட சூலம்



தன்னந்தனியாக இருக்க நேரிட்டதைப் பற்றி பத்ராவுக்கு எந்த வித மன உழைச்சலும் இருந்ததாகத் தெரியவில்லை. அவளுக்கு பூஜை அறையே புகலிடமான பிறகு.... உலகத்தைப் பற்றியோ.... பிற மனிதர்களைப் பற்றியோ ஏது துக்கம்?

பெற்ற தாயின் மரணத்தைக் கூட அவள் பெரிய வருத்தமாக எடுத்துக் கொள்ளவில்லை!

அவளைப் பற்றி ஊரும் உலகமும் என்னென்னவோ பேசுகிறது......! காதில் விழவில்லை! ஜனனமும் மரணமும் வெறும் வார்தைகள் தான். அதில் சந்தோசப்படவோ துக்கப்படவோ ஒன்றுமேயில்லை. பிறக்கவைக்கிற கடவுளே பிறகு உயிரை எடுத்துக் கொள்கிறான். மறுபடியும் அதை வேறு பிறப்பு எடுக்க வைக்கிறான்.

எல்லாமே அவன் விளையாட்டு!

இதில் துக்கப்படவோ குதூகலம் கொள்ளவோ ஒரு சமாச்சாரமும் இல்லை! - இப்படிப் பட்ட மனோ நிலையில் அவளது இயக்கங்கள் முடங்கியிருப்பது தெரியாமல் தான்....

வெறியோடு பூஜை அறைக்குள் ஏறினான் அந்த இளைஞன்.

அவனுக்கு இந்தப் பத்ராவைக் களறிப் பயிற்சிக்கு வரும் போதெல்லாம் பார்த்த ஞாபகம்.

அவளுடைய சிவந்த மேனி... அதில் சிரித்துக்கொண்டிருந்த இளமை, பேரழகு எல்லாமே அவனைப் பல நாளாகக் கனவுகள் காணச்செய்திருந்தன!

இன்று அந்தக் கனவை மெய்ப்படுத்த வேண்டும்.

ஒண்டித் தனிமையாய் வீட்டில் உட்கார்ந்திருக்கும் பெண்ணை அண்டி வந்து ஆனந்தம் பெற வேண்டும்!

இது அவனது தாகம்.

மது உள்ளே போனதால் கால்கள் நிலத்தில் நிற்கவில்லை! தடுமாறியது - உடம்பு! பத்ரா அவனை அப்போது தான் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்கு முதலில் அவன் எதற்காக வந்திருக்கிறான் என்றே புரியவில்லை. ஒருவேளை-அம்மா இறந்ததைப் பற்றித் துக்கம் கேட்க வந்திருக்கலாமோ என்று தோன்றியது.

இல்லை!

அவன் முகத்தைப் பார்த்ததுமே புரிந்து விட்டது. அவன் கண்கள் தன் உடல்மீது மட்டுமே மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

அவனுக்குத் தேவை-இதுதான்!

புரிந்தது.

"நான் உன்னைப் பார்க்கத் தான் வந்தேன் பத்ரா."

"அப்படியா? அதுக்கு ஏன் இப்படி. ஆடறே?"

"நிற்க முடியலே பத்ரா. இனி வீட்டுக்குப் போகவும் முடியாது!"

"ஏன்"

"மழைவரும் போலிருக்கு!"

பத்ரா குனிந்து வெளியே பார்த்தாள். அதற்குள் அவன் அவளைச் சட்டென்று தழுவிப் பிடிக்க எத்தனித் தான். பத்ரா சிரித்தாள்.

"நான் விழுந்துடமாட்டேன். நீ விழாம இருந்தாப் போதும்...." ஒதுங்கினாள் பத்ரா.

"அப்படின்னா என்னைப் பிடிச்சுட்டுப் போய் கட்டிலிலே போடேன் படுத்துக்கறேன்."

"கண்டவங்க எல்லாம் வந்து படுக்க இது என்ன சத்திரமா?"

"ஒரே ஒரு ராத்திரி.....! பாவம் நீ மட்டும் எப்படி தனியா....?"

"ரெண்டு பேரும் ஒண்ணாப் படுத்துக்கலாங்கறியா?"

"ஆமா.... ஆமா!"

"அட, இதை மொதல்லயே சொல்ல வேண்டியது தானே?"

"உனக்கும் ஒரு துணை!"

அவன்-பத்ராவை மோகப் பார்வை பார்த்தான். இரு கைகளையும் பரப்பி அவளைத் தழுவ எத்தனித்தான்.

"இதுக்குள்ள அவசரப் படறியே.....! வா.... வா...." என்றபடி நடந்தாள் பத்ரா. போகும் போது அவனை இழுக்கிறமாதிரி ஒருவித புன்னகையையும் வீசி விட்டுப் போனாள் பத்ரா.

அவன் வசியப் பட்டு அவள் பின்னாலேயே போனான்.

ஓர் அறைக் கதவைத் திறந்தாள் பத்ரா. உள்ளே போய் நின்று கொண்டு கூப்பிட்டாள்.

அவனுக்கு அந்தத் தடுமாற்றத்திலும் உறங்கிய உள்மனசு வேலை செய்தது!

'அட....! இவ்வளவு சுளுவிலே ஒப்புக்கற விஷயம் தெரிஞ்சிருந்தா இதுக்கும் முன்னாலேயே வந்து சந்தோசப் படுத்தியிருக்கலாமே!'

-சிரித்தான்.

"ஏன் சிரிக்கறே?"

"இல்லே! இவ்வளவு அழகான பொண்ணுக்கு இத்தனை நாளும் நாம சந்தோசம் குடுக்க முடியாமப் போச்சேங்கற விரக்தி!"

"உள்ளே வா" - அவன் சொன்னதைக் காதிலேயே வாங்காமல் பரபரப்பாக பத்ரா கூப்பிட்டாள். அவளது யோசனை மொத்தமும் வேறு ஏதோ ஒரு விபரீதத்துக்கான ஆயத்தத்தில் இருந்தது.

வெகு ஆர்வமாக உள்ளே வந்தான் அந்தக் குடிகாரன். அவன் நுழைந்ததுமே கதவைச் சாத்தினாள் பத்ரா. உள்ளே ஒரே இருட்டு. எதுவுமே தெரியவில்லை அவன் கண்ணுக்கு.

அவள் அவனை உள்ளே வருவித்ததுமே பூஜை அறைக்குள் போய் விட்டாள். இது அவனுக்குத் தெரியாது.

பக்கத்திலேயே தான் நிற்கிறாள் என்கிற நினைப்போடு கைகளை வீசி வீசி அவளைக் கட்டிப் பிடிக்க எத்தனித்துக் கொண்டிருந்தான். இருட்டில் அவள் எங்கே நிற்கிறாள் என்று அவனுக்குத் தெரியவில்லை.

திடீரென்று அந்த அறைக்குள் வெளிச்சம் வந்தது.

பத்ரா பூஜை அறைக்குள் விளக்குகளை ஏற்றிவைத்துச் சப்பணம் போட்டு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முதுகு மட்டும்தான் தெரிஞ்சது இளைஞனுக்கு!

"என்ன பத்ரா! என்னைக் கூப்பிட்டு நிற்கச் சொல்லீட்டு நீ போய் பூஜையிலே உட்கார்ந்துட்டே...?"

கேட்டுக்கொண்டே போய் அவள் முதுகுப் பக்கம் நின்றான்.

இருகைகளையும் அவள் தோளில் பற்றினான்.

வைத்த கை விருட்டென்று பதற்று. காரணம்-ஏதோ ஒரு பிரேதத்தின் மீது கைகளைப் பதித்ததைப் போல் ஓர் உணர்வு.

திடுக்கிட்டுப் போனான் அவன்.

அதே நேரம் தான் பத்ராவும் திரும்பினாள்.

அவளைப் பார்த்த கணத்திலேயே குடித்திருந்த போதை குப்பென்று இறங்கியது. உடம்பு கிடுகிடுவென நடுங்கியது.

அது பத்ராவா?

இல்லை! தொங்கும் நாக்கு! சிவந்த கண்கள்; விரித்த சடை, கடைவாயில் வளர்ந்து கொண்டு வந்த பற்கள்! பயங்கர உருவம்.

பதறிப் போனான் அவன்!

இவள் பத்ரா அல்ல; பத்ரகாளி!

அவனுக்கு மூச்சு நின்று போகும் போலிருந்தது. தப்பினால் போதும் என்று ஓட எத்தனித்தான். ஆனால் அந்த அறைக்குக் கதவு எந்தப் பக்கம்?

பத்ரா-காளியாக எழுந்தாள். அவன் பக்கத்தில் நெருங்கி நெருங்கி வந்தாள். அவளது கண்களிலிருந்து சீறிற்று தீக்கங்குகள்! தாங்க முடியவில்லை! அப்படியே மல்லாந்து விழுந்தான் அவன்.

அப்புறம்.... அவன் எப்போது சுய உணர்வு பெற்றானோ....! ஏதோ ஒரு கெட்ட சொப்பனம் கண்டு எழுந்தவனைப் போலப் பதறி நிமிர்ந்தான்.. காற்றுக்குக் கதவுகள் இப்படியும் அப்படியும் அசைந்தன! குளிர் வீசியது! எட்டிப் பார்த்தான்.

கொட்டிக் கொண்டிருந்தது மழை.

தனக்கு என்ன நடந்தென்று அவனுக்கே புரியவில்லை. பத்ரா எங்கே என்றும் தெரியவில்லை.

இடியும் மின்னலும் வெளிச்சம் காட்டியபோது - அவனுக்குள் எப்படியாவது இங்கிருந்து தப்பினால் போதுமென்றாகி விட்டது! வேண்டாம் பத்ராவும் வேண்டாம்; அவளைச் சுகப்படுத்தவும் வேண்டாம்! தன் வரை தப்பினால் அதுவே பெருஞ்சுகம்!

ஓட ஆரம்பித்தான் அவன்.

உயிர் இருக்கிறது; உணர்வும் இருக்கிறது! இது போதும்.... என்கிற தெம்போடு தான் அந்த மழையிலும் ஊருக்குள் புகுந்து தலை தெரிக்க ஓடினான். இராக்கடைகளின் காடை விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மழையினால் வீடுகளுக்குப் போக முடியாதவர்கள் கடை வாசல்களில் ஒண்டிக்கொண்டு நின்றிருந்தார்கள்.

பத்ராவுக்கு மனசில் பழியுணர்வு தோன்றியதே இந்த ஒரு சம்பவத்தினால்தான். உலகில் உள்ள ஆண்கள் அத்தனை பேருக்குமே பெண் என்பவள் மோகம் தீர்க்கிற ஒரு விளையாட்டுப் பொம்மை என்கிற நினைப்பு மட்டும் தானிருக்கிறது!

அவளது அழகை முழுமையாகப் பார்த்த கிழவனுக்கும் சரி அரை குறையாகப் பார்த்த வாலிபருக்கும் சரி-ஒரே ஒரு ஆசை! எப்படியாவது பெண்மையை அண்டி அசுத்தப் படுத்த வேண்டும்! இதில் எல்லாருடைய இலட்சியமும் வித்தியாசமில்லாமல் இருக்கிறது!

பத்ராவின் நெஞ்சுக்குள் வன்மம் வடிவு கொண்டுவிட்டது!

பத்ராவிடமிருந்து தப்பியோடிய அந்த இளைஞனை கடைவீதியில் யாருக்குமே அடையாளம் தெரியவில்லை.

சிலர் அவனைப் பார்த்து பயந்து மிரண்டு போனார்கள்.

அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. 'ஏன் நம்மைப் பார்த்து எல்லாரும் இப்படிப் பயப்படுகிறார்கள்?' - யோசித்தான்.

வழக்கமாகப் போகிற ஒரு கடைவாசலில் ஏறிநின்றான். அந்தக் கடைக்காரனும் மிரண்டு போனான்.

"ஏண்டா என்னைப் பார்த்துப் பயப்படுறே? நான்தான் கோபால்! அடையாளம் தெரியலையா?"

-கேட்டான் அவன்.

"என்னடா ஆச்சு உனக்கு" என்று கடைக்காரன் பதறினான்.

அதுவரை இந்தக் குடிகார கோபாலுக்குத் தெரியாது-தனக்கு என்ன நடந்திருக்கிறதென்று!

இருட்டறைக்குள் பத்ராவைப் பிடிக்கக் கைகளை வீசிவீசி அசைத்த போது..... தன் கைக்கு அகப்படாமல் பத்ரா எங்கேயோ ஒதுங்கி நின்று வேடிக்கை காட்டுவதாகத்தான் நினைத்தான்.

அதன் பிறகு-

"ஹேய் பத்ரா! என்ன நீ? ஆளைக்கூப்பிட்டு உள்ளே நிறுத்தி வச்சுட்டு....? வாம்மா இப்படி! வா....வா!" என்றான்.

அப்போதும் அதே மௌனம்!

அதே இருட்டு! ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை! தான் நுழைந்தது சோபன அறையா? அல்லது ஏதாவது தட்டுமுட்டுச் சாமான்களைப் பத்திரப் படுத்தி வைக்கிற நிலவறையா என்கிற சந்தேகம் வந்தது! சுவரையாவது பிடித்துக் கொள்ளலாமே... என்று தான் ஒதுங்கி ஒதுங்கிப்போனான்.

அங்கே அவனுக்கு எந்தப் பிடிமானமும் அகப்படவில்லை.

"பத்ரா!" என்று கத்தினான்.

"ஏமாத்திட்டியாடி என்னை?" என்று உள்ளங்கைக்குள் குத்திக்கொண்டான்.

அப்போது தான் தெரிந்தது.... அந்தச் சிறு வெளிச்சம்.

அது பூஜை அறையை ஒட்டிய ஒரு சிறு பகுதி வெளிச்சம் அடுத்த அறைக்குளிருந்து பரவிவந்தது.

அங்கே ஏழுதிரிக் குத்துவிளக்கு எரிந்தது.

ஹோம குண்டம் புகைந்தது.

உடனே தடுமாறியபடி போனான் கோபால். சிநேகமாக அவளுடைய தோளைத் தொட்டான்!

அதிர்ச்சி.

அவளிடமிருந்த அழகுக்கும்; அவளுடைய உடலின் தொடு உணர்வுக்கும் நிறைய வித்தியாசம்! அதை விட வித்தியாசம் அவள் எழுந்து முகத்தை திருப்பியபோது!

பத்ராவின் முகமே கோரத்தின் சொரூபமாகக் காட்சியளித்தது!

பயந்து போன அவன் ஒவ்வொரு அடியாகப் பின்னுக்கு வைக்க.... வைக்க.... முன்னால் அவள் வந்து கொண்டேயிருந்தாள். அவளது முகத்திலிருந்த கண்களில் ஏதோ வகை ஜுவாலை!

தன்னைச் சுட்டுச் சுட்டுப் பொசுக்குவது போலிருந்தது.

சொல்லிக் கொண்டிருந்தான் கோபால். கடைக்காரனின் நடுக்கம்..... லேசாக அடங்கியது!

"பொசுக்கற மாதிரியில்லே கோபாலா! நிஜமாகவே பொசுங்கிப் போயிருக்கு!" என்றான் அவன்.

"அப்படியா?"

"ஆமா இதோபரு!" ஒரு கண்ணாடியை எடுத்துக் கோபாலின் முகத்துக்கு நேராக நீட்டினான் கடைக்காரன்.

பார்த்தான் கோபால்.

புருவங்கள் மொத்தமும் பொசுங்கியிருந்தன. முடி கருகிப் போயிருந்தது. முகம் கறுத்திருந்தது! தோல் மொத்தமும் சுருங்கி அகோரமாயிருந்தான் அவன்.

கையில் வாங்கிய கண்ணாடியை அப்படியே வீசி உடைத்து விட்டான்.

"பத்ரா!" என்று கத்தினான் அவன்!

கடைவீதி மொத்தமும் திரும்பிப் பார்த்தது.

என்னவோ.... ஏதோ என்று ஓடோடி வந்தனர் எல்லாரும். மழையும் அப்போது லேசாக நின்றிருந்தது.

ஆளுக்கு ஆள் என்ன ஏது என்று விசாரித்தனர்.

கடைக்காரர் அள்ளி அள்ளிப் போட்டார். கோபாலுக்கு நடந்திருப்பது அநீதி!

ஒரு பெண்- போயும் போயும் ஒரு பெண்- இந்த ஊருக்கே ராஜகுமாரனைப் போலிருந்த கோபாலை இப்படிப் பொசுக்கியிருக்கிறாளே......

-இந்தக் கோபம் தான் எல்லாரிடமும்!

போதாதற்குக் கோபால் இன்னொரு தகவலையும் பேச்சோடு பேச்சு தன் மீது பழி வராமல் சொல்லிக் கொண்டான்.

"செறுக்கி மக! அவளே தாண்டா என்னைக் கூப்பிட்டா! போனால் போகுதுன்னு தான் போனேன். என்னவோ மனக்குறை! பாவம்-எடுத்துச் சொல்லப் போறான்னு உள்ளே போனா, என்னை இப்படிப் போட்டு பொசுக்கியிருக்காளே!"

அவன் பேசியதைக் கேட்டதுமே பத்ராவுக்கு எதிராக பலரும் சிளர்ந்து விட்டார்கள்.

"என்ன திமிர் இருக்கணும் அவளுக்கு?"

"அவுங்கம்மா ஒருத்தனை வெச்சிட்டுருந்தா! அவனையும் ஒரு நாள் குளத்ததிலே கொலை பண்ணிப் போட்டுட்டா. அடுத்த மூணாவது நாளே அம்மாவையும் கொன்னுட்டா! இப்ப.... இப்படிக் கோபாலையும் கொழுத்தியிருக்காளே! இவளைச் சும்மா விட்டுவைக்கவா?"

"ஒரு பொட்டச்சிக்கு இப்படி ஒரு வெறியிருந்தா...நாமெல்லாம் எதுக்குடா வேட்டியைக் கட்டிக்கிட்டிருக்கணும்?"

ஆளுக்கு ஆள் கேள்வி கேட்கத் துவங்கியதுமே-

ஓர் அதிகாரக்குரல் அந்தக் கூட்டத்தில் கணீரென்று கேட்டது:

"வாங்கடா எல்லாரும்! இப்பவே போவோம். அவளை என்னான்னு கேட்போம்!"

இந்தக் குரலைக் கேட்டதுமே அத்தனைபேரும் ஒன்றாகக் கூடினார்கள். காற்று வீசி அடித்தது.

"எடுங்கடா பந்தத்தை!" பிளிறினார் ஒருவர். கடையிலிருந்த பந்தக் கட்டுகளை ஆளுக்கு ஒன்றாக உருவிக் கொண்டனர்.

பூஜை அறையிலிருந்து வெளியே வந்த பத்ராவுக்குத் தூக்கம் கண்களைத் தாலாட்டியது! மெல்ல மெல்ல நடந்து போய்த் தனது அறைக் கதவைத் திறந்தாள். கட்டிலின் மீது போய் விழுந்தாள். கண்கள் உறக்கத்தைத் தழுவும் நேரம்.

மனசுக்குள் எதையோ கண்டு மிரண்டதைப்போல் அவள் துள்ளி எழுந்து உட்கார்ந்தாள்.

அப்புறம்?

அறையை விட்டு வெளியே வந்தாள்; முற்றத்தைப் பார்த்தாள்!

நூற்றுக்கணக்கான நெருப்புப் புள்ளிகள்....ஒன்றாகக் கூடி ஒருமித்துக் கொண்டு தனது இல்லத்தின் படிகளுக்குள் வருவதைப் பார்த்தாள்!

திடுக்கிட்டுப் போனாள்

இன்னும் வரும்

# 16

## எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!

கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம் கேட்கும் போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.




## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எம். யோகேஸ்வரன்
வயது: 25
முகவரி: 437, பிரதான வீதி, இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை




பெயர்: ஐ.அப்துல் ஹகீம்.
வயது: 18
முகவரி: 79, வான் வீதி, புத்தளம்
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, உதைபந்து.




பெயர்: வாணி ரஞ்சன்
வயது: —
முகவரி: 11, போகம்பர, கண்டி
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்



பெயர்: பாத்திமா நிஸ்ரத்
வயது: 12
முகவரி: 5/1, பெனிதுடுமுல்ல வீதி, நாவலப்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ். ஜமால்தீன்
முகவரி: P.O. BOX. 58439 RIYADH - 11594 K.S.A
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்து.



பெயர்: என் ரவி
வயது: 25
முகவரி: RATHAUS QUAI - 5 6004, LUZERN, SWITZERLAND
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: வி. புஷ்பராஜா
வயது: 26
முகவரி: 19, RUE JEAN MOINON 75010 PARIS, FANCE
பொழுதுபோக்கு: பேனா நட்பு.

பெயர்: வி. ரவிக்குமார்
வயது: 18
முகவரி: 03, பிரதான வீதி, நோட்டன் பிரிட்ஜ்.
பொ.போ: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்

பெயர்: ஜெ. பிலிப்
வயது: 19
முகவரி: 133/7 ஏ, கொள்ளுப்பிட்டி லேன், கொழும்பு - 03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல்

பெயர்: ஐ. சிராஜ்
வயது: 16
முகவரி: 45 டி, பொரலந்த வீதி, ஹீல்ஓயா. பண்டாரவளை.
பொ.போ: பத்திரிகை.

பெயர்: யு. நிசாம்தீன்
வயது: 16
முகவரி: 269, ரங்வெடியாவ, கலேவெல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். அப்தூல் சலாம்
வயது: 24
முகவரி: 324, அல்ஹிலால் தென் வீதி, சாய்ந்தமருது-4
பொ.போ: பேனாநட்பு.



# மக்சீம் கார்க்கி

## 20

# தாய்

அவள் தன் கைகளை மார்போடு அணைத்துக்கொண்டு துடிதுடிப்போடு அவர்களுக்கு நம்பிக்கையூட்டினாள். எல்லாவற்றையும் தான் திறமையோடு, எவரும் காணாமல், செய்து முடிப்பதாகக் கூறினாள். முடிவாக அவள் ஒரே பரவசத்தோடு சொன்னாள்:

"பாவெல் சிறைக்குள்ளே கிடந்தாலும், அவன் கை சிறைக்கு வெளியிலும் நீண்டு சென்று வேலை செய்யும் என்பதை அவர்கள் உணரட்டும்; பார்க்கட்டும்!"

அவர்கள் மூவரும் தெம்புபெற்று எழுந்தார்கள். இகோர் தனது இரு கைகளையும் பிசைந்துகொண்டு, புன்னகை செய்தவாறே சொன்னான்:

"அற்புதம்! அபாரம்! உங்கள் யோசனை எவ்வளவு மகத்தானது என்பது உங்களுக்கே தெரியாது! பிரமாதத்திலும் பிரமாதம்!"

"இந்தத் திட்டம் மட்டும் வெற்றிகரமாக நடந்தேறினால், நான் நிம்மதியாகத் தூங்கச் செல்வதுபோல், சிறைக்குள் தயங்காமல் செல்வேன்" என்று சமோய்லவும் கைகளை பிசைந்தவாறே சொன்னான்.

"அம்மா! இந்த உலகிலேயே உங்களைப் போல அழகான பெண் மணியைக் காணமுடியாது!" என்று கர கரத்துக் கத்தினான் இகோர்.

தாய் புன்னகை செய்தாள். தொழிற்சாலைக்குள் துண்டுப் பிரசுரங்கள் பரவி வருவதை நிர்வாகஸ்தர்கள் கண்டால் அவர்கள் தன் மகனைமட்டும் குறைகூறிக் கொண்டிருக்க முடியாது என்பதை அவள் தெளிவாக உணர்ந்தாள். தான் எடுத்துக்கொண்ட வேலையைத் தன்னால் சாமர்த்தியமாக நிறைவேற்றிவிட முடியும் என்று அவள் நம்பினாள்; அந்த நம்பிக்கையினால் ஏற்பட்ட உவகை அவளது உடல் முழுவதையுமே புல்லரிக்கச் செய்தது.

"நீங்கள் சிறைக்குப் போனால், பாவெலை சந்தித்து அவனுக்கு ஒரு அருமையான தாய் இருக்கிறாள் என்ற செய்தியைச் சொல்லுங்கள்" என்றான் இகோர்.

"அவனைப் பார்ப்பதுதான் என் முதல் வேலை" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் சமோய்லவ்.

"செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் நானே செய்கிறேன் என்பதையும் அவனிடம் சொல்லுங்கள்; அவனுக்கும் அது தெரிந்திருக்கட்டும்" என்றாள் தாய்.

"அவர்கள் சமோய்லவைச் சிறைக்கு அனுப்பாவிட்டால......?" என்று கேட்டான் இகோர்.

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்றாள் தாய்.

அவர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொண்ட தாய் தன் பேச்சின் தவறை உணர்ந்து அதை மழுப்புவதற்காகத் தானும் சிரித்துக் கொண்டாள்.

"உங்கள் தொல்லைகளையே நீங்கள் கவனிப்பதால், ஊரார் தொல்லைகளை உங்களால் கவனிக்க முடியவில்லை" என்று கண்களைத் தாழ்த்திக்கொண்டு சொன்னாள் அவள்.

"அது இயற்கைதானே" என்று ஆரம்பித்தான் இகோர்: "நீங்கள் மாத்திரம் பாவெலையே எண்ணி எண்ணி வருத்தப்பட்டு மருகவில்லையா? அவன் சிறையிலிருந்து வரும்போது கொஞ்சம் தேறிக் கூட வருவான். அங்கே நல்ல ஓய்வு கிடைக்கிறது; படிப்பதற்கு அவகாசமும் உண்டு. ஆனால் நம்மை மாதிரி ஆட்கள் வெளியில் இருந்தால் இந்த இரண்டு காரியத்துக்கும் நமக்கு இங்கு நேரமே கிடைப்பதில்லை. நான் மூன்று முறை சிறைக்குப் போயிருக்கிறேன். ஒவ்வொரு முறையிலும் என் இதயமும் சிந்தையும் எவ்வளவோ பயனடைந்திருக்கின்றன. அந்த அனுபவம் இன்ப அனுபவமாக இல்லாவிட்டாலும், பலன் என்னவோ நல்ல பலன்தான்!"

"நீங்கள் மூச்சு விடுவதற்கே திணறுகிறீர்களே!" என்று அவனது எளிய முகத்தை அன்பு ததும்பப் பார்த்தவாறே கேட்டாள் தாய்.

"அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது" என்று ஒரு விரலை உயர்த்திக் காட்டிக்கொண்டே சொன்னான் அவன். "சரி, எல்லாம் ஒரு வழியாய் முடிந்தது என்றே நினைக்கிறேன் இல்லையா, அம்மா? நாளைக்கு உங்களிடம் அந்தச் சரக்குகள் வந்து சேரும். அப்புறம், யுகாந்திர இருளை அறுத்தெறியும் ரம்பம் மீண்டும் சுழலத் துவங்கும். பேச்சுச் சுதந்திரம் நீடூழி வாழ்க! தாயின் இதயம் நீடூழி வாழ்க! நான் வருகிறேன், நாம் மீண்டும் சந்திப்போம்!"

"வருகிறேன்" என்று அவளது கையைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டே சொன்னான் சமோய்லவ். "என் தாயிடம் இந்த மாதிரி விஷயங்களை என்னால் சொல்லக்கூட முடியாது."

"அவர்கள் எல்லோரும் ஒரு நாள் இதை உணரத்தான் போகிறார்கள்" என்று அவனை உற்சாகப்படுத்தும் முறையில் பேசினாள் பெலகேயா.

அவர்கள் சென்றவுடன் அவள் கதவைத் தாளிட்டாள்; அறைக்கு நடுவில்வந்து முழங்காலிட்டுப் பிரார்த்தனை செய்தாள். வெளியே பெய்யும் மழையின் ஒலியையே சுருதியாகக் கொண்டு அவள் பிரார்த்தனையில் ஈடுபட்டாள். அப்பிரார்த்தனையில் வார்த்தைகள் இல்லை. அவளது வாழ்க்கையிலே பாவெல் புகுத்தி விட்ட மக்களைப் பற்றிய ஒரு பெரும் சிந்தனையே பிரார்த்தனையாயிற்று. அவளுக்கு எதிராக உள்ள தெய்வ விக்கிரகங்களுக்கும் அவளுக்கும் இடையில் அந்த மக்கள் நகர்ந்து செல்வதாகப்பட்டது. அந்த மனிதர்கள் விசித்திரமாக ஒருவருக்கொருவர் நெருங்கியவர்களாக, ஆனால் தனியர்களாக இருந்தார்கள்.

அதிகாலையிலேயே அவள் மரியா கோர்சுனவாவைப் பார்க்கக் கிளம்பிப் போனாள்.

அந்தச் சாப்பாட்டுக்காரி வழக்கம் போல ஒரே ஆரவாரத்தோடு, அன்போடு தாயை வரவேற்றாள்.

"வருத்தமாயிருக்கிறாயா?" என்று தனது எண்ணெய்க்கையால் தாயின் தோளைத் தட்டிக்கொண்டே கேட்டாள்: "வருத்தப்படாதே. அவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். இல்லையா? போனால் போகட்டும்! அது ஒன்றும் வெட்கப்படுவதற்குரிய விஷயமில்லை. முன்னேயெல்லாம் திருடினார்கள் என்பதற்காக மனிதர்களைச் சிறையில் தள்ளினார்கள்; இப்போதோ நியாயத்தை எடுத்துச் சொன்னால் உள்ளே போடுகிறார்கள். பாவெல் பெரிதாக ஒன்றும் சொல்லி விடவில்லை. எல்லோருக்காகவும் அவன் கிளர்ந்தெழுந்தான். அனைவரும் அவனைப்புரிந்து கொள்கிறார்கள். அதனால் நீ அதை நினைத்து வருத்தப்படாதே. எல்லோரும் பேசுவதில்லை, ஆனால் நல்லவர் யார் என்று அனைவருக்கும் தெரிகிறது. நானே உன்னைப் பார்க்க வரவேண்டுமென்றிருந்தேன். ஆனால் நேரமே கிடைக்கவில்லை. சமையல் செய்வதற்கும் சாப்பாடு விற்பதற்குமே நாள் முழுவதும் சரியாய்ப் போய்விடுகிறது. ஆனால் உனக்கு நன்றாகத் தெரியும்; என்னதான் உழைத்தாலும், நான் என்னமோ பிச்சைக்காரியாய்த்தான் சாகப்போகிறேன். என் காதலர்களே என்னைத் தின்று தீர்த்து விடுவார்கள். இங்கே கண்டால் இங்கே, அங்கே கண்டால் அங்கே-எங்கேயும் அவர்கள் என்னைப் பாச்சைமாதிரி பிய்த்துத்தான் பிடுங்குகிறார்கள். அப்படியும் இப்படியுமாய் நான் பத்து ரூபிளை வாயைக்கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்து வைத்திருந்தால், எவனாவது ஒரு துடைகாலி வந்து, அதையும் பிடுங்கி வாயில் போட்டுக்கொண்டு போய்விடுகிறான். பெண்ணாகப் பிறந்தாலே இந்தப் பிழைப்புத்தான். ஊம், என்ன கழிசடைப் பிழைப்பு! தனியாய் வாழ்வது சங்கடமாயிருக்கிறது; எவன்கூடவாவது வாழ்வது அதைவிடத் தொல்லையாயிருக்கிறது!"

"நான் உன்னிடம் ஒரு காரியமாக வந்தேன். நீ என்னை ஒரு கையாளாக அமர்த்திக் கொள்கிறாயா?" என்று மரியாவின் வாயளப்பிற்கிடையே குறுக்கிட்டுப் பேசினாள் தாய்.

"அது எப்படி?" என்றாள் மரியா. பெலகேயா விளக்கிச் சொன்னாள்: மரியா தலையை அசைத்தாள்.

"நிச்சயமாய்!" என்றாள் அவள். "என் புருஷன் கண்ணிலே படாமல் நீ என்னை எப்படி மறைத்து வைத்திருந்தாய் என்பது நினைவிருக்கிறதா? சரி. இப்போது பசிக்கித் தெரியாமல் உன்னை நான் மறைத்து வைக்கிறேன். உன் மகன் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபட்டான், எனவே எல்லோரும் உனக்கு உதவத்தான் வேண்டும். அவன் ஓர் அருமையான பையன். எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள், அவனுக்காக இரங்குகிறார்கள். இந்த மாதிரிக் கைது செய்து கொண்டே போவதால், முதலாளிகளுக்கு எந்த லாபமும் வரப்போவதில்லை. அதுமட்டும் நிச்சயம். தொழிற்சாலையில் என்ன நடக்கிறது என்பதை நீயே கவனித்துப்பார். எல்லோரும் உம்மென்று முறைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த முதலாளிகள் இருக்கிறார்களே, அவர்கள் என்ன நினைக்கிறார்கள், தெரியுமா? ஒரு மனிதனின் காலில் ஓங்கியடித்துவிட்டால், அவன் ஓடாமல் நின்றுவிடுவான் என்று பார்க்கிறார்கள். ஆனால் உண்மையில் பத்துப்பேரை அடித்தால், நூறு பேர் முறைத்துக் கொள்கிறார்கள்!"

இவர்களது உரையாடலின் பயனாக மறுநாள் முதற்கொண்டு தாய் தொழிற்சாலையில் மத்தியான வேளையில் இருந்தாள். மரியா தந்த இரண்டு கூடைச் சாப்பாட்டோடும் நின்று கொண்டிருந்தாள். மரியாவோ சந்தைக்கு வியாபாரம் செய்யப் போய் விட்டாள்.

□ □ □

அந்தப் புதிய சாப்பாட்டுக் கூடைக்காரியைத் தொழிலாளர்கள் இலகுவில் அடையாளம் கண்டுகொண்டார்கள்.

"வியாபாரத்தில் இறங்கி விட்டியா, பெலகேயா?" என்று அவள் வந்ததை ஆமோதித்துத் தலையை ஆட்டிக் கொண்டே கேட்டார்கள்.

சிலர் அவளது மகன் பாவெல் சீக்கிரத்திலேயே விடுதலையாகி விடுவான் என்று ஆர்வத்தோடு உறுதி கூறினார்கள். சிலர் அவளுக்கு அனுதாபவுரைகள் புகன்றார்கள். சிலர் பொலிஸ்காரர்களையும், மனேஜரையும் வாய்க்கு வந்தபடி முரட்டுத்தனமாய்த் திட்டினார்கள். இவையெல்லாம் தாயின் இதயத்திலேயும் எதிரொலித்தன. சிலர் மட்டும் அவனைப் பழிவாங்கும் வர்ம சிந்தனையோடு பார்த்தார்கள். அவர்களில் ஒருவனான இஸாய் கர்போவ் என்னும் ஆஜர் சிட்டைக் குமாஸ்தா பற்களைக் கடித்துக் கொண்டு முணுமுணுத்தான்:

"நான் மட்டும் கவர்ணராயிருந்தால், உன் மகனைத் தூக்கில் போட்டிருப்பேன். மக்களைக் கண்டபடி நடத்திச் செல்வதற்கு அதுதான் சரியான தண்டனை!"

இந்த வர்மப் பேச்சு அவளது எலும்புக் குருத்தைச் சில்லிட்டு நடுக்கியது. அவள் இஸாய்க்குப் பதிலே சொல்லவில்லை. அவனது சின்னஞ்சிறிய மச்சம் விழுந்த முகத்தை மட்டும் ஒரு பார்வை பார்த்தாள்; பெரு மூச்செறிந்தவாறு, கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

தொழிற்சாலையில் அமைதியே நிலவவில்லை. தொழிலாளர்கள் சிறுசிறு கூட்டமாகக் கூடி நின்று, ஏதோ இரகசியம் பேசிக்கொண்டார்கள். மனங்கலங்கிப்போன கங்காணிகள் வேவு பார்த்துத் திரிந்தார்கள். ஆங்காரமான வஞ்சின வசவுகளும், குரோதம் பொங்கும் சிரிப்பொலியும் எங்கும் கேட்டுக்கொண்டிருந்தன.

இரண்டு பொலிஸ்காரர்கள் சமோய்லவை நடத்திக் கூட்டிக்கொண்டு அவள் பக்கமாகச் சென்றார்கள். அவன் தனது ஒரு கையைச் சட்டைப் பைக்குள் புகுத்தியவாறும், மறு கையால் தனது செம்பட்டை மயிரை ஒதுக்கித் தள்ளியவாறும் நடந்து சென்றான்.

சுமார் நூறு தொழிலாளர்கள் அந்தப் பொலிஸ்காரர்களுக்குப் பின்னாலேயே சென்று, ஆங்காரத்தோடு சத்தம் போட்டார்கள்; பொலிஸ்காரர்களைக் கிண்டல் செய்தார்கள்.

"என்ன சமோய்லவ், உலாவப் போகிறாயா?" என்று யாரோ கேட்டார்கள்.

"இப்போதெல்லாம் அவர்கள் நம்மவர்களை மதிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதனால் தான் நாம் உலாவப் போகும் போதுகூட, முன்பாரா பின்பாராப் போட்டுத் துணைக்கு ஆளனுப்பிவைக்கிறார்கள்" என்றான் வேறொருவன்.

இதைத் தொடர்ந்து திட்டித் தீர்த்தான்.

"இப்போதெல்லாம் திருடர்களைப் பிடிப்பதில் லாபமில்லை போலிருக்கிறது. அதனால்தான் அவர்கள் யோக்கியமானவர்களையே பிடித்துக் கொண்டு போகத் தொடங்கிவிட்டார்கள்" என்று நெட்டையான ஒற்றைக்கண் தொழிலாளி ஒருவன் சொன்னான்.

"இதுவரையிலும் அவர்களை இராத்திரியில் தான் பிடித்துக் கொண்டு போவது என்ற மரியாதையாவது இருந்தது. இப்போதோ பட்டப் பகலிலேயே பிடித்துக்கொண்டு போகிறார்கள். அயோக்கியப் பயல்கள்!" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கத்தியது.

அந்தப் பொலிஸ்காரர்கள் முகத்தைச் சுழித்துக்கொண்டே எட்டி நடக்க முனைந்தார்கள். தங்கள் மீது ஏவும் வசை மொழிகளைக் காதில் வாங்காத பாவனையில், எதையுமே கவனிக்காதவர்கள் போல் விரைவாக நடந்தார்கள். போகிற வழியில் ஓர் இரும்புக் கடற்பாரையைச் சுமந்து வந்த மூன்று தொழிலாளர்கள் அவர்களை வழி மறித்துக்கொண்டு சத்தமிட்டார்கள்.

"அப்படிப் போங்கடா, அட்டுப் பிடித்தவன்களே!"

சமோய்லவ் தாயைக் கடந்து செல்லும்போது தலையை ஆட்டினான்.

"நாங்கள் போகிறோம்!" என்று கசந்த சிரிப்புடன் கூறினான்.

அவள் வாய் பேசாது அவனை வணங்கி வழியனுப்பினாள். உதட்டிலே புன்னகை பூத்தபடி சிறைக்குச் செல்லும் நாணயமும் ஞானமும் நிறைந்த அந்த இளைஞர்களைக் கண்டு அவளது உள்ளம் நெகிழ்ந்தது. அவளது இதயம் தாய்மையின் பரிவோடும் பாசத்தோடும் விம்மியெழுந்தது.


அன்று அவள் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்த பிறகு குறைப்பொழுதையும் மரியாவுடன் போக்கினாள். அவளது வம்பளப்பைக் கேட்டுக்கொண்டே, அவளது வேலைகளில் தானும் பங்கெடுத்து உதவினாள். மாலையில் வெகு நேரம் கழித்து, அவள் தனது குளிர் நிறைந்து, வெறிச் சோடி வசதிகெட்டுப்போன வீட்டுக்குத் திரும்பிவந்தாள். வெகு நேரம் வரையிலும் அவள் மன அமைதியே காணாமல் என்ன செய்வது என்பதும் தெரியாமல், அங்குமிங்கும் நடந்து அலைக்கழிந்தாள். இருள் அநேகமாகக் கவிந்து படர்ந்து விட்டதைக் கண்டு அவள் உள்ளங் கலங்கினாள். ஏனெனில் இகோர் இவானவிச் தான் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப்போன அந்தப் பிரசுரங்களை இன்னும் கொண்டு வந்து கொடுக்கக் காணோம்.

ஜன்னலுக்கு வெளியே இலையுதிர் காலத்தின் கனத்த சாம்பல் நிற பனித்துண்டுகள் விழுந்து கொண்டிருந்தன. அந்தப் பனித்துண்டுகள் ஜன்னல் கண்ணாடிகளில் விழுந்து, உருகி வழிந்து சத்தமின்றி நழுவி வழிந்தன; அவை விழுந்த இடங்களில் ஈரம் படிந்த வரிக்கோடுகள் தெரிந்தன. அவள் தன் மகனைப்பற்றிச் சிந்தித்தாள்.....

கதவை யாரோ எச்சரிக்கையாய்த் தட்டும் ஓசை கேட்டது. தாய் விருட்டென்று ஓடிப்போய் நாதாங்கியைத் தள்ளினாள். சாஷா உள்ளே வந்தாள். தாய் அவளை ரொம்ப நாட்களாய் பார்க்கவே இல்லை. எனவே அவளைப் பார்த்த மாத்திரத்தில் அவள் அளவுக்கு மீறிப் பருத்திருப்பதாகத் தாய்க்குத் தோன்றியது.

"வணக்கம்" என்றாள் தாய், யாராவது ஒருவரேனும் வந்து சேர்ந்ததில் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சி. இனிமேல் அன்றிரவின் கொஞ்சநேரமாவது தன் தனிமையில் கிடந்து அவதிப்பட வேண்டியிருக்காது என்ற திருப்தி.

(தொடர்ந்து வரும்)



# "மேகம் சூழ்ந்த நிலவு"

**கவிப்பிரியா நிஷா**

காயத்திரியின் மனம் மிகவும் குழம்பிப் போயிருந்தது. நண்பி வினிதா மேற்படிப்பை முடித்துவிட்டு இன்று நாடு திரும்புகிறாள் என்பதை அறிந்ததிலிருந்து அவள் மனம் ஒரு நிலையிலில்லை. 'இந்த விஷயத்தை வினிதாவிடம் எப்படிச் சொல்வது? இதை அவள் தாங்கிக் கொள்வாளா? அவளை எப்படி சமாளிப்பது?'

மனதில் அடுக்கடுக்காக கேள்விகள் எழுந்தன. அவளால் இன்று வீட்டு வேலைகளில் ஒழுங்காக கவனம் செலுத்த முடியவில்லை. ஏதோ பிரமை பிடித்தவளாக வீட்டுக்குள்ளேயே வலம் வந்தாள்.

"ஹாய் காயத்திரி" சாட்சாத் வினிதாவேதான். மனம் முழுக்க பதற்றம் சூழ்ந்து கொண்டது. "வா வினிதா எப்படி இருக்கே?" மனதில் எழுந்த பதற்றம் வார்த்தைகளில் எழாதவாறு கேட்டாள். "ம்....நான் நல்லாத்தான் இருக்கேன். அதுசரி எயார் போர்ட்டுக்கு வரச் சொல்லி எழுதி இருந்தேனே. ஏண்டி வரல?" அவளது கேள்வி காயத்திரியை சற்று தடுமாற வைத்தது.

"அது வந்து...காலையில இருந்து ஒரே தலைவலி. அதான் வரக் கிடைக்கல" நெற்றியை அழுத்திக் கொண்டே சொன்னாள். "ஹும்...நீ என்னை வரவேற்க எயார் போட்டுக்கு வரலேன்னாலும் நான் உன்னைப் பார்க்க உன் வீட்டுக்கு வந்திட்டேன்" என்றவாறு காயத்திரியின் கழுத்தில் தன் இரு கரங்களையும் கோர்த்தவள், அப்போதுதான் அவள் கழுத்தில் தாலி கிடப்பதைக் கண்ணுற்றாள்.

"வாவ்! எப்போ கல்யாணம் பண்ணிக்கிட்டே? இதைப்பற்றி எனக்கு ஒண்ணுமே எழுதலியே. ஆமா உன் கரம் பற்றிய அந்த மன்மதன் யாரடி?" என்று கேட்டவள் எதேச்சையாக அந்தக் கல்யாணப் படத்தைப் பார்த்ததும் ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

"ஹேய் நீ..நீ...என்னோட மோகனையா கல்யாணம் பண்ணிக்கிட்டே?" காயத்திரி கலங்கிய விழிகளோடு தலையை அசைத்தாள்.

"அடிப்பாவி! மோசம் பண்ணிட்டியேடி! மோகனை நான் உயிருக்குயிராக நேசிச்சது தெரிஞ்சிருந்தும் எனக்கு துரோகம் பண்ணிட்டியேடி நீ நல்லா இருப்பியா?" அவளது தோள்களைப் பிடித்து குலுக்கினாள்.

"ப்ளீஸ் வினிதா. நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக கேளுடி" அவள் ஏதோ சொல்ல வந்தாள்.

"போதுமடி. இத்தனை நாளா நீ சொன்னதைக் கேட்டது போதும். உன் பேச்சைக் கேட்டதாலதான் எனக்கே உரித்தானவரை உனக்கு தாரைவார்த்துக் கொடுத்துட்டு நிற்கிறேன். மோகனை கல்யாணம் பண்ணிட்டு மேற்படிப்பை தொடரலாம்னு இருந்த என்னை படிப்பை முடிச்சிட்டு கல்யாணம் பண்ணிக்கன்னு நீ சொன்னது எதுக்குன்னு இப்போதானடி புரியுது" அவள் சொன்னதைக் கேட்டு துடித்துப் போன காயத்திரி "ஐயோ வினிதா வார்த்தைகளால் என்னைக் கொல்லாதடி" என்றாள் விசும்பலுடன்.

"நீ எதுக்குடி மாயக் கண்ணீர் வடிக்கிறே? அழ வேண்டியவ நான்தாண்டி. ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க, என்னோட மோகனை என்கிட்ட இருந்து பிரிச்ச நீ ஒரு நாளும் நல்லா இருக்க மாட்டே. இன்னையோட நம்ம நட்பு முறிஞ்சி போச்சுடி...... குட்பை!" அவள் வெளியேறினாள்.

"வினிதா...வினிதா....கொஞ்சம் நில்லும்மா. நான் சொல்றதை கேட்டுவிட்டுப் போ. ப்ளீஸ் வினிதா கொஞ்சம் நில்லு...!" அவள் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாது சென்று கொண்டிருந்தாள்.

தபால்காரன் தந்துவிட்டுப் போன மடலை பிரித்த வினிதா அதில் தன் விழிகளை மேயவிட்டாள்.

"என் உயிரிலும் மேலான நண்பி வினிதாவுக்கு....உனக்கு துரோகம் செய்ய வேண்டுமென்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக மோகனை நான் திருமணம் செய்ய வேண்டியதாயிற்று.

ஆமாம், மோகன் உயிர்வாழ்வது இன்னும் சொற்ப நாட்களுக்குத்தான். அவருக்கு பிளெட் கான்சர். மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் தங்கள் மகனுக்கு திருமணம் செய்து பார்க்க அவரது பெற்றோர் ஆசைப்பட்டனர். அதன் விளைவாக அவர்கள் என்னை அணுகினர். அனாதையான எனக்கு அவர்கள் நிறைய உதவிகள் செய்திருக்கிறார்கள்.

அந்த நன்றிக் கடனுக்காக என் வாழ்க்கையை நான் தியாகம் செய்து விட்டேன்.

இப்போது சொல் வினிதா..... நான் உனக்கு துரோகம் செய்து விட்டதாக நீ நினைக்கிறாயா? வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மோகன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். மரணத் தறுவாயில் இருக்கும் மோகனை ஒரே ஒருதடவை வந்து பார்த்து விட்டுச் செல். இதை நீ எனக்காகச் செய்ய வேண்டாம். நீ உயிருக்குயிராக நேசித்த மோகனுக்காகச் செய்..."

அதற்கு மேல் மடலைப் படிக்க முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள். காயத்திரியின் தியாக மனப்பான்மைக்கு முன்னால் தான் தோற்றுப்போய் விட்டதாக உணர்ந்தாள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கலைந்த நினைவுகள்



ஐ.எஸ் கிருஷ்ணப்பிரியா

ரகுநாதன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிரமத்துடன் இருமிக் கொண்டு இருந்தார். மனைவி பாக்கியம் பார்த்துக் கொண்டே இருந்தாள். "பாக்கியம் மகனுக்கு ரெலிபோன் எடுத்துச் சொன்னனீயே...." என்றார் இருமலினூடே ரகுநாதன். "ஓம் கதைச்சநதான். அவனுக்குச் சரியான வேலையாம். ஓஃபீசுல லீவு போட முடியாதாம். இப்போதைக்கு வரமாட்டானாம்." என்றவள் துக்கத்தை வெளிக்காட்டாமல் "இருங்க குடிக்க ஏதும் எடுத்துக் கொண்டு வாறன்" என பாக்கியம் உள்ளே போனாள். ரகு நாதன் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

ரகுநாதனின் மகன் தினேஷ் கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தான். அவனது மூத்த சகோதரிகள் இருவரும் திருமணம் செய்து கொண்டு கணவன்மாரின் ஊருக்கே சென்று விட்டனர். அடிக்கடி பெற்றோரை வந்து பார்த்துச் செல்வார்கள். தினேஷின் முறைப் பெண் கௌரி அவனது நினைவுகளைச் சுவாசித்துக் கொண்டு அவனுக்காகவே வாழ்பவள். கௌரியை உயிராய் நேசித்தவன் கொழும்புக்கு வந்ததும் மனம் மாறிப் போனான். காரணம் தினேஷ் அவனது அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண் சுபாவைக் காதலிப்பதுதான். தனது வீட்டுக்குப் பலமுறை இதைப்பற்றி கடிதத்தில் எழுதியிருக்கிறான். நேரிலும் சென்று பல தடவை சொல்லியிருக்கிறான். ரகுநாதன், தான் இந்தத் திருமணத்திற்கு சம்மதிக்கப் போவதில்லை என உறுதியாகச் சொல்லி விடவே தினேஷ் வீட்டுக்கே வருவதில்லை.

பாக்கியம் ரகுநாதனிடம் மௌனமாய் தேனீரைக் கொடுத்தாள். "பாக்கியம்! தினேஷ் வருவான்னு நான் நினைக்கலை. பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லுன்னு சொல்லுவாங்க. நான் சாகிறதுக்குள்ள அவனை ஒரு தடவை பார்க்கணும். இந்தக் கடிதத்தை பக்கத்து வீட்டு பையனிட்ட கொடுத்து போஸ்ட் பண்ணச் சொல்லிடு என்றவாறே கடித்தை ரகுநாதன் நீட்டினார். "ம்" என்ற பெருமூச்சுடன் பாக்கியம் கடிதத்தை வாங்கிக் கொண்டாள். ரகுநாதனின் மனம் சற்று ஆறுதலடைந்தது.

தினேஷ் மேல் ரகுநாதனுக்கு உள்ளூரக் கோபம் இருந்தது. கௌரியை தன் மருமகளாக்குவதில் நிறைய சந்தோசத்துடன் இருந்தவர் தினேஷின் பிடிவாதம் கண்டு கலங்கித்தான் போனார். வயதின் வேகம்- தினேஷ் விட்டுக் கொடுப்பதாயில்லை. எனவே ரகுநாதன் கௌரியிடம் தினேஷிற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தினேஷ்-சுபா திருமணத்திற்கு சம்மதித்து விட்டார்.

அப்பாவின் கடிதத்தைக் கண்ட தினேஷ் சந்தோஷத்தில் துள்ளினான். மீண்டும் கடிதத்தைப் படித்தான்.

*அன்புள்ள மகன் தினேஷிற்கு,*

*உனது நலத்திற்கு மனதார இறைவனை வேண்டுகிறேன். உனது இஷ்டப்படியே திருமணத்திற்கு சம்மதிக்கிறேன்.*

*உன்னை நம்பியிருந்த கௌரியின் நிலைமை சற்று சிந்தித்துப் பார். படிப்பு அழகு இவற்றுடன் கௌரி அடக்கமானவள் என்பதாலேயே அவளை உனக்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்திருந்தோம். உனது நல்வாழ்வுக்காகவே உனக்கு சகல விதத்திலும் பொருத்தமானவளைத் தெரிவு செய்திருந்தோம். எந்தப் பிள்ளையும் கெட்டுப் போக பெற்றோர்கள் வழி சமைக்க மாட்டார்கள்.*

*எல்லாம் உன் விருப்பப்படி நடக்கும். எனக்கும் சுகயீனம். விரைவில் வா. இத்துடன் முடிக்கிறேன்.*

*இவ்வண்ணம்*

*அப்பா ரகுநாதன்.*

தினேஷ் இந்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள சுபாவிடம் ஓடினான். "சுபா சுபா நம்ம கல்யாணத்துக்கு அப்பா சம்மதிச்சிட்டார்" எனச் சிரித்தவன் சுபாவின் முகமாற்றத்தைக் கண்டு அதிர்ந்தான். "ஹேய்....என்னாச்சுது?" என்றான். "தினேஷ் என்னை மன்னிச்சுடுங்க. நான் நாளைக்கு கனடா போறேன். என்னோட மாமா மகன் கோபி எடுக்கிறார். சின்ன வயசிலேயே நான் அவருக்கு நிச்சயிக்கப்பட்டவ. ஐ ஆம் சொறி" என்றாள் சுபா. தினேஷ் "சுபா...." என்று ஏதோ கூறவந்தவன் ஒன்றும் பேச வில்லை. சுபா சொன்னமாதிரியே அடுத்த நாள் சென்று விட்டாள்.

தினேஷிற்கு லீவு கிடைக்கவில்லை. அடுத்து வந்த நாட்களில் இரண்டு வார விடுமுறையுடன் வீட்டுக்குச் சென்றான். கௌரியின் துடுக்குத் தனமும் சிரிப்பும் அவனது மனதுக்குள் பசுமையாய் நிறைந்தது. மனம் நிறைய கௌரி இருந்தாள்.

பயணக் களைப்புடன் கௌரியின் வீட்டைப் பார்த்தான். அவனுக்குள் ஏதோ செய்தது.

"யார் அது கௌரிக்கு அருகில்?" எனக் கேட்டுக் கொண்டான். கௌரி ஏதோ சொல்ல அவன் கௌரியின் காதைச் செல்லமாகத் திருகினான். "ஐயோ" கௌரி சிணுங்கினாள். அவனும் கௌரியும் தினேஷைக் காண வில்லை. அவனுக்கு எதுவோ புரிந்தும் புரியாததுமாய்...வீட்டை அடைந்தான்.

அப்பா தினேஷைக் கண்டு முகம் நிறைய சந்தோஷமானார். அம்மா தினேஷின் தலையைத் தடவிய படியே "தினேஷ் போனவாரந்தான் கௌரிக்கு திருமணமாச்சு. உன்னோட அப்பாவுக்கு தெரிஞ்ச பையனாம். அவன் கௌரியை ஏற்கேனவே விரும்பியிருந்தவனாம் அப்பாதான் எல்லாம் முன் நின்று செய்தவர்..." அம்மா தொடர தினேஷ் அதிர்ந்து போய் மௌனமாய் அமர்ந்தான்.

# இனி வரமாட்டேன்



கிண்ணியா-சத்தார்

லேசான மழைத் தூறல்

ஒரு குடையென்பதால் நியூட்டனின் கைச் சட்டை கொஞ்சம்

கொஞ்சமாக ஈரமாகிக் கொண்டிருந்தது.

ஜூலி சிணுங்கினாள்; "நான் வீட்டுக்குப் போகணும்"

நியூ அவளுக்குப் பிடித்தமான சிரிப்பை சிரித்தான்.

அவள் புன்னகைத்தாள்.

"ஜூலி இந்த படம் இன்றையோட முடியுது. மிஞ்சியிருக்கும் காட்சி 6.30ம் 9.30ம்தான். இன்றைக்குப் பார்த்தாத்தான்...."

அவளொரு படப்பைத்திய மென்பதால் அவனின் வார்த்தைகளுக்கு கெதியாய் மயங்கினாள். என்றாலும் அம்மாவையும் அப்பாவையும் நினைக்க உடம்பு வியர்த்துப் போனது.

"ஜூலி... வீட்ல கேட்டாக்கா மழை வந்திட்டு அதான் தோழியோட... மத்தப் பொய்ய நீ சொல்லிடு"

நியூ கொடுத்த ஐடியாவைப் பத்திரப் படுத்தியவளின் காதுகளில் படம் ஆரம்பிக்கும் மணி கேட்க திரைக்கு விழிகளை விசால மாக்கினாள்.

கொஞ்ச நேரத்தில் ஜூலி அவனைப் பார்த்தது வெட்கித்தாள்.

"இந்தப் படமெல்லாம் இந்த வயசில பார்க்காட்டி எப்ப பார்க்கிற?"

அவன் சொன்ன வார்த்தைகள் நியாயமாகப்பட்டாலும் கலியாணத்திற்கு முன்பு அது பிழையென்றே தோன்றியது.

அப்போது நியூ தனது இடது கையை ஜூலியின் கால்களுக்கு மேல் வைத்தான். அவளுக்கு அது புதுசாகயிருந்தாலும் அந்நேரத்தில் அது வேண்டும் போலிருந்தது.

போகப் போக காட்சிகள் ஆபாசமாக ஜூலியின் உடல் முழுதும் ஏதோவொரு தூண்டலும் தாகமும் உண்டாக அதன் பதிலை நியூ செய்வது போல்தான் என்று ஏற்றவாறு அவனுடைய விரல்கள் படும் இடமெல்லாம் சுவைத்தாள்.

ஆங்கிலப் படமென்பதால் நேரத்தோடு காட்சி முடிந்துவிட்டதுமழை மட்டும் விடுவதாயில்லை.

"ஜூலி! ரூமுக்குப்போய் காலையிலே வீட்டுக்குச் செல்லலாம்" அந்த நேரத்தில் அவனை விட்டா துணை இல்லாததல் தலை மெதுவாக 'ஆம்' சொன்னது.

சூரியன் நித்திரை விட்டு எழுந்தான்.

ஜூலியும் எழுந்தாள். இரவு முழுதாக நடந்தவைகளை நியூவின் கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன. அவள் தட்டியெழுப்பியும் விழிக்காது படுத்திருந்தான்.

வீட்டுக்கு வந்து நியூ சொன்ன பொய்யை அவிழ்த்துவிட்டபோது அம்மா மௌமானாள்.

"மழைன்னா நனைஞ்சிட்டு வர்ரதுதானே"

கதிரையில் உட்கார்ந்தவாறு அப்பா கடிந்து விழுந்தார்.

"பாவம்ங்க...." ஜூலிக்கு வக்காலத்து வாங்கிக் கொடுத்த அம்மாவை கண்களால் வாழ்த்தி விட்டு ரூமுக்குள் உடைமாற்றினாள் ஜூலி.

அப்புறம் நாள் தவறாத சந்திப்புகள். இடைக்கிடை படங்கள்; பகல் ரூம் முத்தங்கள். "ஒரு நிமிடம் கூட நீ இல்லா விட்டால் நான் தவிக்கிறேன் ஜூலி" ஆயிரம் ஐஸ் சொற்களை அவளின் தலைகளில் அடுக்கிய நாட்களிலிருந்து.... ஒரு நாள் ஜூலிக்கு யாரோ நியூ பொய்யானவன். நிறையப் பெண்களை ஏமாற்றியவன் என்பதை காதில் போட்டனர்.

'தீ பட்ட இடத்திலே தேள் வந்து கொட்டியது' நியூவுக்கு 'எய்ட்'ஸாம்! இடிந்து போனாள் ஜூலி.

"எய்ட்ஸ் வாலிபன் கண்டு பிடிப்பு; அவருடன் தொடர்பு வைத்திருந்த நான்கு விலைமாதுகள் கைது. உயர்குடும்பத்தை சேர்ந்த சில பெண்களின் தகவல்களும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

பெயர் குறிப்பிட விரும்பாத இரண்டு பள்ளி மாணவிகளோடும் தான் தொடர்பு வைத்திருந்ததாக அவர் கடைசியாக தெரிவித்தார். மேலும் விசாரணை தொடர்கின்றது"

□□

றெஸ்லினா அவனின் நம்பரைச் சுழற்றினாள். அவனின் குரல் ஹலோ சொன்னது. "பத்திஸ் இன்றைக்கு படம் பார்க்க நான் வரமாட்டேன். இல்ல இனி எப்பவும் வரமாட்டேன். கலியாணம் முடிக்கிற வரையும் பெண்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவது போல் இன்று தினமுரசில் வந்திருக்கும். 'இனி வரமாட்டேன்' கதை பாடம் சொன்னதால் தான் எனது இந்த திருப்பம்.

உங்கள் மேசையிலும் பேப்பரிருந்தால் வாசித்துப் பாருங்கள்"

தங்கை நிறம் தீட்டிக்கொண்டிருந்த பேப்பரை அவசரமாக எடுத்து கதையை மளமளவென படிக்க ஆரம்பித்தான் பத்திஸ்.

சி..கதையாம் கதை. இன்றைக்காவது றெஸ்லினாவுக்கு வித்தை காட்டலாமென்றிருந்தேன். அதற் கிடையில்... என்றவாறு எழுதியவரின் பெயரை எரிச்சலாகப் பார்த்தான். அந்தப் பெயர் ஒரு நன்மை செய்து விட்டோம் என்னும் மகிழ்ச்சியில் பளிச்சென்றிருந்தது

---

தரையில் படுத்துக்கொண்டிருந்த கோகிலாவுக்கு தூக்கம் வரவில்லை. துக்கம் தொண்டையை அடைத்திருந்தது. கண்களினூடே வடிந்துக் கொண்டிருந்த கண்ணீர் முத்துக்கள் தரையை மெல்ல முத்தமிட்டுக்கொண்டிருந்தன தன்னோடு ஒட்டியபடி எதுவும் புரியாமல் உறங்கிக் கொண்டிருந்த தன் பிஞ்சுக் குழந்தையை தன்னுடைய வலக்கரத்தால் அப்படியே அணைத்துக்கொண்டாள்.

லேசாக தலை வலிப்பதைப் போன்ற உணர்வு எழ கால்களை நீட்டி அந்த அறையின் கூரையை கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருந்தவளின் மனம் கடந்த கால நினைவுகளுக்குள் நுழைய ஆரம்பித் திருந்தது.

•

கோகிலா!

அந்த வீட்டு மருமகளாய் அவ்வீட்டின் பூஜை அறையில் விளக்கேற்றும் ஆறாவது மாதம். நெற்றியில் திலகமிட்டு தலைநிறைய மலர்தொங்க பூஜை அறையிலிருந்து வெளிவந்தவளை அப்படியே அணைத்துக் கொள்கிறான் அவள் கணவன் மூர்த்தி.

"சீ..! விடுங்க....என்ன இது?" அவள் வேண்டுமென்றே சலித்துக்கொள்வதைப் போல நடித்தாள்.

"நான் சொன்ன மாதிரி என்ர கோக்கிக் குட்டிய மணந்து கொண்டன். அப்ப செய்த சத்தியம் உன்ன கைவிடமாட்டேனென்று! இப்பவும் என்ர கோக்கிய விட மாட்டன்!" அவன் அதிகமாய் கொஞ்சித்தள்ளினான்.

"விடுங்கோ..என்ன இது? அத்தை வரபோறா!"

"வரட்டுமே! வந்து பார்க்கட்டுமே!"

"என்ன இது? சின்னப்பிள்ளை மாதிரி!" அவள் வேண்டுமென்றே சிணுங்கினாள். அவன் அவளுதட்டில் உதடு பதித்தான்.

•

கோகிலா மூர்த்தி திருமணம் காதல் திருமணமாகவே இருந்தது. இவள் வசதியான குடும்பத்தில் பிறக்காதவளாயிருந்தாலும் வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவள். கோகிலாவின் குடும்பம் சாதாரண நிலையிலிருந்ததால் அவளின் பெற்றோர் கூட தம் அந்தஸ்துக்கு கூடிய ஒரு குடும்பத்தில் மகள் வாழப்போவதை கொஞ்சம் கூட விரும்பாமால்தானிருந்தார்கள். ஆனால் மூர்த்தி இவள் மேல் உயிரையே வைத்திருந்ததாலும் அவர்கள் திருமணத்தில் சீதனமென்ற பேச்சுக்கே இடமில்லா மலிருந்ததாலும் திருமணம் இனிதே நடந்தேறி முடிந்திருந்தது.

மூர்த்தியின் தாய்கூட அவளை தன் மகளைப்போலவே எண்ணி நடத்தினாள். கோகிலா கூட தன் கணவனைப்பற்றியும், தான் வாழ வந்த இடத்தைப் பற்றியும் நிறையவே பெருமைப்பட்டுக்கொள்வாள். அதற்கான நன்றியை அவள் தினந்தோறும் இறைவனுக்கு கூற என்றுமே மறந்ததில்லை. இப்போது கோகிலா கருவுற்றிருந்தாள்.

•

நாட்கள் நகர்ந்தன. அன்று ஒரு திங்கட்கிழமை மூர்த்தியும் அவள் தாயும் உறவினரொருவரின் திருமணத்திற்கு போய்விட்டு வந்திருந்தார்கள். கோகிலா நிறைமாதக் கர்ப்பிணியாயிருந்ததால் அவளால் வீட்டிலிருக்க வேண்டிய நிர்ப்பந்தம். வீட்டினுள் நுழைந்த மூர்த்தியின் முகம் வாடியிருப்பதை கண்ட கோகிலா துடிதுடித்துப்போனாள்.

"என்னங்கோ....உடம்புக்கு எதும் சுகமில்லையோ?" தேனீர்கோப்பையை நீட்டிக்கொண்டு கேட்டவளை நிமிர்ந்து நோக்கினான் அவன்.

"ஒன்றுமில்லை!" சொன்னவன் தொப்பென கட்டிலில் சாய்ந்து கூரையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"எப்படி கல்யாண வீடு? பொம்பள வீட்டுக் காரங்க எல்லாம் எப்படி?" அவள் கேட்க அவன் லேசாக புன்னகைத்தான்.

"அதிஷ்டக்கார மாப்பிள்ளை! பொம்பள வீட்டுல சீதனமா மட்டும் 25 இலட்சத்துக்கு மேல கொடுத்திருக்கினமாம்! ம்...அவன் கொடுத்து வைத்தவன்!" அவனின் பலமான பெருமூச்சு அவள் மனதில் முள்ளாய் தைத்துச் சென்றது.

•

கோகிலா நிறையவே அதிர்ந்துப் போனாள்.

"அத்தை என்ன சொல்லுறீங்கள்?" கண்கலங்கியிருந்தாள்.

"எல்லாமே உன்ர நன்மைக்கு தான் பிள்ள!"

"எதை அத்தை நன்மையென்றீங்கள்? என்ர மேல உயிரையே வைத்திருக்கிற அவரை விட்டுப்போட்டு என்ர அம்மா வீட்டுக்கு போகச் சொல்லுறதா நீங்கள் செய்யிற நன்மை?"

கோகிலா இஞ்ச பாரு பிள்ள! உனக்கும் உன்ர பிள்ளைக்கும் எந்த கஷ்டமும் வராம வாழ ஏற்படுற செலவு முழுக்க நாங்கள் தாறம்! நீ நான் சொல்லுறத கொஞ்சம் கேட்டு நடந்தாயென்றால் போதும்!" முட்டிக்கொண்டு வந்த அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் விம்மி அழத்தொடங்கினாள் கோகிலா.

"அத்தை இதை மாத்திரம் என்ர அத்தான் கேட்டாரென்றால் நிச்சியம் மனம் வெதும்பிப்போவார்! தயவு செய்து இனியும் என்ன சோதிக்காதேயுங்கோ!" கோகிலா தன் கரம் கூப்பி வணங்கி, பின் அத்தையின் கரம் பற்றி அழுதாள்.

"இஞ்ச பாரு பிள்ள! உனக்கு முன்னால இதை சொல்ல ஏலாமத் தான் உன்ர புருஷன் என்ன உன்கிட்ட சொல்லச் சொன்னான். ஏதோ காதல் அது இதுவென்று கல்யாணம் கட்டினீங்கள்! ஆனாலும் நாளைக்கு இதைவிட வசதியா வாழனுமென்டு அவனுக்கும் ஆசையிருக்குந்தானே பிள்ள! அதோட உங்கள் ரெண்டு பேருக்கும் நடந்த கல்யாணம் கூட இன்னும் பல பேருக்கு தெரியாது! அதால மூர்த்திக்கு இன்னும் மணமாகவில்லையென்டு நினைச்சி ஒரு பணக்கார வீட்டுல சம்பந்தம் வந்திருக்கு! நீ மட்டும் கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் நீயும் வசதியாய் வாழலாம்! அவனும் வசதியாய் வாழலாம்!" அவள் கூறிக் கொண்டே போக கோகிலா சிலையாய் நின்றாள்.

"என்னடி சனியனே! இன்னும்



ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

# சிறைமீளும் சிறுபுறா!

நித்திரை? எழும்படி! வேலையெல்லாம் போட்ட போட்டபடி கிடக்குது!" அத்தையின் அதிகார குரல் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டாள் கோகிலா. பொழுது லேசாக விடிந்திருந்தது. பட்டென எழுந்து குழந்தையையும் தூக்கிக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள். அதற்கிடையில் குழந்தை விழித்து பலமாய் அழுதுக்கொண்டிருக்க அப்படியே தரையில் அமர்ந்து குழந்தைக்கு தாய்ப்பாலூட்ட தொடங்கும் போது முதுகில் பலமாய் ஒரு உதை விழ நிலைகுலைந்து போனாளவள். குழந்தை இப்போது வீரிட்டு அழத்தொடங்கியது.

"நானும் எவ்வளவோ சொல்லிப் போட்டன்! இந்தப் பிசாசு வீட்ட விட்டு போகுதே இல்ல! என்ன பாவக்கிரகமோ தெரியல்ல!" மூர்த்தியின் தாய் தன் பங்குக்கும் விட்டு வைக்கவில்லை.

குழந்தை இப்போது இன்னும் பலமாய் வீரிட்டு அழுது கொண்டிருந்தது. மெல்ல எழுந்து குழந்தையை தோளில் போட்டுக் கொண்டவளின் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன.

"அத்தை இவ்வளவு நாளும் நான் பேசாமல் இருந்தது உங்கள் ரெண்டு பேருக்கும் பயந்துகொண்டோ அல்லது எனக்கு போறதுக்கு இடமில்லையென்டோ இல்லை. கட்டின பொண்ணு எந்த பிரச்சனை வந்தாலும் புருஷனோட சேர்ந்து வாழ்ந்து குடும்பப்பேர காப்பாத்திறது தான் முக்கியமென்டு நினைச்சன். ஆனால் உங்களிட்ட மனிதத்தன்மையே இல்லையென்றத இப்ப தெரிஞ்சு கொண்டன்! இதுக்கு மேலயும் நான் உங்களிட்ட வேலைக்காரியா இருக்கிறது என்னோட மடத்தனமென்று புரியுது! நீங்கள் ரெண்டு பேரும் மனுசங்களே இல்ல! பணப்பேய் பிடிச்ச மிருகங்கள்.

"ஒன்ட மட்டும் நினைவில வைச்சிக்கொள்ளுங்கோ நீங்களும் ஒரு வீட்டுல மருமகளா இருந்துதான் இப்போ மாமியாகியிருக்கீங்கள்! இன்றைக்கு இந்த நாட்டுல எத்தனையோ கன்னிப் பெண்கள் சீதனமில்லாததால மணமாகாமல் வீட்டுக்குள்ளேயே கவலையோடயும் கண்ணீரோடயும் வாழுறாங்கள். இப்படி இஞ்ச வந்து சிறைபட்டு இருக்கிறதுக்கு மேல அவுங்க கல்யாணமாகாமலேயே சொந்த வீட்டுக்குள்ள இருக்கிறது எவ்வளவோ மேல்! ஒரு பெண்ணை சீதனமில்லாமல் கைபிடிச்சி சுயமாவாழ வைக்க முடியாத உங்களுக்கெல்லாம் எதுக்கு கல்யாணம்?" கண்ணீரை துடைத்துக்கொண்டாள்.

குழந்தையை தூக்கிக்கொண்டவள் இருவரையும் ஒரு முறை நின்று பார்த்துவிட்டு புறப்பட்டாள். அவள் போவதை சிலையாய் நின்று பார்த்துக்கொண்டிருந்த இருவருக்கும் சிறியதோர் குற்ற உணர்வு இதயத்தில் துளிர்விட ஆரம்பித்திருந்தது.

இப்போது பொழுது நன்றாக புலர்ந்திருந்தது.

# இலக்கிய நயம்



# ஒரு கோப்பை மது



## தருவது ரசிகன்

மன்னவன் உதய மார்த்தாண்டனின் விழிகள் இரத்தமாய் சிவந்திருந்தன.

வெறிக்க வைத்த மது விழிகளைச் சிவக்க வைத்திருந்தது.

எதிரே-முதுகை வில்லாக வளைத்த படி, இன்னும் கொஞ்சம் வளைத்தால் மன்னவன் பாதத்தை முகத்தால் தொடுமளவு பணிவோடு அருமை நண்பர் குணபதி நின்றிருந்தார்.

"குணபதி!"

"மன்னா. மதி வண்ணா. சொல்லுங்கள், என்னவோ?"

"அருமை நண்பன் நீ. இத்தனை புகழாரம் எதற்கு?"

"நான் ஒரு சிறிய புழு. தாங்கள் சிங்க நிகர் தங்க மகன்."

மன்னவன் சிரித்தான். புகழ்வதை உள்ளே ரசித்தான். முகம் மலர்ந்தான்.

"குணபதி! மக்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?"

தாங்கள் செய்த தவப்பயன், தங்களைப் போல் ஒரு மன்னவர் கிடைத்தார் என்று."

"உண்மையாகவா?"

"சத்தியமாக!"

"மலர்க் குலம் என்ன நினைக்கிறது?"

கேட்டுவிட்டு கண்களில் விஷமக் குறும்போடு நோக்கினான்.

குணபதி சுற்று முற்றும் நோக்கிவிட்டு;

"தங்கள் மலை மார்பில் மாலையாய் வந்து ஆட ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று ஆவலாய் ஏங்கிக் கொண்டிருக்கிறது"

மன்னவன் உதய மார்த்தாண்டன் மீசையைத் தடவிக் கொண்டான்.

"அழகு மயில்களுக்கு என்மீது அத்தனை பிடிப்போ?"

"பிடிப்பல்ல மன்னவா பித்து!"

"தேசத்தை ஆளும் பொறுப்பை உன்னிடம் தந்துவிட்டு, தேன் மொழி மங்கையரின் தேகங்களை ஆள்வதில் குதிக்கத் துடிக்கிறது உள்ளம்."

மன்னவன் சொல்ல குணபதி நெளிந்தான். ஆட்சிக் கட்டிலில் தன்னை இருத்திப் பார்த்து ஒரு கணம் இன்பக் கனவில் நுழைந்து மீண்டான்.

மன்னவன் மறு கேள்வியை வீசினான்.

"கூட வந்திருக்கிறதா மயில்"

"அழைத்து வந்திருக்கிறேன்!"

"அழகிதானே?"

"நடமாடும் நந்தவனம்! மன்மதக் கலையில் கைதேர்ந்த காம பாணம்! மஞ்சத்தில் சதிராடும் கொஞ்சும் தேகம்! மொத்தமாய் சொன்னால், மீட்ட மீட்ட சுகம் தரும் தேவ கானம்!"

"பலே. குணபதி!"

"மன்னா!"

"நீதான் நண்பன்!"

"தங்கள் முகம் மலர்ந்தால் என் அகம் குளிரும்!"

"போதும், போய் அழைத்து வா! பூஜைக்கு வந்த மலர் பொறுத்தால் வாடிவிடும்!"

மன்னவன் உடல் சூடேறிக் கொண்டிருக்க உரத்து நகைத்தான்.

□□

உதய மார்த்தாண்டன் மீசை கோபத்தில் துடித்தது.

"நீயும் என் நண்பன். குணபதியும் என் நண்பன்!"

"குணபதி நண்பன் அல்ல; நச்சுப் பாம்பு!"

"பூப்போன்ற உள்ளம் குணபதிக்கு! அவன் மீது பொல்லாப்புச் சொல்லாதே!"

"தாழம்பூவுக்குள்ளும் நாக விஷம் கொண்ட பாம்பிருக்கும்!"

வாதிட்டவர் அமைச்சர் ஆவுடையார். அவரது வாதம் தேளாய் கொட்டியது மன்னனுக்கு!

"இறுதியாக என்ன சொல்லுகிறீர்?"

"தங்களை விட்டு விலகிச் செல்வதைத் தவிர வேறு வழி எனக்கில்லை என்று!"

"குறை என்ன?"

"நிறை என்ன என்று கேட்டால் சொல்லலாம். ஏனெனில் நிறை மட்டும் மிகக் குறைவாக இருக்கிறது.

"வருகிறேன் மன்னா. விடைபெறும் இந்த இறுதி நேரத்தில் திருவள்ளுவர் குறள் ஒன்று சொல்கிறேன் செவி கொடுங்கள்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

முகம் மட்டும் மலரும்படியாக நட்பு செய்வதல்ல நட்பு. நெஞ்சமும் மலரும்படியாக நட்புக் கொள்வதே நட்பு.

உன் நெஞ்சத்தில் சிலர் களை வளர்க்கிறார்கள். உன் முதுகை குறிபார்த்துக் கொண்டு முகத்துக்கு வாழ்த்துப் பாடுகிறார்கள். இறுதியாக அவர்கள் உன் நெஞ்சில் பால் வார்க்கப்போவதில்லை. விஷப் பற்களை பதிக்கப் போகிறார்கள்."

ஆவுடையார் குரல் தழு. தழுத்தது. மன்னன் முகத்தில் அலட்சியப் புன்னகை.

"நான் என்ன புத்தியில்லாதவனா?"

"புத்தியிருக்கிறது; அதனை சுற்றியிருக்கும் துதிபாடும் கூட்டம் சிதைக்கிறது! விழிகளிலிருந்தும் பகட்டு மோகம் உன் பார்வையை மறைக்கிறது! மன்னவருக்குரிய வேகம் இருந்தும் மங்கையர் மோகம் அந்த வேகத்தை வீச்சரிவாளாய் மாறி அறுக்கிறது."

"விரோதி போலப் பேசுகிறாய் நீ!"

"உள்ளதைச் சொன்னால் விரோதி என்கிறாய்! உண்மையைச் சொன்னால் துரோகி என்கிறாய்! நல்லதைச் சொன்னால் நாசக்காரன் என்கிறாய்! குறைகளோ நிறைந்துவிட்டன. எடுத்துச் சொன்னால் விரிந்து கொண்டே போகும். தவிர, விளங்கிக் கொள்ளும் நிலையிலும் தாங்கள் இல்லை."

"குற்றம் சாட்டுகிறாயா?"

"தவறு! சுட்டிக்காட்டுகிறேன்! குற்றம் சாட்டுவது எதிரிகள் மீது தான்; நண்பர்கள் மீதல்ல! நட்புக்கு உரம் நல்வழி சொல்வது. உள்ளத்து அன்புக்கு பலம் உரிய நேரத்தில் தகுந்தது சொல்லி தடம் மாறாமல் காப்பது."

"புளித்துப் போன போதனை. முகம் சுளிக்க வைப்பதே உன் அகத்துக்கு பிடித்த பொழுது போக்காகி விட்டது."

மன்னனவன் சலித்துக் கொண்டான். முகத்தில் வெறுப்பு உதித்தது.

"நல்லது உனக்குப் பிடித்த முடிவை எடுத்திருக்கிறாய்! பிரிவதே விருப்பம் என்றால் தடுப்பது என் நோக்கமல்ல."

அமைச்சர் ஆவுடையார் மன்னவனும், தன் ஆருயிர் நண்பருமான உதய மார்த்தண்டன் முகத்தை கடைசியாக நோக்கினார்.

இனியும் இங்கிருந்தால் எடுத்தெறிவாய் என்றுதான் துடிக்கும் மனதோடு பிரித்துக் கொண்டேன் உறவை! வருகிறேன்!"

ஆவுடையார் விடைபெற்றார். விழிகளில் திரண்ட நீரை முதுகு திரும்பிச் செல்லும் போது விரல்களால் துடைத்துக் கொண்டார்.

□□

சிறைக்குள் இருந்தது போதும் என்று விடுபடத்துடிக்கும் நெஞ்சத்து முயல்கள் இரண்டு. சிறை மீட்க துடித்தான் உதய மார்த்தாண்டன்.

"இந்த திராட்சை மதுவை முதலில் சுவையுங்கள்."

என்று குயிலும் இரவல் கேட்கும் குரலால் சொன்னாள் அவள்.

கோப்பை நிறைய மது. அவள் வயிற்றில் முகம் தவழ்ந்து தொப்புட் குழியில் உதடு புரட்டி, நிமிர்ந்து கரம் நீட்டி திராட்சை மதுக் கோப்பையை வாங்கிக்கொண்டான்.

"பொறுங்கள்!"

"என்ன?"

அவன் முகத்தை தன்னை நோக்கி இழுத்து உதடுகளை இதழ்களால் மூடிவிட்டு விலகி "ம்...இப்போது அருந்துங்கள்."

அருந்தினான். அவள் கேட்டாள், "சுவை எப்படி?"

இதைவிடச் சுவை சொக்க வைக்கும் உன் சோடி இதழ்கள்."

அவள் கலகல வென்று நகைத்தாள். மன்னனுக்கு அது கிணற்றுக்குள் இருந்து நகைப்பது போலக் கேட்டது.

"என் இதழ்கள் சொக்க மட்டும்தான் வைக்கும்! புத்தி கெட்ட மன்னா! நீ சுவைத்த மது உன்னை சொர்க்கத்திற்கே கொண்டுபோய் சேர்க்கும்!"

"நீ...என்ன...சொ...சொல்லுகிறாய்?"

"நீ சுவைத்த திராட்சை மதுவுக்குள் உன் உயிரைச் சுவைக்க காத்திருந்தது திராட்சியான நஞ்சு!"

அவள் சிரித்தாள். அவளது சிரிப்போடு வந்து கலந்தது குணபதியின் சிரிப்பொலி.

உயிர் பறவை மடியும் நொடியில் உதய மார்த்தாண்டனுக்கு ஆவுடையார் சொன்ன குறள் மட்டும் நினைவில் மின்னலாய் உதித்துச் சென்றது.

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு"**

குறள்-786
அதிகாரம்-79.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—96

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | ■ |
| | | ■ | 4 | | ■ | 5 |
| | ■ | ■ | 6 | | 7 | |
| 8 | 9 | | | ■ | | |
| ■ | | ■ | ■ | 10 | | |
| 11 | | | ■ | | ■ | ■ |
| | ■ | 12 | | | | |

### இடமிருந்து வலம்

01. அகத்தின் அழகு இதிலே தெரியும்.
03. மதுவோடு கலந்தது.
06. இதிலும் பொம்மைகள் செய்யலாம்.
08. வாங்குவது குற்றம்.
10. விடுகதையிலும் இது உண்டு.
11. சிலருக்கு இதை வளர்ப்பதில் ஆவல்.
12. மாலை உணவு.

### மேலிருந்து கீழ்

01. சுற்றிவளைப்பு என்றும் சொல்வதுண்டு.
02. பயிருக்குக் கெடுதி.
03. அப்பாவித்தனத்தையும் இப்படி அழைப்பர்.
04. இது தங்கமாகாது.
05. விழி வழியே பெருகும்.
07. நினைவாற்றலின் எதிரி.
09. இதன் அடிப்படையிலும் முடிவுகள் எடுக்கப்படுவதுண்டு.
10. பாம்பு இங்கு வாழும்.
11. இதை வீசலாம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 15.04.1995 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-96
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-94ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | வ | 2 சா | மி | ■ | 3 கா | சு |
| யா | ■ | த | ■ | 4 கூ | ர் | மை |
| 5 தி | 6 மி | ல் | ■ | ட் | ■ | ■ |
| ■ | ன் | ■ | 7 வ | ட | க் | 8 கு |
| 9 ஆ | ன | ந் | த | ம் | ■ | ம் |
| தா | ல் | ■ | ந் | ■ | ■ | ப |
| ம் | ■ | 10 அ | தி | தி | ■ | ல் |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 94 இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

01. எஸ். நாமகள், கண்டி.
02. செல்வி. ஏ.எம். நஸீரா, மினுவாங்கொட.
03. ஆர். குலேந்திரன், மஸ்கெலியா.
04. எம். சதாத், நாவலப்பிட்டிய.
05. செல்வி. என். ஜீவராணி, கொழும்பு-13
6. எவ். றினோஸா, தெல்தெனிய
7. எம். ஹுஸைன், கொழும்பு-14.
8. கே. சுரேஷ்குமார், பதுளை.
9. ஏ. நிவிட்டா டெபோறா, கம்பளை.
10. எஸ். செல்வநாயகம், மூதூர்

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

# சர்சையைக் கிளப்பியுள்ள சலீம் விவகாரம் முன்னாள் கப்டன் இம்ரான்கானும் அதிருப்தி.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணித் தெரிவு சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அணியில் இருந்து, கப்டன் சலீம் மாலிக் உட்பட 3 வீரர்கள் நீக்கப் பட்டுள்ளனர்.

அணியின் புதிய கப்டனாக விக்கெட் கீப்பர் மொயின் கான் நியமிக்கப்பட்டுள்ளார். துணைக் கப்டனாக சையிட் அன்வர் தேர்வு பெற்றுள்ளார். மொயின் கானின் தலைமையின் கீழ் அவரது அண்ணனான நதீம் கானும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் அணித் தேர்வை முன்னாள் கப்டன் இம்ரான்கான் கடுமையாக விமர்சித்துள்ளார். லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் சலீம் மாலிக் மீது குற்றம் நிரூபிக்கப்படாத சூழ்நிலையில் அவரை அணியிலிருந்து நீக்கியிருப்பது, அவர் மீதான குற்றச்சாட்டை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் இம்ரான் கான் கூறினார். அத்துடன் அமீர் சொகைலை துணைக் கபடனாக நியமிக்காமல் சையிட் அன்வரை நியமித்தது ஆச்சரியம் அளிக்கிறது என்றும் இம்ரான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு:

மொயின் கான் (கப்டன்), சையிட் அன்வர் (துணைக் கப்டன்), அமீர் சொகைல் ,வாசிம் அக்ரம், இன்சமாம் உல் ஹக், அசிப் முஸ்தபா, அக்கிப் ஜவாட், ஜவ்பர் இக்பால், அமீர் நஸீர், குலாம் அலி, நயீம் அஷ்ரப், இஜாஸ் அஹமட்(ஜூனியர்), அர்ஷத்கான், நதீம்கான்.



சலீம் மாலிக்

சார்ஜாவில் நடைபெறும் 5வது ஆசிய கோப்பைப் போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆகிய நாடுகள் மோதுகின்றன. இதோ ஆசிய கிரிக்கெட் போட்டிகளின் அட்டவணை.

ஏப்ரல் 5 - இந்தியா எதிர் பங்களாதேஷ்
ஏப்ரல் 6 - இலங்கை எதிர் பங்களாதேஷ்
ஏப்ரல் 7 - இந்தியா எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 8 - பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்
ஏப்ரல் 9 - இலங்கை எதிர் இந்தியா
ஏப்ரல் 11 - இலங்கை எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 14 - இறுதிப் போட்டி.

## லாராவின் ஒப்பந்தம்

இங்கிலாந்தில் உள்ள வோர்விக்ஷயர் கவுண்டி கிரிக்கெட் அணியில் 1996 முதல் 3 ஆண்டுகளுக்கு விளையாட மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி வீரர் பிரையன் லாரா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

இந்த ஆண்டில் அவுஸ்திரேலியா, மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட வேண்டியிருப்பதால் லாரா இந்த வருடம் கவுண்டி போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை.

**அந்த ஏழு வித்தியாசங்கள்**

1. முடி
2. கோழி
3. கண்
4. கட்டில்
5. திண்ணை
6. பேனா
7. வாய்

# மகாபாரதம் அங்கம் 75

**இவ்வாரம் (09.04.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

காலத்தின் குரல்:

மற்றெந்தப் போர் போன்றும் மகாபாரதப் போரும் முற்றுப் பெறும் என்று முடிவளிக்க முடியாது. சுற்றத்தார் மத்தியிலே சூழ்ந்தெழுந்த பகைமையினால் வெற்றி எவர் பெறினும் வீழ்வதுமவரினமே! கொட்டும் குருதிக்கும் கணக்கெடுத்துப் பார்த்திடவோ வெட்டுண்டு வீழும் வீர மறவர்களின் கட்டுடலைத் தானணைத்து கவலை கொள்ள யாருளரோ? தர்மமதைத்தான் காத்து அதர்மமதை தானழித்து கர்மவினைதான் புரிய களமாக அமைகின்ற குருச்சேத்திர மாங்கே கொலைக் களமாயானதங்கே! பலனெதையும் பாராமல் பார்த்தளவன் போர் தொடுத்து நிலை தளம்பாதிருக்க நீதிவழிநெறி முறைகள் கோர்த்தெடுத்த முத்தாரக் குவியலைப் போல் கீதையினை தேர்ந்தெடுத்தே கண்ணன் நொகுத்துரைத்தான் காணீரோ! போர்க்களத்தில் பாண்டவரை வீழ்த்துகின்ற வேட்கையுடன் காத்திருக்கும் கங்கைமைந்தர் காத்திருப்பது மேனோ?

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரம்-யுதிஷ்டிரர் தனது ஈட்டியை கீழ் நோக்கிப் பிடித்த வண்ணம் இரதத்தை விட்டு இறங்கி பாண்டவர் படை அணி கடந்து போவதை சகலரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**துரி:** ஆகா.....! பிதாமகரே! தர்மராஜன் யுதிஷ்டிரருக்கு போர் தொடங்குவதற்கு முன்னரே முடிவடைந்து விட்டது போல் தோன்றுகிறதே! அதோ பார்த்தீர்களா சமாதானப் பிச்சை கேட்கும் நோக்குடன் அவர் வருவதை......?

**துரோ:** சமாதானத்தை தர்மமாகக் கேட்கும் யுத்த தர்மம் பற்றி கிருபாச்சாரியாரோ நானோ எப்போதாவது உனக்குப் போதித்துள்ளோமா?

**கிருபா:** நல்லொழுக்க சீலரை உன்னுடைய நாவினால் சுடுவது யத்த தர்மமாகாது. யுதிஷ்டிரர் உனது அண்ணன், அவனுக்கு ஏற்படும் இழிவு உனக்கும் இழிவுதான்!

**பீஷ்ம:** இவன் அத்தகைய எல்லைகளையெல்லாம் கடந்து விட்டான் ஆச்சாரியாரவர்களே! துரியோதனா! தர்மராஜன் சமாதானப் பிச்சை கேட்க வரவில்லை மகனே!

**துரி:** நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவர், கவுரவப் படை சமுத்திரம் போல் திரண்டிருப்பதைக் கண்டு கதி கலங்கி அதனுள் அமிழ்ந்து விட்டார் என்பதுதான் உண்மை! சமாதானப் பிச்சை இல்லாவிட்டால் உயிர்ப் பிச்சை கேட்டுவருகிறார் என்று கருதுகிறேன்.

**பீஷ்ம:** பொறுமையைக் கடைப்பிடிக்கப் பழகிக்கொள் மகனே!

**யுதிஷ்டிரர் கவுரவப்படையை அணுகிவிட்டார்; பீஷ்மரிடம் சென்று வணங்குகிறார்.**

**யுதிஷ்:** வணக்கம் பிதாமகரே!

**பீஷ்மர் அமைதியாக வாழ்த்துகிறார். இரதத்திலிருந்து இறங்கி யுதிஷ்டிரரை அணுகுகிறார்.**

**யதிஷ்:** யுத்தம் தொடங்குவதற்கு தங்கள் உத்தரவு கோரி வந்துள்ளேன் பிதாமகரே!

**பீஷ்ம:** வெற்றி பெற வாழ்த்துகிறேன் மகனே! இவ்வாறு என்னிடம் வாழ்த்துப் பெற நீ வராதிருந்தால் தோல்வி அடையும்படி சாபித்திருப்பேன் நான்.

**யுதிஷ்:** தங்கள் உத்தரவினைப் பெறாமல் எதிரிகளுடனதானும் போர்புரியச் சென்றிருக்க மாட்டேன்! இந்த யுத்தம் தங்களுடன் அல்லவா?

**பீஷ்ம:** நான் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞை எனும் கயிறுகளால் கட்டுண்டமையினால் உனக்கு எதிராகப் போராட நேர்ந்துவிட்டது. வாழ்த்துக்களுடன் உனக்கு காயங்களைத்தான் என்னால் தரமுடியும்.

**யுதிஷ்:** அந்தக் காயங்களையும் தங்கள் வாழ்த்துக்களாகவே ஏற்றுக்கொள்கிறேன்! (துரோணரிடம் திரும்பி) வணக்கம் குருதேவரே!

**துரோ:** வாழ்க பல்லாண்டு!

**யுதிஷ்:** தங்கள் ஆசியையும் கோரி வந்துள்ளேன்!

**துரோ:** வெற்றி கிட்டட்டும் குந்தி மைந்தனே! இந்த யத்தம் தொடங்கியதும் குரு-சிஷ்யன் என்ற உறவுகளை மறந்துவிடு. ஏனெனில் எதிரிகளுக்கிடையில்தான் போர் நடைபெறமுடியும்! இன்று உனக்கு இறுதியாக ஒரு பாடம் புகட்டுகிறேன்! ஆயுதங்களை விற்பவன் வீரனாக மாட்டான். அவன் வெறும் பிரேதத்திற்கு சமானம்! பணத்துக்காகப் போரிடுபவன் பணத்திற்கு அடிமை! அவனுக்கு மதிப்பே கிடையாது. யுத்த முனையில் எதிரெதிரணியிலிருப்பவர்கள் உறவு கொண்டாட முடியாது. ஆகவே, என்னுடன் போரிடுவது உனது கடமை! உனது சகோதரர்களுடன் நீயும் உங்கள் குருவின் உபதேசங்களை மீறி அவமதிப்பை ஏற்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அர்ச்சுனன் என்மீது எய்யும் பாணங்கள் வெறும் அம்புகளாக அல்ல, அவை எனக்கு அவனளிக்கும் குருதட்சணையாகும் என்று அவனிடம் கூறு!

**குலகுரு கிருபாச்சாரியாரை யுதிஷ்டிரன் வணங்குகிறான்.**

**கிருபா:** வெற்றிபெற்று நீடூழி வாழ்க! பாடம் ஒன்று கூற நினைக்கிறேன்! நேரம் இருக்கிறதா?

**யுதிஷ்:** என் பாக்கியமாகக் கருதுவேன் குலகுரு அவர்களே!

**கிருபா:** பாண்டுவின் மூத்தவனே! உலோகாயத அம்சங்களினால் எவனும் கட்டுப்படுத்தப்படலாகாது என்பதே எனது இறுதிப் போதனை!

**யுதிஷ்:** நன்றி! குலகுரு அவர்களே! தங்களுடன் போர் பொருத உத்தரவு அளிக்கிறீர்களா?

**கிருபா:** இந்தப் போர் உன் கடமையல்லவா குந்தியின் மைந்தா?

**மதுரா மன்னர் சல்லியனிடம் யுதிஷ்டிரர் செல்கிறார்.**

**யுதிஷ்:** வணக்கம் மாமா!

**சல்லி:** நீடூழி வாழ்க மகனே! எனது படைகளும் ஆயுதங்களும் துரியோதனனுடன் இணைந்திருந்தாலும்-நானும் இப்பக்கம் சார்ந்திருந்தாலும் என் வாழ்த்துக்கள் என்றும் உனக்குத்தான் மகனே!

**துரியோ:** (கடும் சினத்துடன்) எதிரிகளுக்கு வெற்றி கிடைக்கட்டும் என்று வாழ்த்துக் கூறும் தளபதிகளும் பிரதானிகளும் கொண்ட பெரும் படையை வைத்திருப்பதில் பெருமைப் படுகின்றேன்.

**பீஷ்ம:** மகனே துரியோதனா! நீயும் யுதிஷ்டிரனை வணங்கி ஆசிகோரியிருந்தால் உன் அண்ணன், உனக்கு வெற்றி கிட்டவே வாழ்த்தியிருப்பான். ஆனால் உன் அகம்பாவம் உன்னை அதற்கு விடாது. எவராவது உன் பாதங்களைத் தொட்டு வணங்கினால் உன் கை அவன் தலைமீது உயர்ந்து வாழ்த்தும் அல்லவா? சகுனியின் பாதங்களைத் தொட்டு யுதிஷ்டிரன் வணங்கினாலும்-விரும்பாவிட்டாலும், இதே வாழ்த்தினை



சகுனி அளித்தேயிருப்பார்!

**யுதிஷ்டிரன் தன் படை சேர்ந்து இறை வணக்கம் செலுத்தியபின் உரையாற்றுகிறார்.**

**யுதிஷ்:** ஏ வாயு பகவானே! பாண்டு மாமன்னனின் மூத்த மகனாகிய நான்- இந்தப் போர்க்களத்தின் மத்தியிலே நின்று கூறும் வார்த்தைகளை, சகல படைத்தளபதிகள், அணித்தலைவர்கள், பிரதானிகள் மற்றும் போர் வீரர்கள் ஆகியோரின் காதுகளில் படும்படி எடுத்துச் சொல்வாயாக! தர்ம யுத்த களமாகக் காட்சிதருகிறது இந்த குருச்சேத்திரப் போர்க்களம்! தர்ம யுத்தத்தில் ஈடுபடுவது கடமை என்ற கருத்துடன் இங்கு வந்துள்ள அனைவருக்கும் ஒன்று கூறுகிறேன!- உண்மையான தர்மம் எந்த அணியைச் சார்ந்திருக்கிறது என்று எவர் கருதினாலும் இந்த வேளையிலே அவர்கள் அணிமாற்றிக் கொள்ளலாம். இங்கிருந்து எனது தம்பி துரியோதனனின் அணியில் போய்ச் சேர விரும்புபவர்கள் போகலாம். அதே போல் அங்குள்ள வர்களும் இங்கு வந்து சேரலாம். பிதாமகர் சங்கினை ஊதிப் போரினைத் தொடங்குவதற்கு முன்னர் அணிமாற விரும்புவோர் மாறிக் கொள்ளலாம்.

**துரியோதனன் அணியிலிருந்த யுயுத்சு, பாண்டவர் அணிசேர வருகிறான்.**

**யுயுத்:** தேர்ச் சாரதியே! எனது இரதத்தை அண்ணன் யுதிஷ்டிரர் அணி நோக்கிச் செலுத்து!

<u>பின்னணிப் படல்:</u>

**சக உதிரச் செல்வங்கள் சமர்புரியும் போதினிலே**
**இகமதிலே அவரை ஈன்றெடுத்த அன்னை குலம்**
**எவரணியைச் சேருவதோ, யாரையார் வாழ்த்துவதோ?**
**புவிதனிலே எக்காலும் இக்கோலம் கண்டதில்லை!**

□□□

**துரி:** பார்த்தீர்களா! மாற்றந்தாய்ப் பிள்ளைகள் எப்போதும் மாறாகத்தான் நடந்து கொள்வார்கள்!

**சல்லி:** ஒன்றை மறக்க வேண்டாம் காந்தாரி மைந்தா! அந்தப் பக்கத்திலும் மாற்றந்தாய் மக்கள் இருவர் இருக்கின்றனர். நான் உன் அணியைச் சேர்ந்ததைக் கண்டு தாய் மாமன் என்றும் பாராமல் என்னை கொல்ல முன்வந்தார்கள் அவர்கள்!

**பீஷ்ம:** மதுரா மன்னர் கூறியது சரியே! இந்த தர்ம யுத்தத்தில் ஒவ்வொரு போர்வீரனும் தனது விருப்பப்படி அணி சேருவது அவரவர் கடமை!

**துரி:** தர்மம் அந்தப் பக்கம் தான் இருக்கிறது என்றால் தாங்கள் இங்கென்ன செய்கிறீர்களோ?

**பீஷ்ம:** அது தான் ஏற்கெனவே கூறி விட்டேனே! தர்மநியாயம் படைகளுடனான உறவு முறைகளுக்கு அப்பாற்பட்டது. தீர்மானம் எடுப்பது அவரவர் சொந்த விருப்பு வெறுப்புகளுக்குட் பட்டது.

**துரி:** அப்படியானால், தர்ம நியாயங்கள் யுதிடிரரின் அணியில்தான் உள்ளது என்கிறீர்களா?

**பீஷ்ம:** இக்கேள்விக்குரிய, விடையை உன்னிடமே கேட்டுத் தெரிந்துகொள் மகனே! உன் கண்களை மறைத்திருக்கும் அகங்காரத்தையும் அவாவினையும் அகற்றி விட்டுப் பார்! தர்மநியாயங்கள் எந்தப் பக்கம் உள்ளன என்பது உனக்குப் புலப்படும்!

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரம்-காந்தாரி அந்தப்புரம்.**

**தோழி:** வணக்கம் மகாராணி!

**காந்தா:** போர் முனையிலிருந்து ஏதாவது தகவல் வந்துள்ளதா?

**தோழி:** ஆமாம்! அஸ்தினாபுரிக்கு நற்செய்தியல்ல! இளவரசர் யுயுத்சு, பாண்டவர் அணிக்குப் போய்ச் சேர்ந்து விட்டாராம்!

**காந்தா:** யுயுத்சு என்ன யாரோ எதிரிகளுடனா சேர்ந்து விட்டான்? ஒரு சகோதரன் அணியிலிருந்து மற்றுமொரு சகோதரனுடைய அணிக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறான்.

**தோழி:** இருப்பினும் மகாராஜா இதனால் பெரும் கவலையடைந்து காணப் படுகிறார்!

**காந்தா:** இந்தப் போரில் எவர்வென்றாலும் தோற்றாலும் பாரத வம்சப் பெரியவர்கள் துக்கத்தில் மூழ்கத்தான் வேண்டியிருக்கும். இந்தப் போர் எப்படி யும் இனித்தவிர்க்க முடியாததொன்று. எப்படியோ நடந்து முடியட்டும்!

-காட்சி மாற்றம்-

**குருச்சேத்திரம்-போர் தொடங்குவதற்கான அறிகுறியாக பீஷ்மர் சங்கை முழங்குகிறார். இருதரப்புப் படைகளும் கடுமையாக மோதுகின்றன.**

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரம்-திருதராட்டிரன் அரண்மனை.**

**திருத:** போர் முனையில் உன் முழுக்கவனமும் இருக்கட்டும் சஞ்சயா! என்னைப் பொறுத்தவரை யார் முதலில் தாக்கினார்கள் என்பது பிரதானம்! முதல் பாணத்தை யார் தொடுத்தார்கள்?

**சஞ்ச:** படைகள் முன்னேறுகின்றன. ஆனால் மோதல் ஆரம்பமாகவில்லை மகாராஜா!

**திருத:** முதல் கணை தொடுக்கப்பட்டதும் என்னிடம் கூறிவிடு சஞ்சயா! போரின் முடிவினைப் பற்றி எனக்கு எதுவித கவலையுமில்லை. ஆனால் வரலாறு பற்றித்தான் கவலைப்படுகிறேன். எனது படைகள்தான் என் தம்பியின் புதல்வர்கள்மீது முதல் தாக்குதலைத் தொடங்கினர் என்று வரலாறு குத்திக் காட்டலாகாது சஞ்சயா!

**சஞ்ச:** வரலாற்றின் வாயை எங்கே கட்டுப்படுத்தப் போகிறீர்கள் மகாராஜா? இது ஒரு நெடுங்கதை! அரக்கு மாளிகை, நாட்டைத் துண்டாடியமை, சொக்கட்டான் ஆட்டம் அதனைத் தொடர்ந்து பாஞ்சாலியின் துகிலுரிதல் ஆகிய பல சர்ச்சைக் குரிய கேள்விகளை வரலாறு தங்களிடம் கேட்கத்தான் போகிறது. இவற்றிலிருந்து தப்பிக்க தங்களால் முடியுமா? இவற்றில் எந்தப் பாவச் செயலிலிருந்து தாங்கள் தப்பிக்க முடியும்?

**திருத:** என்னுடைய வரலாறை எடுத்துரைக்க வேண்டாம். இவற்றுக்கெல்லாம் பழியை காந்தார மன்னன் சகுனி மீதும் கர்ணன் மீதும் போட்டு விடுவேன். அதை விடுத்து, போர் முனை சென்று அங்கு நடப்பதைக் காண முடியாத எனக்கு -அங்கு நடைபெறுவனவற்றை எடுத்துக் கூறு.

**சஞ்ச:** தங்கள் கட்டளைப்படியே ஆகட்டும் மகாராஜா!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்.

**யுதிஷ்:** பிதாமகரின் முன்னேற்றத்தை அர்ச்சுனனால் கூட தடுக்க முடியாது போனால் அவரை எம்மில் யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

**அபிமன்யு:** நான் போகிறேன் பெரியப்பா!

**யுதிஷ்:** சரி அப்படியே செய் மகனே! போய்வா..!

**அபி:** சாரதியே எங்கே! இரதத்தைச் செலுத்து....!

**பயங்கர யுத்தம் நடைபெறுகிறது. அபிமன்யு முன்னேறி பீஷ்மரை எதிர்கொள்கிறான்.**

**பீஷ்ம:** நீ யார் என்பதைக் கூறு குழந்தாய்!

**அபி:** வாசுதேவ கிருஷ்ணனின் மாணாக்கன் யான்! மாவீரர் கங்காபுத்திரர் பீஷ்மரின் கொள்ளுப்பேரன் அர்ச்சுனனின் மகன்-அபிமன்யு என்பெயர்!

**பீஷ்ம:** மிகவும் இளம் பிராயத்தினனான நீ இந்த வயதில் உன் உயிரை போர் முனையில் விடத்துணிந்தது நியாயமா?

**அபி:** பிதாமகர் அவர்களே! போர்க்களத்தில் தனது உயிரை அர்ப்பணிக்கத்துணியும் வீரனுக்கு வயது வரம்பு கிடையாதே! எனக்கு அதற்கான வயதுவர வில்லை என்றால் தாங்கள் தங்களுக்குரிய போரிடும் கால எல்லையைக் கடந்து விட்டீர்களே! தங்களைப் போன்ற ஒரு மகாபுருடரை எனது முதல் போர்க்களத்தில் சந்தித்து அவருடன் போர் புரிவதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்! தங்களுடன் போரிட உத்தரவு வழங்குவதுடன் தங்கள் ஆசியினையும் தந்தருளுக!

**பீஷ்ம:** என்னைப் படைத்தவனே! என்னை எதிர்த்து நின்று என்னுடன் போர் பொருத எத்தகையவர்களை அனுப்பியிருக்கிறாயப்பா...! எனக்கு உயிருக்குயிரானவர்கள் மீது கணை தொடுக்க வைத்து விட்டாயே இறைவா! மகனே! போருக்கு ஆயத்தமாகிவிட்டாயா?

-காட்சி மாற்றம்-

**அஸ்தினபுரம்-திருதராட்டிரருடன் சஞ்சயன்.**

**சஞ்ச:** மகாராஜா! இந்தப் போரினைப் பார்ப்பதற்கு என்னால் முடியாதிருக்கிறதே!

**திருத:** ஏன்...ஏன் நமது படைகள் அத்தனையும் செயலிழக்க வைக்கப்பட்டு விட்டனவா?

**சஞ்ச:** இல்லை மகாராஜா!

**திருத:** எனது புதல்வர்கள் பத்திரமாகத்தானே உள்ளனர்?

**சஞ்ச:** ஆமாம் மன்னா!

**திருத:** எனது படைகள் தோல்வி அடையவில்லை! எனது புதல்வர்களுக்கும் எதுவும் நடக்கவில்லை! அப்போ ஏன் உன்னால் இந்தப் போரினைப் பார்க்க முடியாதிருக்கிறது? சஞ்சயா! தாத்தா பிதாமகருடைய உயிருக்கு எதாவது ஆபத்து ஏற்பட்டு விட்டதா?

**சஞ்ச:** பிதாமகர் தான் விரும்பியபோது மட்டுமே சாவினை அணைக்க முடியும் என்றிருக்கும் போது அவருக்கு உயிராபத்து எப்படி ஏற்பட முடியும்? அஸ்தினாபுரத்தின் பாதுகாப்புக்கான உறுதி காணும்வரை அவர் உயிர் துறக்கப் போவதில்லை! அர்ச்சுனனின் வீரப்புதல்வன் அபிமன்யு இப்போ பிதாமகருடன் போர் புரிகிறான் மகாராஜா! பிதாமகரின் பாதங்களைத் தொட்டு வணங்க வேண்டிய கைகள் அவர் மீது கணை தொடுக்க வில்லேந்தி நிற்கின்றன! அவனுக்கு நீடூழி வாழ ஆசி வழங்க வேண்டிய கைகள் அவன்மீது கணைகளை தொடுக்கின்றன. பரதவம்ச வழித்தோன்றல்கள் குருதி சொட்டச் சொட்டக் காயம் பட்டு வீழ்கின்றனர். அவர்கள் சிந்தும் இரத்தம் அத்தனையும் பரத வம்சத்தின் இரத்தமல்லவா மகாராஜா!

**திருத:** வீரர்களின் இரத்தம் சிந்தப்பட வேண்டியதே! வீரர்கள் உடம்பில் பெறும் காயங்களே அவர்களுக்கு அணிகலன்கள். காயங்கள் அதிகரிக்க அதிகரிக்க போரார்வமும் அதிகரிக்கவே செய்யும்! போர்க்களத்தில் என் புதல்வர்கள் பற்றியதகவலை அறிந்து கூறு! குந்திமைந்தன் பீமனிட்ட சபத ஒலி என்காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஆகவே துச்சாதனனைக் கொஞ்சம் கவனி!

**சஞ்ச:** துச்சாதனன் இப்போது நகுலனுடன் போரிடுகிறான் பிரபு!

**நகுலனுக்கும் துச்சாதனனுக்கும் நடைபெற்ற போரில் துச்சாதனின் போர்க் கலங்களை நகுலன் வீழ்த்தி விடுகிறான்!**

**நகுல:** துச்சாதனா! என் பீமண்ணா உன்னைக் கொல்ல சபதம் பூண்டுள்ளான். ஆகவே இப்பொழுது உன்னைக் கொல்லாமல் விடுகிறேன். பாசறைக்குப் போய் உன் காயங்களுக்கு மருந்து தடவு.

**அபிமன்யுவும் பீஷ்மரும் பொருதுகின்றனர். இருவருக்கும் காயங்கள் ஏற்படுகின்றன.**

**பீஷ்ம:** நீடூழி வாழ்க மகனே! அர்ஜுனனைப் போல் பாரதம் என்றும் உன் புகழ் பாடும்! உன்னால் என்மேனி ஏற்ற புண்கள் உன்மீது ஆழ்ந்த மதிப்பினை ஏற்படுத்துகின்றன மகனே! உனக்கும் எனக்கும் நடைபெறும் போரில்-உன்னால் என் உயிரைப் பறிக்க முடியாது; அதே போல் நானும் உன்னைக் கொல்லத் துணிய மாட்டேன். ஆகவே உன் இரதத்தில் நீ வேறு எப்பக்கமாவது செல்வாயாக..!

**அபி:** மன்னியுங்கள் பிதாமகரே! தங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கவே தான் நான் இங்கு வந்துள்ளேன். ஆகவே இங்கிருந்து தான் நகர மாட்டேன்.

**பீஷ்ம:** என்னைத் தடுத்து நிறுத்த உன்னால் முடியாது மகனே! சாரதி இரதத்தை எடு!

**அபிமன்யு ஒரு பாணத்தை ஏவுகிறான். அது பீஷ்மர் முன்னேறும் பாதையில் ஒரு வேலியை அமைத்துத் தடுக்கிறது.**

**பீஷ்ம:** அர்ச்சுனா! உன்மகன் என் பாதையைத் தடை செய்கிறான். அவனை அழைத்துக் கொள்!

**துரி:** பிதாமகனே! தாங்கள் என்படைத் தளபதியா அல்லது பாண்டவர் படைத் தலைவரா? தேர்ப்பாகனே! பிதாமகர் அருகே இரதத்தை ஒட்டிச் செல்!

**பீஷ்ம:** மகனே! மகனே! உன்னுடைய மரணத்துக்கு நான் காரணமாக இருக்க முடியாது! அஸ்தினாபுரத்தின் எதிர்காலம் பாதுகாப்பான கரங்களுக்குச் சென்று விட்டதெனக் கண்டால் உன்னுடைய கணையினாலே நான் உயிர் துறந்து விடவும் தயங்கமாட்டேன். உன்னுடைய வீரத்துக்கு அதுவே பரிசாக அமைந்து விடும்!

**துரி:** அஸ்தினாபுரத்தின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு இந்த மரியாதை அறியாத சிறுவனை என் அம்புக்கு இரையாக்கி அவனுடலை தங்களுக்கு அர்ப்பணிக்கிறேன்!

**அபிம:** சித்தப்பா! தங்களை பார்க்க வேண்டுமென்று விரும்பினேன்! பார்த்தும் விட்டேன். தங்களை இக்கணமே வீழ்த்த என்னால் முடியும். ஆனால் என் பெரியப்பா பீமன் தங்களை குறி வைத்துள்ளமையினால், அவருக்கு இழிவு நான் தேடித்தரமாட்டேன்!

<u>பின்னணிப்பாடல்:</u>

**துரியோதனன் மார்பை துண்டாடத்தானன்று**
**அஞ்சா நெஞ்சன் பீமன் அருஞ்சபதம் தானெடுத்தான்**
**தன் தந்தை முன்பிறந்த தமையனவன் ஏற்றபணி**
**தான் முடிக்கலாகாதென தனயனவன் தான் தளர்ந்தான்!**
**பாஞ்சாலி தன் துகிலைப் பற்றிப்பறித்திடவே**
**படுபாதகன் புரிந்த பண்பற்ற செயலாலே**
**பாவையவள் சிகையவிழ்த்து சீவாதிருக்கின்றாள்**
**தோகையவள் துயர்துடைக்க பீமசேனனே துணிவான்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்




அருள் ஜுவலர்ஸ்
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
4 3 6 3 3 1
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4 3 3 6 8 6
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# தேர் வலம்

கண்டி மாநகர்- கட்டுக்கலை பிள்ளையார் கோவிலில் தேர்த்திருவிழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நான்கு புதிய சித்திரத் தேர்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. இத்தேர்களை மயிலிட்டியைச் சேர்ந்த- ஸ்தபதியான திரு. சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்கள் சிறப்பாக அமைத்திருந்தார்.

கண்டி மாநகர வீதிகளில் சித்திரத் தேர்கள் பவனிவரும் காட்சி.

# தருவது லியோ டெ





மேற்கிந்தியத் தீவுகள் அணியில் புயல் ஆட்டக்காரர் பிரைன் லாரா. உலகெங்கும் லாராவுக்கு எக்கச்சக்கமான ரசிகைகள்.

ஆனால், லாரா ரசித்து நேசித்தது லீசல் ரொவெடாஸிம் என்ற அழகியைத்தான்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்த மேற்கிந்திய தீவுகள் அணியோடு லாராவோடு ஒட்டியபடி வந்தார் லீசல்.

இருவரும் பிரிக்க முடியாத காதலர்களாகிவிட்டனர். லீசல் வீசிய காதல் பந்தில் லாரா அவுட்டாகிவிட்டார்.

இருவரும் விரைவில் திருமணம் செய்யப் போகின்றனர். ஜோடிப் பொருத்தம் பிரமாதம்.

திருமணத்திற்கு முன்னர் மேலும் சாதனை படைத்துவிட வேண்டும் என்று ஆவேசமாக ஆட நினைக்கிறார் லாரா. லீசலை நினைத்தபடி ஆடினால் ரன்கள் மலை போல குவியுமோ?

# என்ன இது?



படத்தில் இருப்பது என்னவென்று ஊகிக்க முடிந்ததா? உலகில் பிரேசில் நாட்டில் தோண்டியெடுக்கப்பட்ட உலக அதிசய தங்கக் கட்டிதான் இது.

# பாரு-பாரு டயரு பாரு!

இராட்சத டம்பர் ட்ரக் வண்டியை தயாரித்துவிட்டு டயருக்கு என்ன செய்யலாம் என்று பலத்த யோசனை.

டயர்தானே வேண்டும், நாம் செய்து தருகிறோம் என்று முன்வந்தார்கள் 'குட் இயர் ரயர் அன் றபர் கோ' கம்பனியினர்.

முயற்சி திருவினையாகியது. 3.65 மீற்றர் விட்டமும் 12500 இறாத்தல் எடையும் கொண்ட டயர் ரெடியாகியது.

உலகில் மிகப் பெரிய டயர் என்ற பெருமையோடு 'கின்னஸில்' இடம்பிடித்துக் கொண்டது.



# சின்னதாய் வெறிக்கும்!





கடுகு சிறிது காரம் பெரிது என்பது பொருத்தமான சமாச்சாரம் இது. மகா மகா குட்டிப் போத்தலுக்குள் என்ன இருக்கு? வெறி தரும் விஸ்கி இருக்கு. பெயர், 'வைற் ஹோர்ஸ் ஸ்கொட்ச் விஸ்கி'. வாடிக்கையாளர்களை கவரும் இந்த சிறிய போத்தலின் உயரம் 2 அங்குலம் மட்டும். 1.03 மில்லி லீற்றர் விஸ்கியை அடைக்கலாம். உலகிலேயே மிகச் சிறிய போத்தல் இதுதான். 12 போத்தல் ஒன்றாய் சேர்த்தால் விலை 7 பவுண்ஸ்.

மது வெறிக்கும். இது வியக்கவைத்து வெறியூட்டும்.

# ஹொரா வி ஆ ட்



அழகான உடல் பணம் கொட்டுகிறது. மாடல் அழகிகளுக்கு உடல்தான் தெய்வம்.

படத்தில் இருப்பவர் அழகி லைபா கட்டான உடல். அமெரிக்காவின் பிரபல சஞ்சிகைகளுக்கு இவர்தான் அட்டைப்பட நாயகி.

வருட வருமானத்தைக் கேட்டால் தலை சுற்றும். 60 இலட்சம் அமெரிக்க டொலர்கள்!

தற்போது ஹொலிவூட் தயாரிப்பாளர்கள் இந்த அழகியை படத்தில் நடிக்க வைக்க பண மழையைப் பொழிய வைத்துள்ளனர்.

சஞ்சிகைகளில் மின்னியவர் வெள்ளித்திரையில் மின்னலாய் வந்து வில்லாய் உடலை வளைக்கப் போகிறார்.

உலகிலேயே உடல் அழகால் அதிகம் சம்பாதிக்கும் 'முக்காபலா' அழகி இவர்தான்.

அரை நிர்வாண போஸ் கொடுத்து வழக்கொன்றிலும் இவர் சிக்கியிருக்கிறார்.